

வைகை
நதியோரம்
கலைவாணி சொக்கலிங்கம்

# வைகை நதியோரம்...

கலைவாணி சொக்கலிங்கம்

அருண் பதிப்பகம்
107/8, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : வைகை நதியோரம்... |
| ஆசிரியர் | : கலைவாணி சொக்கலிங்கம் |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| மொழி | : தமிழ் |
| முதல் பதிப்பு | : ஜூன், 2010 |
| தாள் | : 11.6 kg. வெள்ளைத் தாள். |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 316 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அருண் பதிப்பகம்<br>107/8, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014. |

**விலை: ரூ.120.00**

| | |
|---|---|
| கணினி அச்சு | : வேலன் லேசர் - 94441-01753 |
| அச்சிட்டோர் | : எஸ்.எஸ்.கிராபிக்ஸ்,<br>சென்னை-14. |


# வைகை நதியோரம்..

# வைகை நதியோரம்...

## 1

மண்டபம் முழுவதும் கூட்டம் நிரம்பி வழிந்தது. பட்டும் நகையுமாய் பெண்கள் கூட்டமும் கோட் சூட்டுமாக மேல்தட்டு வர்க்க ஆண்கள் கூட்டமும் கையில் சரிகைத் தாளால் சுற்றப்பட்ட பரிசுப் பொட்டலத்தோடு வந்த வண்ணம் இருந்தனர்.

கூட்டத்தினரின் தேவைக்கேற்ப சூடான காபி ஒருபுறமும் குளிர்பான பாட்டில்கள் ஒருபுறமும் விநியோகிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. வரவேற்பிற்கென நின்றிருந்த பெண்கள் வருகிறவர்களைப் பன்னீர் தூவி சிரித்த முகமாய் வரவேற்றுக் கொண்டிருக்க, அவர்

களுக்கு சற்று தள்ளி தவிப்பாய் நின்று கொண்டிருந்தார் மீனாட்சிசுந்தரம்.

மேல் அங்கவஸ்திரத்தால் நெற்றி வியர்வையை ஒற்றிக்கொண்டே தனது செல்போனில் யாரையோ பிடிக்க முயன்று கொண்டே இருந்தார். பயனின்றி போகவே வாசலில் வந்து நின்ற கார்களையும் பைக்குகளையும் ஆவலாய் பார்ப்பதும் ஏமாறுவதுமாய் நின்று கொண்டிருந்தவரை உள்ளேயிருந்து பட்டு வேஷ்டி தடுக்க அதை சற்று தூக்கிப்பிடித்தவாறே வந்த ராஜசேகரன் நெருங்கி வந்தார்.

''என்ன சம்பந்தி உங்களை எங்கெல்லாம் தேடுறது. ஐயர் அவசரப்படுத்துறார். சீக்கிரம் வாங்க'' - என்றார்.

''இல்லே சம்பந்தி! ஒரு முக்கியமான போன். உள்ளே மேளச் சத்தத்தில பேச முடியல. அதான் வெளிய வந்தேன்'' - பதிலளித்த போதும் கண்கள் வாசலையே நோக்க,

''என்ன சம்பந்தி, யாரேனும் முக்கியமானவங்களை எதிர்பார்க்கிறீங்களா. நமக்கு நேரமாகுதே'' - அவசரப் படுத்தினார் ராஜசேகரன்.

''ஒரு அஞ்சு நிமிஷம் சம்பந்தி. நீங்க வந்தவங்கள கவனிங்க. நான் ஒரே ஒரு போன் பண்ணிட்டு வந்திடுறேன்.''

''ஓ.கே. சீக்கிரம் வாங்க'' - என்றவாறு காரில் வந்து இறங்கிய செல்வந்தரை அணைத்து வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றார்.

வியர்வை ஆறாய் பெருக அதை துடைக்கக்கூடத் தோன்றாமல் மீண்டும் செல்போனை உயிர்ப்பித்து அதே



எண்ணைத் தொடர்பு கொள்ள ஸ்விட்ச் ஆப் செய்யப் பட்டுள்ளதாக வந்த அந்த பதிலில் தளர்ந்து போனார் மீனாட்சி சுந்தரம். ஸ்பீக்கரில் ஒலித்துக் கொண்டிருந்த மேளமும் நாதஸ்வர இசையும் திடும் திடும் என அவரது இதயத்தில் மோதியது. வந்தவர்களைக் கடமையாய் தலையசைத்து வரவேற்றாலும் உள்ளம் பந்தயக் குதிரையாய் எகிறி ஓடியது. 'என்ன செய்யப் போகிறேன்? எப்படி சமாளிக்கப் போகிறேன்? எப்படிச் சொல்வது? இனி எப்படி நான் தலை நிமிர்ந்து நடக்கப் போகிறேன். இறைவா என் உயிரை இப்போதே பறித்துக் கொள். என்னால் முடியாது. மானத்தை இழந்து என்னால் உயிர்வாழ முடியாது. என்னை எடுத்துக் கொள் இறைவா. என்னை எடுத்துக் கொள்.'

''அப்பா... அப்ப்பா...'' - தோளைப் பற்றி உலுக்கினாள் தாமரை. திடுக்கிட்டு நிமிர்ந்தார். ''என்னப்பா இது. அங்கே எல்லாரும் உங்களைக் கூப்பிடுறாங்க. நீங்க என்னன்னா வாசல்ல நின்னு கனவு கண்டுட்டு இருக்கீங்க. வாங்கப்பா'' - கைபற்றி அழைத்த மகளை புதிதாய்ப் பார்த்தார். இத்தனை நாள் பாவாடை தாவணியும் சுரிதாரிலுமாய் பார்த்த மகள் இன்று பட்டுப்புடவை அணிந்து அளவாய் நகைகளை அணிந்து தலை நிறைய பூச்சூடி நின்ற கோலம் அவரை திணற வைத்தது. அப்படியே மணப்பெண் போலவே காட்சியளித்த மகளை விழியெடுக்க மனமின்றி பார்த்துக் கொண்டிருந்தவரை மீண்டும் உலுக்கினாள் தாமரை.

''என்னப்பா திரும்பவும் ப்ரீஸாகிட்டீங்க. என்னாச்சு உங்களுக்கு? இப்பத்தான் புதுசா பார்க்கிற மாதிரி பார்க்குறீங்க?''

''இல்லம்மா. இன்னிக்குத்தானே புடவையில பார்க்கிறேன். அப்படியே கல்யாணப் பொண்ணு மாதிரியே இருக்கியேம்மா. ஆமா உனக்கும் வயசு இருபத்தி ரெண்டு ஆகுதில்ல. நான் உன்னை இன்னும் சின்னப் பொண்ணாவே நினைச்சிட்டு இருக்கேம்மா. ஏம்மா நீ... நீ கல்யாணம் பண்ணிக்கிறியாம்மா'' - தந்தையை வியப்பாய் நோக்கினாள்.

''அப்பா! என்னாச்சுப்பா உங்களுக்கு? இப்ப நடக்கப் போறது அக்கா கல்யாணம். அதுக்கு நேரமாகுதுன்னு உங்களைக் கூப்பிட்டா நீங்க எப்பவோ நடக்கப் போற எங்கல்யாணத்தைப் பத்தி இத்தனை சாதாரணமா கேட்டுட்டு நிக்கிறீங்க. உள்ளே வாங்கப்பா. முகூர்த்த நேரம் முடியப்போகுதாம். அக்காவும் இன்னும் மேக்-அப் முடிஞ்சு வெளியே வந்தபாடில்லை. அவளையும் கூப்பிடணும். வாங்கப்பா'' - கை பற்றிக் கொண்டு நடந்தவளை நிறுத்தினார்.

தூணோரமாய் நகர்த்திக் கொண்டு போய், ''இதோ பாரும்மா. அப்பா நிஜமாவே சீரியஸாத்தான் கேட்கிறேன். நீ கல்யாணம் பண்ணிக்கிறியா? உனக்கு சம்மதமா? இல்லே வேற யாரையும் விரும்புறியா? எதுவா இருந்தாலும் சொல்லும்மா'' - என்றார்.

ஆச்சர்யமாய் நிமிர்ந்தாள். ''என்னப்பா! யாராவது என்னைப் பெண் கேட்டார்களா? அப்படியே கேட்டாலும் அதைப் பிறகு பொறுமையாய் பேசிக் கொள்ளலாம். முதலில் இப்போ ஆக வேண்டிய வேலையைப் பார்ப்போம். வாங்க.''

''இல்லம்மா. எனக்கு இப்போதே முடிவு தெரிய வேண்டும்'' - பிடிவாதமாய் நின்றார்.



''அப்பா! சரி ஓ.கே. உங்களுக்கு என்ன தெரிய வேண்டும்? என் மனசில வேற யாரும் இல்லை. உங்களுக்குத் தெரியாம நான் எந்த முடிவும் எடுத்ததில்லையேப்பா. வேலைக்கு சேர்ந்து ஆறு மாசம்தானே ஆகுது. இன்னும் ஒரு மூணு வருஷம் நான் வேலைக்குப் போய் சம்பாதித்து உங்களுக்கு உதவியா இருக்கேன். அதுக்கப்புறம் நீங்க எந்த மாப்பிள்ளையைப் பார்த்தாலும் சரி. ஒரு வார்த்தை மறுத்துப் பேசாம கழுத்தை நீட்டுவேன்.''

''கடைசி வார்த்தையை திரும்பச் சொல்லும்மா.''

''நீங்க எந்த மாப்பிள்ளையைப் பார்த்தாலும் சரி. ஒரு வார்த்தை மறுத்துப் பேசாம கழுத்தை நீட்டுவேன். போதுமா. இப்ப போலாமா'' - புன்சிரிப்போடு கேட்டவளின் கைகளைப் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டார்.

''என் குலவிளக்கே. உன் கையிலதாம்மா இந்த தகப்பனோட மானம் மரியாதை உசுரு எல்லாம் இருக்கு. என்னைப் பெற்றவளே என்னைக் கைவிட்டுடாதே தாயே. இப்ப நடக்கப் போற கல்யாணத்திற்கு நீதாம்மா மணப்பொண்ணு. உங்க அக்கா நம்ம மேல சேற்றை வாரியிறைத்துவிட்டுப் போயிட்டாம்மா. எந்தாயீ நீயும் மறுத்திடாதேம்மா. நான் செத்தே போயிடுவேம்மா. நீ சொல்ற வார்த்தையில தாம்மா நம்ம குடும்ப கௌரவமே அடங்கியிருக்கு. இந்த மாப்பிள்ளையை உனக்குப் பிடிச்சிருக்காம்மா? கட்டிக்கிறியாம்மா? சொல்லு தாயீ'' - அப்பா கண்களில் வழியும் கண்ணீரோடு பேசிக் கொண்டே போக தாமரை பேச்சற்றுப் போய் சிலையாய் நின்றாள்.

நேற்று இரவு வரை கலகலப்பாகத்தானே இருந்தாள் அக்கா. அதிகாலையில் எழுந்து மேக் - அப் முடியும்

வரை தன்னை யாரும் டிஸ்டர்ப் பண்ண வேண்டாம் என்று சொல்லிவிட்டுத்தானே அறைக்குள் சென்றாள். பிறகு எப்படி இது நடந்தது. வந்தவர்களை வரவேற்றும் உபசரித்துக் கொண்டும் இருந்ததில் இவை எதையும் கவனியாமல் விட்டு விட்டோமே. கடவுளே! ஊரே கூடியிருக்க முகூர்த்த நேரம் நெருங்கிக் கொண்டிருக்கும் இந்த வேளையில் பெண் மாறினால் மற்றவர்கள் எப்படி ஏற்றுக் கொள்வார்கள்? மாப்பிள்ளை வீட்டார் இதற்கு ஒத்துக் கொள்வார்களா? பேசி நாறடித்து விடமாட்டார்களா? ஐயோ! அப்பாவால் எப்படித் தாங்கிக் கொள்ள முடியும். பாவி. என்ன காரியம் செய்து விட்டுப் போய் விட்டாள். எங்கு போனாள்? ஏன் போனாள்? மாப்பிள்ளை என்ன நினைப்பார்? நம் குடும்பத்தையே கேவலமாக நினைக்க மாட்டாரா. ஐயோ! என்னை.. என்னை எப்படி மணக்க சம்மதிப்பார். தொண்டை கமற,

''அப்பா! நான் சம்மதிப்பது இருக்கட்டும். மாப்பிள்ளை... அவர் சம்மதிப்பாரா அப்பா'' - தந்தையை நோக்கிக் கேட்டாள்.

## 2

''நோ! என்ன விளையாடுறீங்களா? என்னைப் பார்த்தால் எப்படித் தெரிகிறது உங்களுக்கு. நேற்று இரவு வரை உங்கள் பெண்ணோடு ரிசப்ஷன் நடந்திருக்கிறது. இப்போது விடிந்த பின் மற்றொரு பெண்ணோடு திருமணமா? நெவர். டாட் வாங்க கிளம்புவோம்'' - மணமகன் அறையில் புயலாய் சீறினான் சூர்ய பிரகாஷ்.



அவனது சிவந்த முகம் கோபத்தில் செந்தீயாய் தோன்ற தாமரை அரண்டு போனாள்.

''இதோ பாருப்பா சூர்யா. கோபப்படாதே. கொஞ்சம் நிதானமா யோசி. பாவம் அந்தப் பொண்ணு செய்த தப்புக்கு இவர் என்ன செய்வார்? ஊரே கூடியிருக்கு. இன்னும் கால் மணி நேரம் தான் இருக்கு. அதுக்குள்ளே கல்யாணம் நடந்தாகணும். இல்லேன்னா விஷயம் வெளியே தெரிந்து ஆளாளுக்கு கண்டபடி பேசுவாங்க. இந்தப் பொண்ணுக்கு என்னடா குறை? மகாலட்சுமியாட்டம் இருக்கிறா. ஒத்துக்கப்பா'' - விசாலாட்சி மென்மையாய் கூற, ''அம்மா! என்ன பேசுறீங்க நீங்க? சட்டைய மாத்தற மாதிரி பொண்ணை மாத்துறது சரியா? என் மனநிலையை யோசிக்க மாட்டீங்களா? நோ. என்னால முடியாது. நேற்று ஈவினிங் அவகூட நின்னு சிரிச்சுகிட்டு போட்டோவுக்கு போஸ் கொடுத்துட்டு இப் இவளோட ச்சே... அசிங்கமா இருக்குதும்மா'' - கோபத்தில் வெடித்தான்.

கண்களில் நீர் கோர்த்துக் கொள்ள, ''அப்பா! இந்தப் பேச்சையெல்லாம் கேட்பதைவிட உண்மையை மற்றவர்களிடம் சொல்லி கல்யாணத்தை நிறுத்திடலாம்ப்பா. அவங்க பேசுறத கேட்டுக்கலாம். ஏன்னா தப்பு நம்ம பக்கம் இருக்கும்போது தண்டனையை நாமதான் அனுபவிக்கணும். அதை மத்தவங்க மேல சுமத்தக்கூடாது. வாங்கப்பா போலாம்'' - தந்தையை அழைத்துக் கொண்டு வெளியேற முயன்றவளைத் தடுத்தார் ராஜசேகரன்.

''ஒரு நிமிஷம் நில்லும்மா. டேய் சூர்யா. பாருடா ஒரு சின்னப் பொண்ணு எத்தனை தெளிவா நிதானமா முடிவெடுக்குது. நீயானா பெரிய நிர்வாகத்தையே கட்டி

ஆள்பவன். உனக்கு ஏன்டா மூளை செயல்பட மறுக்குது. இது சாதாரண விஷயம் இல்லைதான் ஒத்துக்கிறேன். ஆனா நடந்து முடிந்ததைப் பத்தி இனி பேசிப் பயனில்லை. நீயே யோசி. எவ்வளவு செலவு பண்ணி இத்தனை ஏற்பாடு செய்து அத்தனை உறவுகளையும் அழைத்து கடைசியில் திருமணம் நின்றால் அது எவ்வளவு பெரிய பாதிப்பு என உனக்குப் புரியவில்லையா? இனி அவர் எப்படி வெளியே நடமாடுவார்? பாவம்ப்பா. பெண்ணைப் பெற்றவர். எப்படி நிமிர்ந்து திருமண வேலைகளை ஓடியாடிச் செய்தவர் இதோ பார் எப்படி ஒடுங்கிப் போய்விட்டார் என்று.

''அதோடு இந்தச் சின்னப் பெண்ணின் நிலையும் தான் இனி என்ன ஆகும்? இனி யார் வந்து இவளைப் பெண் கேட்பர்? பாவம்ப்பா. நம்மால ஒரு பெண்ணோட வாழ்வு கெட வேண்டாம். சம்பந்தி ரொம்ப நல்ல வருப்பா. அதனாலதான் தன் அண்ணன் மகளை தன் மகளாய் கருதி வளர்த்திருக்கிறார். அந்தப் பெண் இவர் முகத்தில் கரியைப் பூசி விட்டாள். அதற்கு இவர் என்ன செய்வார் பாவம். நம்மால் இந்தப் பிரச்சனையை சுலபமாய் தீர்க்க முடியும் என்பதால் சொல்கிறேன். முதலில் திருமணம் நடக்கட்டும். திருமணம் முடிந்தவுடன் நீங்கள் சென்னைக்குப் போய் விடுவீர்கள். நானும் உன் அம்மாவும் நியூயார்க் போய்விடுவோம். பிறகேன் கவலைப்படுகிறாய்? உன்னிடம் யார் வந்து கேள்வி கேட்கப் போகிறார்கள்? அப்படியே நெருங்கிய உறவினர்கள் கேட்டாலும் பதில் சொல்லிக் கொள்ளலாம். நல்ல வேளையாய் பத்திரிகையில் போட்டோ போடவில்லை. அதுவும் நல்லதிற்குத்தான். என்ன சொல்கிறாய் சூர்யா?'' - மகனிடம் கேள்வியாய் நிறுத்தினார்.



நெற்றியைப் பற்றிக் கொண்டு கட்டிலில் அமர்ந்தான் சூர்யா. ''நீங்கள் என்ன சொன்னாலும் என் மனம் ஒப்பவில்லை அப்பா. என்னைப் பிடிக்காமல் ஓடிப்போனவளின் தங்கையைக் கட்டிக் கொண்டு அவளுடன் எப்படியப்பா முழு மனதோடு மனமொன்றி வாழ முடியும்? இவளைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு அவள் என்னை ஏமாற்றியது தானே நினைவில் வரும்? வேண்டாம்ப்பா. வாழ்க்கை கொடுக்கிறேன் என்று இந்தப் பெண்ணின் வாழ்வையும் அழித்து நானும் நிம்மதியின்றி வாழ முடியாது. எனக்கு இந்தக் கல்யாணம் வேண்டாம். ப்ளீஸ் நிறுத்திடுங்க. எல்லாத்தையும் நிறுத்திடுங்க'' - பேசிக் கொண்டிருந்தவன் தடாலென்ற ஓசையில் நிமிர்ந்தான்.

நெஞ்சைப் பற்றிக் கொண்டு கீழே விழுந்திருந்தார் மீனாட்சி சுந்தரம். முகமெல்லாம் வியர்த்துக் கொட்ட வலியால் முகம் சுருக்கி முனகினார். ''அப்பா'' - வீறிட்டாள் தாமரை.

சூர்யா விரைந்து நீர் தெளிக்க, ராஜசேகரன் வெளியேறி ஓடி திருமணத்திற்கு வந்திருந்த மருத்துவ நண்பரை அழைத்துக் கொண்டு வந்தார்.

''அப்பா ப்ளீஸ்! என்னைத் தனியா தவிக்க விட்டுட்டுப் போயிடாதீங்கப்பா, அப்பா! அப்பா. எனக்குன்னு யாருமே இல்லப்பா. அப்பா கண்ணைத் திறந்து பாருங்கப்பா. அக்கா போனால் என்ன? இந்தத் திருமணம் நின்று போனால் என்ன? நானிருக்கிறேன் அப்பா. எழுந்திருங்கள் அப்பா. எனக்காக நீங்களும் உங்களுக்காக நானும் வாழலாம் அப்பா. கண்ணு திறங்கப்பா. என்னை ஏமாத்திடாதீங்கப்பா'' - தாமரை துடித்த துடிப்பு அனைவரின் கண்களையும் கலங்க வைத்தது. மீனாட்சி சுந்தரம்

மூச்சுவிடத் திணறி கண்கள் செருகினார். ''ராஜசேகரா! சிவியர் அட்டாக். எதுக்கும் உடனே ஹாஸ்பிடல்ல அட்மிட் பண்ணிடலாம்'' - என்ற டாக்டரை கைபற்றிக் கொண்டு மறுப்பாய் தலையசைத்தார் மீனாட்சி சுந்தரம்.

''வே... வேண்டாம்... எம்...பொண்ண... கல்...யாணம் நின்னு போச்சு...'' நாக்கு வறண்டு ஒட்டிக் போச்சு... மார்பில் சாய்ந்து கதறிய மகளை அணைத் கொண்டது. ''இனிமே எப்படிம்மா உன்னை... கட்டிக் துக் கொண்டார். நான்... எப்படி...'' - கண்ணீர் பெருக் கொடுப்பேன்... மூச்சை வாய்வழியே விட்டார். பார்த்துக் கெடுத்து ஓட ராஜசேகரன் பொறுக்க முடியாமல் கொண்டிருந்த எழுந்து சுவரில் மாட்டியிருந்த மாலையை சட்டென கழுத்தில் போட்டார். திடுக்கிட்டவனைப் எடுத்து மகன் கழுத்தில் போட்டார். ''இப்போ உனக்கும் தாமரைக் பார்வையால் எச்சரித்து. ''இப்போ உனக்கும் தாமரைக் கும் கல்யாணம். சம்பந்தி உங்க மக திருமணத்தைப் பார்க்கலாம் வாங்க'' - கைபற்றி தூக்கினார் ராஜசேகரன்.

## 3

அக்னி சாட்சியாக வேத மந்திரங்கள் முழங்க பூ தூவி உறவினர்கள் வாழ்த்த இயந்திரத்தனமாக தாமரையின் கழுத்தில் பொன் தாலி பூட்டினான் சூர்யபிரகாஷ். கழுத்தைச் சுற்றியிருந்த கைகளில் பொட்டென இரு துளிகள் தாமரையின் கண்களிலிருந்து விழுந்தது. சட்டென கைகளை எடுத்துக் கொண்டான். ''மாலை மாற்றி அக்னியை வலம் வந்து மணப்பெண்ணின் நெற்றியில் இந்த குங்குமம் வையுங்கோ'' - என ஐயர் சொன்னதும்



முதலில் தயங்கி பின்னால் இருந்து இடித்த அன்னை யின் தூண்டுதலில் துளி குங்குமம் எடுத்து முதன் முதலாய் நிமிர்ந்து தாமரையைப் பார்த்தான்.

பெயருக்கேற்றாற் போல் தாமரை போன்ற பூ முகம். அழுது சிவந்ததில் செந்தாமரையாய் மாறியிருந்தது. அந்தப் பிறை நெற்றியில் விரல் நடுங்க குங்குமம் இட்டான். ''பெத்தவா கால்ல விழுந்து நமஸ்காரம் பண்ணுங்க'' விழுந்தார்கள். ராஜசேகரனும் விசாலாட்சியும் அட்சதை தூவி வாழ்த்த, நாற்காலியில் ஓய்ந்து அமர்ந்திருந்த மீனாட்சி சுந்தரம் தன் கண்ணீரையே அட்சதையாய் தூவி மனதார வாழ்த்தினார். உறவினர் கூட்டம் கூடி பரிசுப் பொருளோடு மேடையை நெருங்க ''சம்பந்தி, பொண்ணு கல்யாணத்தைக் கண் குளிர பார்த்தாச்சு. இனிமேலாவது வாங்க ஹாஸ்பிடலுக்குப் போகலாம்'' என அழைத்தார் ராஜசேகரன்.

''இல்ல சம்பந்தி. இப்போ பரவாயில்லை. என்னால மூச்சு விட முடியுது. எம் பொண்ணு கழுத்துல தாலி யேறின உடனே புது தெம்பு வந்திடுச்சு. இனிமே எனக்கு ஒண்ணும் ஆகாது சம்பந்தி. எம் பேரன் பேத்திகளைப் பார்க்காம நான் கண்ணை மூட மாட்டேன். கொஞ்சம் சோர்வா இருக்கு. வந்தவங்களைத்தான் ஓடியாடி கவனிக்க முடியல்ல'' - மீனாட்சி சுந்தரத்தின் வார்த்தைகள் சூர்யாவின் கோபத் தீயில் ஊற்றிய எண்ணெயானது. வெறுப்பும் அருவருப்புமாய் முகம் சுளித்தான். 'வயதானவர் என்று நினைத்தோமே. எத்தனை அழகாய் நாடகமாடி திருமணத்தை முடித்துவிட்டார். அப்பனே இப்படி என்றால் மகளைப் பற்றி கேட்கவா வேண்டும்ச்சே! எப்படிப்பட்ட குடும்பத்தில் நம்மை சிக்க வைத்

விட்டார் அப்பா. மெத்தப் படித்தும் அயல் நாட்டில் தொழில் புரிந்தும் இந்த அப்பா இத்தனை ஏமாளியாய் இருந்து விட்டாரே. எப்படிப்பட்ட ஏமாற்று வேலை இது.'

''ஸார்! கொஞ்சம் மேடத்தோடு பக்கத்துல நெருங்கி வாங்க. ஒரு க்ளோஸ் அப் ஹாப் சைஸ்ல எடுத்திடலாம்'' என்ற போட்டோ கிராபரை எரித்து விடுபவன் போல் முறைத்தான்.

''நீ போட்டோ எடுத்துக் கிழித்தது போதும். கிளம்பு. போட்டோ வீடியோ எதுவும் பிரிண்ட் போட வேண்டாம். அத்தனையும் எரேஸ் பண்ணிடு. அப்பா கிட்ட செட்டில்மெண்ட் பணத்தை வாங்கிட்டுப் போ. ஏய் உங்கிட்டத்தான் சொல்றேன் போடா'' அவன் போட்ட கூச்சலில் பதறி விலகி போட்டோகிராபர் சென்றுவிட தாமரையின் உடல் மொத்தமும் நடுங்கியது.

'என்ன நினைத்து அப்பா இந்தத் திருமணத்தை நடத்தினார். இது எப்படி சரியாக வரும். இரு மனங்கள் இணைவதுதானே திருமணம். முழுக்க முழுக்க வெறுப்பை மட்டுமே காட்டும் இவருடன் எப்படி மனம் இணைந்து தன்னால் வாழ முடியும். இறைவா. இது நீ போட்ட முடிச்சு. ஆயுசுக்கும் பிரியாம நீதான் காக்க வேண்டும். அப்பாவைப் பிழைக்க வைத்த நீ நான் நன்றாக வாழ்வதை அப்பா பார்த்து மகிழ ஆசி வழங்க வேண்டும். என்ன தான் கட்டாயக் கல்யாணம் என்றாலும் இனிமேல் ஒன்றாக வாழ்ந்துதானே ஆகவேண்டும். இவரது கோபமும் வெறுப்பும் மறைந்து என்னை முழுமனதோடு ஏற்றுக் கொள்ளும்வரை எனக்குப் பொறுமையையும் நிதானத்தையும் சகிப்புத் தன்மையையும் கொடு. இவரோடு நான் வாழும் வாழ்க்கையில் தான் அப்பாவின் நிம்மதியும்



ஆரோக்கியமும் உள்ளது. அதற்காகவேனும் நான் வாழ்ந்தாக வேண்டும். அவருக்குப் பிடித்தமாக நான் நடந்து கொள்ள வேண்டும்.'

''அம்மாடி! சூர்யா காருக்குப் போயிட்டான். எழுந்து வாம்மா'' - விசாலாட்சி தோளைப்பற்றி எழுப்ப பதறி எழுந்தாள் தாமரை. போய்விட்டாரா? எத்தனை திருமணங்களில் பார்த்திருக்கிறோம். மணமக்கள் கைகளைக் கோர்த்துக் கொண்டு கழுத்திலுள்ள மாலைகளிலிருந்து பூக்கள் உதிர்ந்து சிதற நாணமும் வெட்கமுமாய் மணமகனின் பின்னால் செல்லும் மணப் பெண்கள் எத்தனை பூரிப்பாய் பெருமிதமாய் செல்வார்கள். இன்று நான்.. மௌனமாய் மாமியாரின் பின்னே சென்றாள் தாமரை. வாசலில் பூக்களால் அலங்கரிக்கப்பட்ட காரில் முன் இருக்கையில் அமர்ந்திருந்தான் சூர்யா. அலட்சியமோ கோபமோ. முகம் கடுகடுவென்றிருந்தது. ''டேய்! நீ பின் சீட்டுக்கு வா. பொண்ணு பக்கத்துலதான் உட்காரணும்'' என்ற அம்மாவிடம் ''ஆமாமா. இங்கே எல்லாம் ரொம்ப ஒழுங்காத்தான் நடக்குது. நீங்களே உட்காருங்க'' - என்றான் சலிப்பாய்.

குபுக்கென கண்ணீர் எட்டிப் பார்த்தது. மென்று முழுங்கிக் கொண்டாள். ''நீ தப்பா எடுத்துக்காதேம்மா. விடிஞ்சா எல்லாம் சரியாப் போயிடும்'' - தாமரையின் காதிற்குள் கிசுகிசுத்தாள் விசாலாட்சி. மௌனமாய் காரினுள் ஏறிக் கொள்ள கார் புறப்பட்டது. தாமரையின் காதினுள் மாமியார் ஓதிய வார்த்தை வயிற்றில் புளியைக் கரைத்தது. திருமண மேடையில் அத்தனை கூட்டத்தின் நடுவே போட்டோ எடுப்பவனிடம் எரிந்து விழுந்தவன்.

வாசலில் தாயின் முன்னே வெறுப்பை அப்பட்டமாய் சொன்னவன். அவனுடன் ஒரே அறையில்.. தனிமையாகவா... நினைக்கையிலேயே உடல் குலுங்கியது. இன்னும் எத்தனை கண்டங்களைத் தாண்டுவது? முதன் முறையாய் பயம் தாமரையை முழுதாய் ஆக்ரமித்துக் கொண்டது.

நேற்று இந்த நேரம் அவள் இருந்த கலகலப்பு என்ன? தோழிகளுடன் சேர்ந்து அக்காவிடம் செய்த ஆர்ப்பாட்டம் என்ன? சுசித்ராவும் தான் எத்தனை அழுத்தக்காரி. நேற்று இரவு வரை ஒரு முகமாற்றம். ஒரு மறுப்புத் தயக்கம். எதையுமே வெளிக்காட்டவில்லையே. அவள் மனதில் அப்படி யார் இருந்தார்? யாராக இருந்தாலும் அதை மறைக்க வேண்டிய அவசியம் இல்லையே. அவள் விஷயத்தில் அப்பா எந்த மறுப்பும் சொல்லப் போவதில்லை. சிறு வயதிலேயே தாயை இழந்த பெண் என்ற முறையில் சுசித்ராவின் மேல் அப்பாவிற்கு தனி பிரியம். அதுவும் தன் அண்ணன் இன்னொரு பெண்ணை மணந்து கொண்ட பின் சுசித்ராவிற்கு தகப்பனாகவே மாறி விட்டார் அப்பா. சிறிய அன்னையைக் கண்டாலே அலறுவாள் சுசித்ரா. அவள் பயத்தைப் போக்க தன் வீட்டில் உறங்கச் செய்தார். பிறகு சாப்பிட குளிக்க தூங்க என எல்லாமே சித்தப்பா வீடு என்றாகிப் போக சித்தப்பா மறைந்து அப்பா ஆகிப்போனார். தன்னைவிட நான்கு வயது பெரியவள் என்றாலும் தன்னிடம் போட்டியிடும் சுசித்ராவிற்காக எல்லாவற்றையும் விட்டுக் கொடுத்து விடுவாள் தாமரை. சென்ற பிறந்த நாளின்போது அப்பா எடுத்துத் தந்த கருநீல பட்டுப்புடவை தனக்குத்தான் வேண்டும் என்று ஒற்றைக்காலில் நின்று அதை வாங்கியும் விட்டாள்.



''தாமரை! அப்பா கையில இப்ப சுத்தமா காசு இல்லையேம்மா. உனக்கு புதுத்துணி எடுக்க முடியலையே'' - தயங்கி நின்றவரிடம்,

''பரவாயில்லப்பா. அக்கா இதை கட்டிக்கட்டும். அக்காவுக்கு எடுத்த பச்சைக் கலர் பட்டுப் புடவைய நான் கட்டிக்கிறேன்'' - சாதாரணமாகத்தான் சொன்னாள் தாமரை.

''அதெப்படி! அது எனக்காக எடுத்த புடவை. எவ்வளவு பெரிய ஜரிகை பார்டர். அதையெல்லாம் தர முடியாது. நீ வேற ட்ரெஸ் போட்டுக்கோ'' - என்றவாறு இரண்டு புடவைகளையும் தன் அறைக்கு எடுத்துப் போய்விட்டாள்.

அப்பா முதன் முறையாய் பயந்தது அன்றுதான். என்ன பெண் இவள். ஆசைப்படலாம் தான். ஆனால் இது பேராசை அல்லவா. அடுத்தவரின் பொருள் மேல் ஆசைப்படுவது பெரிய தப்பாயிற்றே. தாயில்லாப் பெண். அண்ணனும் தனது குடும்பத்தோடு மனைவி ஊரோடு ஒதுங்கிப் போய் விட்டார். அதனால் அந்த வருத்தம் தெரியக்கூடாது என்று அவள் கேட்பதெல்லாம் விட்டுக் கொடுப்பது தவறோ என உறுத்த ஆரம்பித்தது.

மறுநாள் பிறந்த நாள் கொண்டாடிய தாமரை சாதாரண ஆடையை உடுத்திக் கொள்ள சுசித்ரா அந்த கருநீல பட்டுப் புடவையை உடுத்திக் கொண்டு ஊரையே வலம் வந்து கொண்டிருந்தாள். தன் பெண்ணின் முகத்தில் சிறு வருத்தமும் இல்லை என்றதில் மனம் நிறைந்தது.

படிப்பு விஷயத்தில் கூட. பள்ளிப் படிப்போடு நிறுத்திக் கொண்டாள் சுசித்ரா. ஆனால் மேற்படிப்பு படிக்க

ஆசைப்பட்டு தாமரை கல்லூரி செல்ல, அந்தப் படிப்பு செலவை ஈடு செய்யும் அளவில் தனக்கு நகை வாங்கிக் கொண்டாள். அவை எதற்குமே தந்தை மறுப்போ கோபமோ காட்டியதில்லையே. அப்படியிருக்கையில் யாரையேனும் விரும்பியிருந்தால் அப்பாவிடம் சொல்லியிருக்கலாம். அப்பா முழு மனதோடு மணமுடித்து வைத்திருப்பாரே. ஏன் அவள் அப்படிச் செய்யவில்லை. இது பச்சை துரோகம் அல்லவா. இந்தக் காரியம் எத்தனை பெரிய இழிவைத் தரும் என்று கூடவா அறியவில்லை. இப்போது எப்படி இருக்கிறாள். எங்கே இருக்கிறாள். யார் அவன்? எப்படி இருப்பான்? நல்லவனா, அக்காவை நன்றாக வைத்துக் கொள்வானா? பணம் படைத்தவனா? அக்காவும் சும்மா போகவில்லை. திருமணத்திற்கென போட்டிருந்த அம்பது சவரன் நகையும் அத்தனை துணிமணிகளையும் எடுத்துக் கொண்டு தான் போயிருக்கிறாள். எப்படி அத்தனை பேர் கண்களிலும் படாமல் மறைந்தாள்?

தன்னிடம் கூட ஒரு வார்த்தை சொல்லவில்லையே. கடவுளே. அவள் நன்றாக இருக்க வேண்டும். கயவர்களிடம் மாட்டியிருக்கக் கூடாது. நல்லவனாக இருந்து சந்தோஷமாக வாழ வேண்டும். அக்காவை ஏமாற்றி விடக் கூடாது. கண் மூடி வேண்டிக் கொண்டாள். அந்த நிலையிலும் அக்காவின் நலம் வேண்டி மன்றாடினாள். அவளால் எத்தகைய சூழலில் மாட்டிக் கொண்டோம். இன்னும் என்னென்ன துன்பங்களில் மூழ்கப் போகிறோம். சுசித்ரா தன் வாழ்க்கையில் என்ன புயலை வீசியடிக்கப் போகிறாள் என எதையும் அறிந்திருக்கவில்லை தாமரை. அவள் மனம் தன் சகோதரி நன்றாக இருக்க வேண்டுமே என இடைவிடாமல் வேண்டிக் கொண்டே இருந்தது.



## 4

"மாப்பிள்ளை! என்ன சொல்றீங்க. இப்பவே கிளம்பணுமா. ஒரு ரெண்டு நாள் இருந்து சடங்கு சம்பிரதாயங்களை முடிச்சிட்டு மீனாட்சி அம்மன் கோவிலுக்குப் போய் ஒரு அர்ச்சனை பண்ணிட்டுக் கிளம்பலாமே. மீனாட்சி அம்மன் கோவில்ன்னா தாமரைக்கும் ரொம்ப இஷ்டம். வாரந்தோறும் வெள்ளிக்கிழமை போயிடுவோம். பொற்றாமரைக் குளத்து படிக்கட்டுல உட்கார்ந்தா நேரம் போறதே தெரியாம உட்காருவா. அருமையான இடம் மாப்பிள்ளை. நீங்க கண்டிப்பா பார்க்கணும்." பேசிக் கொண்டே போன மீனாட்சிசுந்தரத்தை மேலும் கீழுமாய் பார்த்தான் சூர்யபிரகாஷ்.

காலையில் உயிருக்குப் போராடியவர் என்று கற்பூரம் அடித்தால்கூட நம்ப முடியாது. அத்தனை இயல்பாய் உற்சாகமாய் இருந்தார். எப்பேர்ப்பட்ட நடிப்பு? மூச்சு விட முடியாமல் தவிக்கையில் தன் உடல்கூட பதறிப் போனதே. இப்போது எத்தனை உற்சாகம். கோபம் தலைக்கேற வாயைத் திறந்தால் நிச்சயம் மரியாதையின்றி பேசி விடுவோம் என்று தெரிந்து வாயை திறக்கவேயில்லை. தாயைப் பார்த்து முறைத்தான்.

"தோ பாருப்பா! எல்லாம் நல்லபடியா முடிஞ்சது. ஒரு ரெண்டு நாள் இருந்துட்டுத்தான் போயேன். அங்குள்ள வேலைகளைப் பிரபு தாஸ் பார்த்துக் கொள்வான். அவசியம் என்றால் போனில் பேசிக் கொள். நாங்களும் நாளை மறுநாள் கிளம்பலாம் என்றிருக்கிறோம். எங்

களையும் வழியனுப்பிவிட்டுப் போகலாம். இன்று நல்ல நாள். இன்று இரவே...''

''அம்மா ஆஃ ஸ்டாப் இட். இன்னும் பதினைந்து நிமிடத்தில் நான் கிளம்ப வேண்டும். அவளும் வருவதாக இருந்தால் வரட்டும். இல்லை இங்கேயே உங்களுடன் இருக்கட்டும். நான் கிளம்பறேன்'' - எழுந்தான்.

''டேய்! சொன்னாக் கேளுடா. இப்பவே இருட்டிப் போச்சு. நீ கார்லயே போகலாம்னு சொல்ற. நைட் ட்ரைவிங் வேணாம்ப்பா. ஏற்கனவே கல்யாண அலைச்சல் அது இதுன்னு ரெண்டு நாளா நீ சரியாவே தூங்கல. கொஞ்சம் கண் அசந்தாலும் போச்சு. ரிஸ்க் வேண்டாம். இன்னிக்கு மட்டுமாவது தங்கிட்டுப் போப்பா'' - என்றார் ராஜசேகரன்.

''இன்னும் டென் மினிஸ்ட்தான் இருக்கு. நான் கார்ல வெயிட் பண்றேன். சரியா பத்தே நிமிஷம். யார் வந்தாலும் வராவிட்டாலும் நான் கிளம்பிவிடுவேன்'' - மேற்கொண்டு நில்லாமல் விடுவிடுவென வெளியேறி கார் கதவைத் திறந்து ஏறி படீரென அறைந்து சாத்தினான்.

''சம்பந்தி! மாப்பிள்ளை ரொம்பக் கோபமா இருக்காரே. எம் பொண்ணு பாவம் சின்னப் பொண்ணு. என்ன பண்ணுவா? ஐயோ நான் அவசரப்பட்டு விட்டேனா? மாப்பிள்ளைக்கு இத்தனை வெறுப்பு இருக்கும் என்று நான் நினைக்கவில்லையே. இப்போ நான் என்ன பண்ணுவேன்'' - நெஞ்சு படபடக்க கண்கள் கசியக் கேட்டவரை சமாதானம் செய்தார் ராஜசேகரன்.

''சம்பந்தி! நீங்க கவலைப்படாதீங்க. எம்பையனுக்கு இப்படிக் கோபமெல்லாம் வராது. இப்போ ரொம்ப அப்



செட்டா இருக்கான். ஏன்னா உங்க அண்ணன் பொண்ணு போட்டோவை பிரண்ட்ஸ்க்கெல்லாம் காட்டி சந்தோஷப் பட்டான். அவதான் தன்னோட மனைவின்னு முடிவே பண்ணியிருந்தான். இப்படி அந்தப் பொண்ணு பண்ணும்னு யாருமே நினைக்கலியே. அதில ரொம்பவே உடைஞ்சு போயிட்டான். எல்லாம் கொஞ்ச நாள்ல சரியாகிடும். எம்மருமக சரியாக்கிடுவா. எனக்கு நம்பிக்கை இருக்கு. நீங்களும் கவலைப்படாம தைரியமா பொண்ணை வழியனுப்பி வையுங்க. வீட்லதான் போன் இருக்கே அப்பப்போ பேசிக் கொள்ளுங்கள். என்னம்மா தாமரை சரியா?''

அமைதியாய் துணிமணிகளைப் பெட்டியில் அடைத்துக் கொண்டிருந்தவள் நிமிர்ந்து, ''சரி மாமா'' - என்றாள். ''கிளம்புறியாம்மா'' - என தயக்கமாகக் கேட்ட தந்தையைப் பார்த்துச் சிரித்தாள்.

''அதுதானேப்பா முறை. கல்யாணம்தான் முடிந்து விட்டதே. இனி வாழ்வோ தாழ்வோ அவருடன்தானே இருந்தாக வேண்டும். என்னைப் பற்றி நீங்கள் கவலைப் பட வேண்டாம் அப்பா. நான் சமாளித்துக் கொள்வேன். தினமும் காலை நானே போன் செய்கிறேன். வரட்டுமா. அவர் கிளம்பிவிடுவார்'' - பெட்டியை எடுத்துக் கொண்டு நடந்தாள்.

''அம்மாடி. தாயில்லாப் பொண்ணு. முதல் முதலா புருஷன் வீட்டுக்குப் போகப் போற. உனக்கு சீர் எல்லாம் தரணுமே. மாப்பிள்ளை காரில் போனால் பொருள்களை எல்லாம்...''

''சம்பந்தி. முதல்ல அவங்க கிளம்பட்டும். அங்கே வீட்லயே எல்லாப் பொருளும் இருக்கு. லைப்ப ஆரம்பிக்

கட்டும். மத்ததெல்லாம் அப்புறம் பார்த்துக்கலாம். அம்மா தாமரை அவன் காரை ஸ்டார்ட் பண்ணிட்டான். பெட்டியை எங்கிட்ட கொடு. நீ ஓடிப்போய் கார்ல ஏறு. இதை நான் கொண்டு வர்றேன்'' - மருமகளிடமிருந்து பெட்டியை வாங்கிக் கொள்ள தாமரை ஓட்டமும் நடையுமாய் போக காரைக் கிளப்பியவன் நிறுத்தி பின் பக்கக் கதவைத் திறந்து விட்டான். அமைதியாக காரினுள் ஏறி அமர்ந்தாள்.

கண்கள் கலங்க தந்தையை ஏறிட்டாள். இனி என்று என் தந்தையின் முகத்தைப் பார்ப்பேனோ. இவர் கோபம் குறையும் வரை நிச்சயமாய் தன்னை இங்கு அழைத்து வரமாட்டார். அப்பா அங்கு வந்தாலும் மரியாதை இருக்குமா? இதுவரை தன் தந்தையிடம் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லையே தன் கணவன். கண்கள் நிறைந்து நீர் வழிந்தது. ''அப்பா உடம்பைப் பார்த்துக்கோங்க. பத்மா அத்தைகிட்ட சொல்லியிருக்கேன். வந்து சாப்பாடு செய்திடுவாங்க. பத்திரம்ப்பா வரட்டுமா.'' - தந்தையின் கைகளைப் பற்றி முத்தமிட்டாள்.

''என்னை நான் பார்த்துக் கொள்வேம்மா. நீ சந்தோஷமா இரும்மா. மாப்பிள்ளை மனசு போல நடந்துக்கம்மா. மாப்பிள்ளை எம் பொண்ணு ஒரு பாவமும் அறியாதவ. பச்சை மண்ணு. தாயில்லாப் பொண்ணு. எம்பொண்ணைப் பார்த்துக்கங்க மாப்பிள்ளை'' - தழுதழுத்தவரிடம் ஒரு வார்த்தைகூடப் பேசாமல் காரைக் கிளப்பினான். தந்தையைப் பற்றியிருந்த கரத்தை உள்ளே இழுத்துக் கொண்டாள். புறப்பட்ட உடனேயே கார் வேகமெடுத்துப் பறந்தது. பின்னால் திரும்பிப் பார்த்தாள். தந்தையின் உருவமும், தான் பிறந்து வளர்ந்த வீடும் தெருவும் வேக வேகமாக கண்ணை விட்டு மறைந்தது. பொங்கி வந்த



நீரை அமைதியாய் துடைத்துக் கொண்டாள். மதுரை வீதிகள் விரைவாகப் பின்னோக்கிச் செல்ல தவிப்பாய் இருபுறமும் பார்த்துக் கொண்டாள். இனி என்று காண்பேனோ? மதுரை மண்ணே. உன்னைக் காண்பேனோ? இல்லை சென்னை நகரிலேயே என் ஆயுள் முடிந்து விடுமோ? அக்கா, அப்பா, மதுரை மீனாட்சி அம்மன் கோவில் தெப்பக்குளம், பொற்றாமரைக்குளம் என அனைத்துமே தன்னைவிட்டு நீங்கிப் போனாற் போல் பெரிய பாரம் ஏறி மனம் வலித்தது.

'தாயே மீனாட்சி உன் துணை எனக்கு எப்போதும் உண்டு என்ற ஒரே நம்பிக்கையால்தான் இதோ என் புக்ககம் போய்க் கொண்டிருக்கிறேன். என் நம்பிக்கை சிதைந்து விடாமல் என் வாழ்வைக் காப்பாற்று. என் கணவரின் மனம் என்னை முழுதாய் ஏற்றுக் கொள்ள வேண்டும். மனமொத்த தம்பதிகளாய் நாங்கள் வாழ வேண்டும். அவரோடு இணைந்து உன் கோவிலுக்கு நான் வரவேண்டும். உன்னையன்றி வேறு துணை இல்லை தாயே' மனமுருக வேண்டிக் கொண்டாள். தாமரையின் வேண்டுதல் மீனாட்சியின் காதில் கேட்டு விட்டதோ? காரின் வேகம் குறைந்து ரோட்டோரமாய் ஓங்கி நின்ற அந்தப் பெரிய ஹோட்டலின் முன் நின்றது. இறங்கி கதவைத் திறந்து விட்டான்.

''காலையிலிருந்து சாப்பிடவில்லை. வா சாப்பிடலாம்'' என்றான் சூர்யா.

## 5

தன் காதுகளையே நம்ப முடியாமல் அவனை நிமிர்ந்து பார்த்தாள் தாமரை. பேசியது தன் கணவன்தானா?

இத்தனை மென்மையான குரலா இவருக்கு. பிறகேன் இத்தனை நேரமாய் காட்டு சிங்கமாய் கர்ஜித்தார். தன் இடத்தில் சுசித்ரா இருந்தால் இதே போன்று மென்மையாய் ஏன் இன்னும் கொஞ்சம் கொஞ்சலாய் பேசியிருப்பாரோ.

''எனக்கு பசிக்கிறது. வருகிறாயா இல்லையா?'' - குரல் உயர்ந்ததும் விருட்டென இறங்கினாள். பதட்டத்தில் தடுமாறி கார் கதவைப் பற்றிக் கொள்ள அங்கிருந்த தன் கையை எடுத்துக் கொண்டான். 'என் விரல் கூட உங்கள் மீது படக்கூடாதா சூர்யா. நான் என்ன தீண்டத் தகாதவளா? அப்படி என்ன நான் பாவம் செய்து விட்டேன்? பாவம் செய்து என்னை உங்களிடம் சிக்க வைத்தவள் அவள். அவளை நினைத்துக் கொண்டா என்னை வெறுத்து ஒதுக்குகிறீர்கள். ஒரு முறை பார்த்து விட்டுப் போய் விட்டீர்களே. அதன் பிறகு போனில் தானே பேசிக் கொண்டீர்கள். அவள் பேச்சிலா உங்கள் மனதைப் பறி கொடுத்துவிட்டர்கள்? நண்பர்களிடம் எல்லாம் சொல்லி மகிழ்ந்தீர்களாமே. அக்கா மீது உங்களுக்கு அத்தனை ஆசையா?

'அவள் இருந்த இடத்தில் இனி எனக்கெங்கே இடம் கிடைக்கும்? நினைப்பே கசந்தது. அப்படி ஒன்றும் சுசித்ராவை விட நாம் ஒன்றும் அழகில் குறைவில்லையே. உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் அவனைவிடப் பல மடங்கு அதிகமே அழகும் குணமும். படிப்பும் பழகும் தன்மையும் பரிவு அடக்கம் என எல்லாவற்றிலும் உயர்ந்தவள்தான் தாமரை. ஏர் நெற்றியை மறைப்பதற்காக ஒரு கொத்து முடியை ஸ்டைலாக வெட்டி விட்டு தோள் வரை மட்டுமே இருக்கும் கூந்தலைப் பின்னலிட்டு இருக்க மாட்டாள் சுசித்ரா. ஆனால்



இடைவரை இருக்கும் கூந்தலை ஒரு நாளும் பறக்க விட மாட்டாள் தாமரை. பின்னலிட்டு பூச்சூடி அம்சமாய் இருப்பாள். மேலும் கற்ற கல்வியினால் ஏற்பட்ட அடக்கம் தெளிவு கனிவு என எல்லாம் முகத்தில் குடியிருக்கும். சுசித்ராவின் நடையில் உடையில் பார்வையில் எப்போதும் அலட்சியம் குடி கொண்டிருக்கும். மற்றபடி நிறம் அழகு எல்லாமே இருவரிடமும் கொட்டிக் கிடந்தது உண்மைதான். மனதில் ஒருவனை வைத்துக் கொண்டு இந்த அக்கா போனில் எப்படி இவரிடம் கொஞ்சிப் பேசினாள்? யாரை ஏமாற்ற அப்படிப் பேசினாள். அவள் கிசுகிசுவென செல்போனில் அத்தானுடன் பேசுகையில் அப்பாவும் நானும் எத்தனை வெட்கப்பட்டு விலகியிருப்போம். எதிலும் சந்தேகம் வரக்கூடாது என்று தெளிவாய் நடித்திருக்கிறாள். நானும் அப்பாவும் ஏமாந்தது போல் இதோ இவரும் மனதில் எத்தனை கற்பனைகளை வளர்த்தாரோ. சுசித்ராவின் மேல் ஆத்திரமாய் வந்தது. எத்தனை பேர் மனதைப் புண்ணாக்கிவிட்டுப் போய் விட்டாள் பாவி!

''இப்படியே பார்த்துட்டு இருந்தா உனக்கு வேண்டுமானால் பசி அடங்கலாம். எனக்கு அப்படி அல்ல'' - கசப்பாய் மொழிந்துவிட்டு சென்றவனை பதற்றமாய் பின் தொடர்ந்தாள் தாமரை. சாப்பிடும்போதும் சரி மீண்டும் காருக்குத் திரும்பும்போதும் சரி, சென்னை வந்து சேரும் வரை தன் மனைவி என்று ஒருத்தி தன்னுடன் காரில் வருகிறாள் என்ற நினைப்பே இல்லாமல் இயல்பாய் இருந்தான் சூர்யா. தயங்கித் தயங்கி அமர்ந்திருந்தவள் காலையிலிருந்து ஏற்பட்ட மன உளைச்சல்கள் வேதனைகள் அலைச்சல் என அனைத்துமாய் உடலை நோகச் செய்ய சீட்டில் சாய்ந்தவள் தன்னை மறந்து உறங்க ஆரம்பித்தாள்.

சுள்ளென சூரியக் கதிர்கள் தன் மீது பட வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தவள் தலை காரின் மேற் கூரையில் இடித்துக் கொள்ள ''அம்மா ஆ'' - என்றவாறு சீட்டில் அமர்ந்து கொண்டாள். சில விநாடிகள் எதுவுமே புரிய வில்லை. 'அட! சென்னை வந்துவிட்டதா. இவர் எங்கே? இப்படியா அசந்து தூங்கி விட்டோம்.' தன்னையே நொந்து கொண்டு கதவைத் திறந்தாள். பெரிய பங்களா டைப் வீடு அது. வெகு அருமையாய் கம்பீரமாய் இருந்தது. போர்டிகோவில் தான் கார் நின்று கொண் டிருந்தது. 'இதுதான் நான் வாழப் போகும் வீடா. வீடு வந்து விட்டது. எழுந்து வா என எழுப்பக்கூட தோன்ற வில்லையா அவருக்கு.'

மனம் நத்தையாய் சுருங்க கீழே இறங்கி சுற்றுமுற்றும் பார்த்தாள். வரிசையாய் அழகழகாய் விதம் விதமாய் செடிகொடிகள் பூத்துக் குலுங்கின. அவற்றிற்கு நீர் பாய்ச்சியபடி ஒருவன் நின்றிருந்தான்.

சுவரோரமாய் அமைக்கப்பட்டிருந்த வலை கூட்டிற் குள்ளிருந்து கலர் கலராய் லவ் பேர்ட்ஸ் கீச்கீச் என கத்திக் கொண்டிருந்தன. கூண்டுக்குள் அமைத்திருந்த குடுவை போன்ற சிறிய மண் பானைக்குள் கிடந்த குஞ்சுகள் புத்தம் புதிதாய் முளைத்த பட்டுச் சிறகுடன் துவாரம் வழியே எட்டிப் பார்த்தது மனதை மயங்கச் செய்தது.

சற்று தள்ளி புறாக்கூடு. புறாக்கள் வெண்மையும் சாம்பலும் கலந்த நிறத்தில் பறந்து கொண்டு திரிந்தது. புல்வெளிக்கு நடுவில் சிறியதாய் அம்சமாய் ஒரு செயற்கை நீரூற்று. சுற்றிலும் பச்சைநிற வெல்வெட் மெத்தையாய் புற்கள். அதன் நடுவே இரும்புச் சங்கிலி யால் ஆன ஊஞ்சல் என அந்த இடம் சொர்க்க



லோகமாகத்தான் காட்சியளித்தது. மதுரையில் தெற்கு மாசி வீதியில் சற்று ஒதுங்கினாற் போலிருந்த தன் வீட்டை விட இது பத்து மடங்கு அதிகம்தான். என்றாலும் அங்கிருந்த இன்பம் கலகலப்பு அன்பு பாசம் இங்கு கிடைக்குமா? கிடைக்கும் கிடைக்கும். நம்பிக்கை தானே வாழ்க்கை. பார்க்கலாம். அது சரி இப்போது என்ன செய்ய லாம். நாமாகவே உள்ளே போய் விடலாமா? நம்மை யாரென்று வேலைக்காரர்கள் கேட்டால் என்னவென்று சொல்வது. யோசனையாய் நின்றவளைப் பார்த்துவிட்டு ஓடிவந்தான் நீர் பாய்ச்சிக் கொண்டிருந்தவன். ''அம்மா வாங்கம்மா. எழுந்திட்டீங்களா. ஐயோ சொல்லிட்டுப் போனாங்கம்மா. அம்மா அசந்து தூங்குறாங்க. யாரும் எழுப்ப வேணாம்னுட்டாங்கம்மா. சரிங்கம்மா. உள்ளார வாங்கம்மா. தாயம்மா. ஏ தாயம்மா. பாரு அம்மா வர்றாக'' - என்று அவன் கொடுத்த குரலுக்குக் கையில் ஆரத்தித் தட்டுடன் அந்தப் பெண் வந்தாள். நல்ல திருத்தமான முகம். காலையிலே குளித்து தலை வாரிக் குங்குமம் இட்டு பளிச்சென இருந்தாள். ''இப்படி நில்லுங்கம்மா. முத முதலா புகுந்த வீட்டுக்கு வாழ வர்றீங்க. ஆரத்தி சுத்தினப்புறம் உள்ளார போலாம். ஐயாவையும் சேர்த்து தான் சுத்தனும். ஐயா வந்த உடனே படுத்தவுக தான் இன்னும் எழுந்துக்கலை'' - என்றவாறே ஆரத்தி சுற்றி நெற்றியில் துளி திலகமிட்டு ''இந்தாய்யா. இதை வாசலுக்கு வெளியே கொட்டிட்டு வந்திடு'' - என்றாள்.

''நான் கொட்டிடுறேன். அம்மாவை உள்ளார கூட்டினு போய் சாப்பிட வை'' - என்றவாறே ஆரத்தித் தட்டோடு நகர்ந்து போக முன்பின் தெரியாதவர்களின் அக்கறை யில் மனம் கனிந்து போயிற்று.

''வந்து.. எம்பெட்டி டிக்கியில் இருக்கும்..'' - என்றவளின் காம் பற்றி உள்ளே அழைத்துச் சென்றாள் தாயம்மா. ''அம்மா! அதெல்லாம் ஐயா வந்த உடனே எடுத்து ரூமுக்கு எடுத்துப் போயாச்சும்மா. மாடியிலதாம்மா இருக்கு. நீங்க போயி குளிச்சிட்டு வாங்க. சாப்பாடு ரெடியா இருக்குதும்மா. அப்புறம் ஐயாவை எழுப்ப வேண்டாம்னு சொல்லிட்டாக.''

''சரி!'' என்ற ஒற்றை வார்த்தையில் பதிலளித்துவிட்டு தடதடக்கும் இதயத்தோடு படியேறினாள். சாத்தியிருந்த அறையின் முன் நின்றாள். கதவைத் தட்டலாமா? தட்டினால் விழித்துக் கொள்வாரே. ஒரு நிமிடம் போல் நின்றவள் தயங்கியவாறே மெல்ல கதவில் கை வைக்க அது தானாகவே உள்ளே போயிற்று. அட! கதவு திறந்துதான் இருக்கிறது. மெல்ல அடியெடுத்து வைத்து உள்ளே வந்தாள். ஏ.சி.யின் விர் ஓசையைத் தவிர நிசப்தமான அறையின் மெத்தையில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான் சூர்யா.

மெலிதான வெளிச்சத்தில் தன் கணவனை முதன் முறையாய் நிதானமாய் பார்த்தாள். தூங்கும் போதுதான் ஒருவருடைய இயல்பான குணம் தெரியும் என்பது போல் அவனது முகம் மென்மையான இளம் புன்னகையோடு தெரிந்தது. அளவான கட்டுக்கோப்பான உடம்பு. துணியை மாற்றாமல் நேற்று அணிந்து வந்த ஜீன்ஸிலும் டீசர்ட்டிலுமே உறங்கிக் கொண்டிருந்தான். நல்ல பொன்னிறம். அக்கா கூட போட்டோவைப் பார்த்து விட்டு வியந்தாளே. பாருடீ என்ன மாதிரி கலர். பாலும் பாதாமும் சாப்பிட்டு ஏ.சி. ரூமிலேயே வளர்த்திருப்பாங்களோ என்றாளே.



முகத்திற்கு இந்த கரு கரு மீசை எத்தனை பொருத்தம். கன்னத்தில் என்ன. ஓ மச்சமா? கண் திருஷ்டி பொட்டு போல் எத்தனை அழகு. தலைமுடி நெற்றி வரை கலைந்து கிடந்தது. தன் கணவனை அவன் தூங்கும் போது அனுஅனுவாய் ரசித்துக் கொண்டிருந்தாள் தாமரை. அழகன் தான். பேரழகன்தான். நான் இவர் அழகிற்கு பொருத்தமில்லையோ. அதனால்தான் என்னைத் திரும்பியும் பாராமல் இருக்கிறாரோ. கட்டிலின் மேல் சுவரில் இருந்த பெரிய கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்த்தாள். தலை கலைந்து ஆடை கசங்கியிருந்தபோதும் அழகான ஓவியம் போன்றே தெரிந்தாள். அப்படியொன்றும் குறைவில்லையே. எத்தனை அழகாய் இருந்து என்ன அவன் மனதில்தான் அக்கா இருக்கிறாளே. மீண்டும் மனதில் பாரம் ஏறிவிட அவனையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

சூர்யாவின் உறக்கம் கலைந்தது. மெல்ல அசைந்தவன் கண்களைத் திறந்த உடன் பார்வையில் தாமரை படவே விருட்டென எழுந்தான். ''இங்கே என்ன செய்கிறாய்?'' - தூக்கம் கலைந்ததில் சிவப்பேறிய கண்களுடன் இறுகிய குரலில் கேட்டவனை பயமாய் பார்த்தாள்.

''வ.. வந்து.. என் பெட்டி. குளிக்கணும். துணி எடுக்க...'' - தடுமாறியவளை தாண்டி வந்து அடுத்த அறையைக் காட்டினான். ''அங்கே இருக்கு. அதுதான் உன்னோட ரூம்'' - அதற்கு மேல் பேசாமல் பாத்ரூமிற்குள் நுழைந்து கொண்டான். சிறிது நேரத்தில் தண்ணீர் விழும் சத்தம் கேட்க குளிக்கிறான் என தெரிந்தது. குளித்து விட்டு வரும் வரை நிற்க வேண்டாம் என்ற முடிவுடன் அறையை விட்டு வெளியேறி தன் அறைக்குள் நுழைந்தாள்.

கிட்டத்தட்ட அதே போன்ற அறைதான். பெரிய கட்டிலின் மீது அகலமான பஞ்சு மெத்தை. சுத்தமாய் பெட்ஷீட் விரிக்கப்பட்டிருந்தது. அறையிலேயே டி.வி., டி.வி.டி, ஹோம் தியேட்டர் சிஸ்டம், ஏ.சி. குட்டி பிரிட்ஜ் என எல்லாமே இருந்தது. ஓரத்தில் தனது பெட்டியும் இருக்க, அதை எடுத்து துணிகளை நீட்டாய் சுவரோரமாய் அமைந்திருந்த கப்போர்டில் அடுக்கினாள்.

குளித்துவிட்டு மாற்ற ஒரு செட் உடையை எடுத்துக் கொண்டு பாத்ரூமிற்குள் நுழைந்தாள். பிரமித்துப் போனாள். பாத்ரூம் தன் வீட்டு படுக்கை அறையை விட பெரிதாய் இருந்தது. கெய்ஸர், ஷவர், ஹேண்ட் ஷவர் என சுவரில் பதித்திருக்க, அறையின் நடுவே அகலமாய் பெரிதாய் இளம்பச்சை நிற பாத் டப் தெரிந்தது. இது வரை சினிமாவில் மட்டுமே பார்த்திருந்த பாத்டப். நேர் எதிரே ஆளுயரக் கண்ணாடி. எத்தனை அழகு. நேர்த்தி. வீட்டின் ஒவ்வொரு இடத்தையும் பார்த்துப் பார்த்து ரசித்துப் பொருட்களை அமைத்திருக்கிறார். ரொம்ப ரசனை உள்ளவர்தான் போலும். எத்தனை பொருள் இருந்து என்ன? ரசனை இருந்தால் தானே வாழ்க்கை இனிமையாக இருக்கும். மனம் லேசாகி மிதக்க ஆசை தீரக் குளித்தாள். ஆடை மாற்றி விட்டுத் திரும்புகையில் அறையிலிருந்த கடிகாரத்தின் குருவி தனது குட்டிக் கதவைத் திறந்து கொண்டு வெளியில் வந்து குக்கூ குக்கூ என பதினொரு முறை கூவிவிட்டு தன் அறைக்குள் சென்று கதவை மூடிக் கொண்டது. ரசனையாய் அதைப் பார்த்தவள் மணி பதினொன்றா பதறியபடி தலையை உலர்த்தியபடி நுனி முடியை இலேசாய் முடிச்சிட்டுக் கொண்டு முகத்தில் பவுடர் ஒற்றி பொட்டிட்டு வகிட்டில் குங்குமம் இட்டுக் கொண்டு கீழே இறங்கி வந்தபோது,



''அம்மா! எத்தனை அழகு. தங்க சிலையாட்டம் மின்னுறீங்கம்மா. எங்கே தேடினாலும் இப்படி ஒரு அம்சமான பொண்ணு கிடைக்காதும்மா. நாங்ககூட நம்ம ஐயா அழகுக்கு பொண்ணு எப்படிக் கிடைக்குமோனு கவலைப்படுவோம். எங்க ஐயாவுக்குன்னே உங்களை செய்து மதுரையில கொண்டு வச்சிருக்கு சாமி. சாமிக்கு தெரியாதா எதை எப்படி சோடி சேர்க்கணும்னு'' - வெள்ளை மனதோடு தாயம்மா பேசிக் கொண்டு போக கூச்சமாய் நெளிந்தவள் டைனிங் டேபிளில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த கணவனின் பார்வையும் தன் மீதே இருக்க நாணித் தலை கவிழ்ந்தாள்.

''அட! வந்து உட்காருங்கம்மா. பசியோட இருப்பீங்க.'' - என்றவளின் குரலுக்கு இணங்கி மெல்ல வரவும் சாப்பிட்டுவிட்டு அவன் எழவும் சரியாக இருந்தது. நகர்ந்து சென்று வாஷ் பேசினில் கைகழுவி விட்டு ''தாயம்மா ஒரு காபி ஹாலுக்கு எடுத்திட்டு வா'' - என்றவாறு செல்ல, ''தாயம்மா! நான் அவருக்கு காபி கொடுத்திட்டு வந்து சாப்பிடுறேன்'' - என்றவாறே கணவனின் தட்டை எடுத்துக் கழுவி ஷெல்பில் கவிழ்த்தினாள். சூடான பாலில் அளவாய் சர்க்கரையும் காபி தூளையும் கலந்து ஹாலிற்கு போனபோது ஆங்கிலப் பேப்பரில் மூழ்கியிருந்தான். ''காபி'' - தாமரையின் குரலில் நிமிர்ந்தான்.

''தேங்க்ஸ்'' - என்றவாறு வாங்கிக் கொண்டே, ''உன்னை யார் இந்த வேலையைச் செய்யச் சொன்னது? நான் தாயம்மாவிடம் தானே கேட்டேன்'' - என்றான் பேப்பரைப் பார்த்துக் கொண்டே,

''இனி உங்கள் தேவைகளை கவனிக்கத்தான் நானிருக்கிறேன். இது என் வேலை தானே.''

''இதோடு நிறுத்திக் கொண்டால் போதும்'' - விட்டேற்றியாய் பதில் வந்தது.

''அதெப்படி காபி கொடுத்தால் மட்டும் போதுமா? இனிமே லஞ்ச், நைட் டின்னர், ஈவினிங் டிபன் காபின்னு எல்லாமே நான் தான் தரப் போகிறேன். உங்களுக்கு என்னென்ன பிடிக்கும்னு சொல்லுங்க. நானே செய்திடுறேன். நான் நல்லா சமைப்பேங்க. தைரியமா சாப்பிடலாம்'' - சூழலைக் கலகலப்பாக்க வேண்டுமே என்று தாமரை பேச,

''இப்படியெல்லாம் செய்தா நான் அப்படியே உருகிடுவேன்னு உங்க அப்பா சொல்லி அனுப்பினாரா'' - குத்தலாய் கேட்டான்.

''ஆமாங்க! மாப்பிள்ளை மனசு கோணாம அவர் மனசு புரிஞ்சு நல்லபடியா பார்த்துக்கோ. அப்பத்தான் வாழ்க்கை நல்லா இருக்கும். மாப்பிள்ளையும் உன்னிடம் அன்பாக இருப்பாருன்னு சொன்னாங்க. எனக்கு அம்மா இல்லியே. அதான் அம்மா சொல்லி அனுப்ப வேண்டிய அறிவுரை எல்லாம் அப்பாவே சொல்லி அனுப்பினாங்க'' - கள்ளம் கபடமின்றி பேசியவளைக் கூர்ந்து பார்த்தான். இதில் எத்தனை சதவிகிதம் உண்மை கலந்திருக்கிறது. எத்தனை முயன்றும் அந்தப் பால் முகத்தில் எந்தப் பொய்யையும் காண முடியாமல் தவித்தான். இல்லை நம்பக்கூடாது மனதை உறுத்தும் கேள்வியை கேட்டே ஆகவேண்டும். லேசாக செருமிக் கொண்டு தாழ்ந்த குரலில் அவன் கேட்ட கேள்வியில் சூடு பட்டாற்போல் துடித்து நிமிர்ந்தாள். விழிகளும் உதடுகளும் துடிக்க தன் காதுகளையே நம்பாமல் நம்ப முடியாமல் அவனையே உற்றுப் பார்த்தாள். கண்களில் நீர் தளும்



பியது. ''என்ன கேட்டீங்க?'' உதடுதான் அசைந்ததே தவிர குரல் வெளிவர மறுத்தது.

## 6

''ஏன் உனக்கு காது சரியா கேட்காதா? நிஜமாகவே உன் அக்கா ஓடிப்போய் விட்டாளா? இல்லை நீயும் உன் அப்பாவும் உன்னை எனக்குக் கட்டி வைக்க வேண்டும் என்று அவளை மறைத்து வைத்து விட்டீர்களா? ஏன்னா அவ ஒன்றும் உன் உடன் பிறந்த சகோதரி அல்லவே. உன் பெரியப்பா பெண் தானே. அதனால்தான் கேட்டேன்'' - அலட்சியமாய் கேட்டவனை எரித்து விடுவதைப் போல் பார்த்தாள்.

''ஏன்? ஏன்? நாங்கள் ஏன் அவளை மறைத்து வைக்க வேண்டும். அதற்கு அவசியம் என்ன?'' - வேகமாய் கேட்டவளைப் பார்த்து அலட்சியமாய் சிரித்தான்.

''வெரி சிம்பிள். நான் அறிந்தவரை உங்கப்பா தன் அண்ணன் மகளுக்குத்தான் பணம் நகை என்று சேர்த்திருக்கிறார். உனக்கு என்று எதையும் சேர்த்து வைக்கவில்லை. இந்த நிலையில் என் பாட்டியின் தயவால் பெரிய இடத்து சம்பந்தமாக என்னைப் போன்ற அழகன் கிடைத்த உடன் உன் அப்பாவின் மனம் சபலப்பட்டு விட்டது. வசதியான இடம். தன் தம்பி மகளை விட தன் மகளுக்கே பணம் நகை இல்லாமலே இதை முடித்து விட வேண்டும் என்ற பேராசை. அதனால்தான் முந்தைய நாள் இரவு வரை இருந்த பெண்ணை மறைத்து வைத்து விட்டு ஓடிப் போனதாக கதை விட்டு உன்னை எ

தலையில் கட்டி வைத்து விட்டார். நான் மறுத்து விட்டேன் என்றதும் அழகாய் நெஞ்சு வலி நாடகமாடி சாதித்து விட்டார். சும்மா சொல்லக்கூடாது உன் அப்பாவின் நடிப்பில் நானே மிரண்டு போனேன். அத்தனை தத்ரூபமான நடிப்பு. தந்தை எட்டடி என்றால் நீ நாற்பதடி, அழுது புரண்டு என் அப்பாவையே நிலை தடுமாற வைத்து விட்டாயே. ஆக நான்தான்... நான்தான் கடைசியில் ஏமாளியாகிப் போனேன்.''

மூக்கின் நுனி சிவக்க அவன் கர்ஜித்தபோது அரண்டு தான் போனாள். அவசரமாக திரும்பி கிச்சனைப் பார்த்தாள்.

''என் வீட்டில் வேலை செய்பவர் தங்கள் வேலையை விட்டு விட்டு எதையும் வேடிக்கை பார்ப்பதுமில்லை. ஒட்டுக் கேட்பதுமில்லை'' - அதட்டலாகவே சொன்னவனை நிமிர்ந்து பார்த்தாள்.

''இதோ பாருங்கள்! நீங்கள் அழகன் என்றோ பெரிய செல்வந்தர் என்றோ திருமணத்திற்கு முந்தைய நாள் வரை எனக்குத் தெரியாது. நீங்கள் பெண் பார்க்க வந்த அன்று கூட நான் வீட்டில் இல்லை. என் அக்காவின் தோழியை அழைத்து வர என்னை அனுப்பிவிட்டாள். நான் வரும்போது நீங்கள் போய் விட்டீர்கள். அதனால் உங்கள் முகத்தைக் கூட நான் பார்த்ததில்லை. அதோடு அப்பாவிடம் உங்கள் பாட்டி தன் மகளும் மருமகனும் வெளிநாட்டில் இருப்பதாகவும் பேரன் சென்னையில் தனியாக இருப்பதாகவும் தான் சொல்லி சம்பந்தம் பேசினார்களே தவிர என் பேரன் பெரிய கோடீஸ்வரன் ஆணழகன் என்றெல்லாம் சொல்லி சம்பந்தம் பேசவில்லை. நல்லவர். எந்தக் கெட்டப் பழக்கமும் இல்லா



தவர் என்று சொன்ன ஒரே காரணத்திற்காகத்தான் எங்கப்பா சம்மதித்தார். மற்றபடி உங்க வசதியைப் பார்த்து ஆசைப்பட நாங்கள் ஒன்றும் பரம ஏழையும் அல்ல. தகுதிக்கு மீறி ஆசைப்படும் வர்க்கமும் அல்ல'' - ரோஷமாய் சொன்னவளை இன்னும் ஏளனமாய் பார்த்தான்.

''பார்த்தாயா? நீயே சொல்லிவிட்டாய். திருமணத்திற்கு முந்தைய நாள் வரை தெரியாது என்று. அதுவரை சுசித்ரா நன்றாகத் தான் இருந்தாள். அப்படியென்றால் அன்று இரவுதான் உங்கள் திட்டம் ஆரம்பமாகியிருக்கிறது. இரவோடு இரவாக அவளை மறைத்து விட்டீர்கள் இல்லையா. மறைத்து வைத்திருக்கிறீர்களா இல்லை ஓடிப்போனவள் ஓடிப்போனதாகவே இருக்கட்டும் என்று அவளைக் கொன்றே விட்டீர்களா?''

''ஸ்டாப் இட்...'' கத்தினாள் தாமரை. உடல் முழுவதும் வெடவெடத்தது. ''அப்பா தப்பு பண்ணிவிட்டார். என் அப்பா தப்பு பண்ணிவிட்டார். அக்காவின் வாழ்வு தப்பித்ததே என்று சந்தோஷப்படாமல் தன்னுடைய ஒரே பெண்ணை நெருப்பில் தள்ளி விட்டார். என் அப்பா என்னைக் கொன்றே விட்டார்'' - முகத்திலறைந்து கொண்டு அழுதாள்.

''ஷ்! இப்போது ஏன் அழுது ஆர்ப்பாட்டம் செய்கிறாய்'' - என்றவாறு அவளைக் கைப்பற்றி அழைத்துப் பக்கத்தில் உள்ள அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்தினான் சூர்யா.

''விடுங்கள் என்னை'' - கையை உதறிக் கொண்டு சீறினாள். ''பணம் இருந்தால் என்ன வேண்டுமானாலும் பேசுவீர்களா? ச்சீ! எத்தனை கீழ்த்தரமான புத்தி. ஐயோ உங்களைப் போய் உத்தமர் என்று எண்ணி தன்

அழித்து விட்டாரே என்
பெண்ணின் வாழ்க்கையேயே
அப்பா. இந்த புத்தியெல்லாம் எங்களுக்கு சுட்டுப்
போட்டாலும் வராது மிஸ்டர் சூர்யா. ஒழுக்கத்திற்கும்
அன்பிற்கும் கட்டுப்பட்டு வாழ்பவர்கள் நாங்கள். அந்த
அன்பிற்கு கட்டுப்பட்டுத்தான் உங்களை மணக்க
சம்மதித்தேன். மற்றபடி உங்கள் அழகில் மயங்கி விழ
நான் என்றும் அப்படிப்பட்ட பெண் அல்ல. என்ன
பெரிய அழகு. இன்னும் பத்து இருபது வருடம் போனால்
இந்த அழகு இருக்குமா உங்களிடம். பணம்! பணம்
எப்போது யாரிடம் போகும் என்று தெரியுமா? பெரிய
பெரிய கோடீஸ்வரர் எல்லாம் இறுதியில் சாப்பிட வழி
யின்றி இறந்ததை நான் பார்த்திருக்கிறேன். நிரந்தரமில்
லாத இந்தப் பணத்திற்கா ஆசைப்பட்டோம் என்று
சொல்கிறீர்கள்? என்றுமே அழியாத அன்பென்ற சொத்து
எங்களிடம் இருக்கிறது. நேர்மையும் ஒழுக்கமும் பண்பும்
தான் எங்கள் அழகு. அது ஆயுள் முழுவதும் எங்களை
விட்டுப் போகாது. என் தந்தையின் கண்ணீருக்காகத்
தான் உங்களை மணந்தேனே தவிர உங்களை விரும்பி
அல்ல.''

''அப்படியானால் உன் அக்கா'' - எனத் தொடங்கிய
வனை இடைமறித்தாள் தாமரை. ''அக்காவா நயவஞ்சகி.
என் தந்தையை நடைப்பிணமாய் நிற்க வைத்துவிட்டு
வேண்டிய மட்டும் சுருட்டிக் கொண்டு ஓடியவள்.
பெற்ற பிள்ளையாய் இருந்தால் இப்படிச் செய்வாளா?
அவளை வளர்த்த பாவத்திற்குத்தான் என் அப்பாவிற்கு
இந்த தண்டனை. மருமகன் வாயால் கிடைத்த அரிய
பட்டம். கொலைகாரப் பட்டம். இந்த ஒரு வார்த்தை
காதில் கேட்டாலே போதும். கத்தி வேண்டாம் அரிவாள்
வேண்டாம். என் அப்பா மரணித்து விடுவார். உங்களை



ஏமாற்றி விட்டார் என்று தானே சொன்னீர்கள். இல்லை
நாங்கள் தான் ஏமாந்து போனோம். ஒரு பெண்ணால்...
நல்லவன் என்று நம்பிய உங்களால் நாங்கள்தான்
ஏமாந்து போனோம்'' - குரலோடு உடலும் நடுங்க தள்
ளாடியவளை தோள் பற்றி சோபாவில் அமர வைத்தான்.

''ஓ.கே. கூல் ஏன் இத்தனை ஆவேசம்? ரிலாக்ஸ்.
ரிலாக்ஸ் நேற்றிலிருந்தே என்னை என் மனதை உறுத்
திய கேள்வி. அதனால் தான் கேட்டேன். அது உன்னை
இப்படிப் பாதிக்கும்னு நினைக்கல்ல. ஸாரி. வெரி ஸாரி.
ஆனால் இன்னமும் என்னால் நம்ப முடியவில்லை'' -
என்றவனை வெறுப்பாய் பார்த்தாள்.

''என்ன செய்தால் நம்புவீர்கள். சொல்லுங்கள். நான்
தயாராக இருக்கிறேன். இதோ நீங்கள் கட்டிய தாலி.
இதன் மீது ஆணையாகக் கூறுகிறேன். நானும் என்
தந்தையும் குற்றமற்றவர்கள். இன்னொன்று சொல்
கிறேன் கேளுங்கள். நீங்கள் தான் பெரிய செல்வந்த
ராயிற்றே. உங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி சுசித்
ராவைக் கண்டு பிடியுங்கள். நீங்கள் நினைத்தது போல்
அவள் யாரோடும் போகாமலிருந்தால் உங்கள் மனம்
போல் அவளையே மணந்து கொள்ளுங்கள். நான்... நான்
விலகிப் போய் விடுகிறேன்'' - கண்ணீர் வழிய
நிறுத்தினாள்.

''கட்டாயப்படுத்தி திருமணம் செய்து வைத்து
விட்டார்கள் என்று என்னுடன் வாழ்ந்து உங்களை நீங்கள்
வருத்திக் கொள்ள வேண்டாம். உங்கள் விருப்பத்திற்கு
நான் தடையாய் இருக்க மாட்டேன். அப்போதாவது
எங்களை நம்புவீர்களா?'' - காட்டமாய் கூறிவிட்டு
எழுந்து அறைக்கதவைத் திறந்து வெளியேறினாள்.

உறைந்து போயிருந்தாள் சூர்யா. 'தாமரை சொல்வது போல் அவன் ஒன்றும் சுசித்ரா மீது காதல் கொள்ள வில்லைதான். ஆனால் பெண் பார்த்து விட்டு வந்த பிறகு சுசித்ராவிடம் சில சமயங்களில் போனில் பேசும் போது சொன்னாளே ''எனக்கு வசதியான அழகான மாப் பிள்ளை கிடைத்ததில் என் தங்கைக்கு ரொம்பப் பொறாமை. அப்பாவுக்கும்தான். என்ன இருந்தாலும் நான் வளர்ப்பு மகள் தானே. எனக்கு என்னவோ நம்ம கல்யாணத்துல எதுவும் பிரச்சனை வந்திடுமோன்னு பயம்மா இருக்கு சூர்யா. எது நடந்தாலும் நான் நல்ல வன்னு நீங்க நம்பணும் சூர்யா. நம்புவீங்கல்ல. என்னை வெறுத்திட மாட்டீங்களே'' - என குரல் கம்மக் கூறியது இன்னும் நினைவிருக்கிறதே. அவள் கூறியது உண்மை என்றால் தாமரை கூறுவது பொய்யா? இல்லை. தாமரை யின் வார்த்தைகளும் கண்ணீரும் பொய் இல்லை. அது நன்றாகவே தெரிகிறது. அப்படியென்றால் சுசித்ரா தன் னிடம் பொய் சொன்னாளா? ஏன் தந்தையையும் தங் கையையும் பற்றி தன்னிடம் குறை கூற வேண்டும். ஒரு வேளை தன்னிடம் உள்ள குறைகள் தெரிந்து விடாமல் இருக்க மற்றவரை குறை கூறி தன்னை திசை திருப்பி னாளோ? ஏன்? எதற்காக? அந்த ஓர் இரவில் நடந்தது என்ன?' தலைக்குள் பிரளயமே நடக்க ஆரம்பித்தது.

## 7

''மே ஐ கமின் ஸார்'' - என்ற குரலில் கலைந்தான் சூர்யா. சட்டென இயல்பாகி ''யா கமின்'' - என்றவாறே



எழுந்து வந்தான். கதவைத் திறந்து உள்ளே நுழைந்தவன் பிரபுதாஸ். சூரியாவின் பெர்சனல் அஸிஸ்டென்ட். ''வெல்கம் ஸார். ஹௌ ஈஸ் மேரீட் லைப்'' - என புன்னகையோடு கேட்டவனிடம் கட்டாயமாகச் சிரித்து வைத்தான். ''யா! பைன் என்ன பிரபு வீட்டுக்கே வந் திட்டே? முக்கியமான வேலை எதுவும் இருக்கா? நானே ஆபீஸிற்குத்தான் புறப்பட்டுக் கொண்டிருந்தேன்.''

''நோ ஸார். ஒரு ஒன் வீக்காவது நீங்க ப்ரீயா இருங்க. மத்த வேலையெல்லாம் நானே பார்த்துக் கொள்கிறேன். இதோ இந்த பேப்பர்ஸ் மட்டும் சைன் பண்ணிட்டா போதும். கொட்டேஷன் மூவ் பண்ணிடலாம். நீங்க ஆபீஸை பத்தின எந்த டென்ஷனும் இல்லாம என்ஜாய் பண்ணிட்டு வாங்க ஸார். ஸ்விட்சர்லாந்து டிக்கெட் கன் பார்ம் பண்ணிடவா ஸார்'' - பேசிக் கொண்டே பேப்பர் களில் கையெழுத்தை வாங்கிக் கொண்டு அவற்றை பைல்களில் பத்திரப்படுத்தினான் பிரபுதாஸ்.

''இல்ல பிரபு. வொய்ப் கொஞ்சம் டயர்டா இருக்கா. அப்பாவ பிரிஞ்சு வந்த ஏக்கம் ஒரு பக்கம். நைட் ட்ராவல் அவ உடம்புக்கு ஒத்துக்கல்ல. நல்ல ரெஸ்ட் எடுக் கட்டும். உடம்பு நார்மலான பிறகு பார்த்துக் கொள்ள லாம். பிளைட் ட்ராவலிங்க அவ உடம்பு தாங்கணுமே. தவிர ஸ்விஸ்லயும் இப்போ குளிர் ஜாஸ்தியாம். ஸோ. அப்புறமாய் போய் அம்மா அப்பாவோட ஒரு பத்து நாள் தங்கி அமெரிக்காவை சுத்திட்டு வரலாம்னு இருக்கேன். அதைப்பத்தி அப்புறம் முடிவு பண்ணிக்கலாம். ஒரு பைவ் மினிட்ஸ் வெய்ட் பண்ணு. நானும் ரெடியாயிட்டு வர்றேன். சேர்ந்தே ஆபீஸ் போயிடலாம் ஓகேவா'' - என்றவாறு சட்டையை மாட்டிக் கொண்டே மாடிக்கு ஏறி

வந்தான். தன் அறைக்குள் செல்லும் முன் தாமரை வாசலருகே தயங்கி நின்றான். ஒரு கணம் மட்டுமே. சரி கொஞ்சம் தனியாக ரெஸ்ட் எடுக்கட்டும். அப்புறம் பேசிக் கொள்ளலாம். முடிவுடன் தன் அறைக்கு வந்து நிமிடத்தில் ரெடியாகி வெளியேறினான்.

போர்டிகோவிலிருந்து கார் வெளியேறுவதை மாடி யின் ஜன்னல் வழியே பார்த்துக் கொண்டிருந்தாள் தாமரை. புது மனைவி. தாலிகட்டி இரண்டு நாள் கூட முடியவில்லை. ஆனால் தன்னிடம் ஒரு வார்த்தை கூட சொல்லிக் கொள்ளாமல் போகிறாரே. எப்படிச் சொல்லு வார். நான் என்ன அவர் விரும்பி ஏற்றுக் கொண்ட பெண்ணா? வேண்டா வெறுப்பாய் மணந்தவள் தானே. என்னென்ன வார்த்தையெல்லாம் பேசி விட்டார். நினைக்கையிலேயே உடல் கூசியது. பணத்திற்காக மயங்கி அக்காவை மறைத்து இல்லை கொன்றுவிட்டு இவரை மணந்ததாக.... அப்பா... என்ன வார்த்தை. திடீரென திருமணப் பெண் மாறியதில் அக்கா ஏமாற்றி யதில் கொஞ்சம் வெறுப்பு இருக்கலாம். நாளடைவில் இந்த வெறுப்பு மாறி தன்னை ஏற்றுக் கொள்வார் என்ற நம்பிக்கையில் தான் இங்கு அவள் வந்ததே.

ஆனால் வந்த அன்றே அதற்கெல்லாம் வாய்ப்பே இல்லை என்று தெரிந்து விட்டது. இனி நாம் இங்கு இருப்பதே வீண் தானோ. அவர் மனதில் சுசித்ரா பதிந்து போய் விட்டாளோ. கடவுளே! இப்போது நான் என்ன செய்வேன். கனமாய் தொங்கிய தாலியை எடுத்துப் பார்த்தாள். மஞ்சள் கயிறு மகிமை என்பார்களே. இது என்ன மகிமை செய்யும் எனக்கு. அப்பாவிற்காக என்றே இந்தத் தாலியை ஏற்றுக் கொண்டாலும் அந்த நொடி



முதலே தன் கணவராக ஏற்றுக் கொண்டவரை எப்படி இன்னொருத்திக்கு விட்டுத் தர முடியும்? தன் கழுத்தில் தாலி கட்டிய போதும் நெற்றியில் திலகமிட்ட போதும் இதோ சற்று முன் தன் கையைப் பற்றி அழைத்துச் சென்ற போதும் தீண்டிய தீண்டல்கள் சில நொடி ஸ்பரிசம் மரணம் வரை மறக்குமா?

நான் நல்லவள் என்று தெரிந்தால் இந்த வெறுப் பாவது மறையுமே. வெறுப்பு மறைந்தால் போதும். இதோ இதே போல் தனி அறையிலேயே காலம் முழு வதும் வாழ்ந்து விடலாமே. அப்பாவும் தன் மகள் நல மாய் வாழ்கிறாள் என திருப்திபட்டுக் கொள்வார். என்ன ஆனாலும் இனி இந்த வீடு தானே எனக்கு நிரந்தரம். தாயே மீனாட்சி! எனக்கு பொறுமையைக் கொடு. என் கணவரின் மனதை மாற்ற ஒரு வழியைக் காட்டு. என்ன செய்து என் மீதுள்ள வீண்பழியை நீக்குவேன். தாயில்லாப் பெண்ணாகிய எனக்கு நீதானே தாய்'' - கண்கள் கலங்கியது.

மீண்டும் வந்து படுக்கையில் அமர்ந்தாள். இலவம் பஞ்சு மெத்தைதான் என்றாலும் முள்ளாய் குத்துகிறதே. வெறுப்போடு படுக்கையில் சாய்ந்தபோது போன் வீரிட்டது. யாராக இருக்கும். நாம் எடுக்கலாமா? தயங் கியபோதே போன் அமைதியானது. தாயம்மா படியேறி வந்தாள். அறைக்குள் நுழையாமல் படிகளில் நின்று கொண்டே, ''அம்மா! போன் உங்களுக்குத்தான். உங்க அப்பா பேசுறாங்க'' - என்றதும் விரைந்து ஓடிவந்தாள். ''அப்பாவா! இதோ வந்திட்டேன்.''

''அம்மா! மெதுவாம்மா. நீங்க கீழே வரவேண்டாம்மா. உங்க ரூம்ல இருக்கிற போனை எடுத்துப் பேசுங்க. நான்

வெச்சிடுறேன்'' - என்றதும் அறைக்குள் நுழைந்து அந்த ஆகாய வண்ண மீன் வடிவ போனின் ரிஸீவரை எடுத்து காதில் வைத்தாள் தாமரை.

டொக்கென்று தாயம்மா போனை வைத்ததும் அப்பாவின் குரல் கேட்டது. ''அம்மா தாமரை! நல்லா இருக்கியாம்மா. எந்தங்கமே. பத்திரமாய் போய் சேர்ந்தீங்களாம்மா. அப்பாவுக்கு தூக்கமே இல்லம்மா. நீங்க எப்பப் போய் சேர்ந்தீங்களோன்னு ஒரே பயம். மாப்பிள்ளை உங்கிட்ட பிரியமாய் இருக்கிறாரா? நன்றாகப் பேசுகிறாரா? கொஞ்சம் கோபமா பேசினாலும் நீ பொறுத்துப் போம்மா. அன்பா நடந்துக்கம்மா. அன்பால எதையும் சாதிக்க முடியும். மாப்பிள்ளைக்கு அக்கா மேல கோபமிருக்கும். அதைக் காட்ட உன் மேல பாயலாம். நீதாம்மா பொறுத்துப் போகணும். கொஞ்ச நாள் போனா உன் அன்பும் உன் மனசும் அவருக்குப் புரியும். உன்னை ஏத்துப்பாரும்மா'' - அவர் பேசிக் கொண்டே போக, 'ஐயோ! அப்பா அவருக்கு அக்கா மேல கோபமில்லப்பா. என் மீதும் உங்கள் மீதும்தான் கோபம். கோபம் மட்டுமில்லப்பா. வெறுப்பு, ஆத்திரம், கசப்பு எல்லாமே நிறைஞ்சு இருக்குப்பா. நிச்சயமாய் என்னை ஏற்றுக்கொள்ள மாட்டாரப்பா' என கத்திக் கதற வேண்டும் போல் தோன்றிய வேகத்தை அடக்கிக் கொண்டாள்.

''அப்பா! நீங்க நினைக்கிற மாதிரி இல்லப்பா. அவர் ரொம்ப அன்பா நடந்துக்கிறார். என்னோட பசி அறிந்து மதுரையிலேயே என்னை ஹோட்டலுக்குக் கூட்டிட்டுப் போயி வற்புறுத்தி சாப்பிட வைத்தார். பிறகு சென்னை வரும் வரை பேசிக் கொண்டே வந்தாரப்பா. உங்களிடம் கூட பேசாமல் வந்து விட்டதற்காக ரொம்ப வருத்தப்



பட்டார்.'' - சரளமாய் பொய்யை வாரியிறைத்தாள். மறுமுனையில் அப்பா ஆனந்தக் கூத்தாடினார்.

''பார்த்தியாம்மா! நான் சொல்லல. மாப்பிள்ளை தங்கமானவர்னு எனக்குத் தெரியும்மா. உன் நல்ல மனசுக்கு எல்லாமே நல்லதாவே நடக்கும். மாப்பிள்ளை கிட்ட கொடும்மா. ரெண்டு வார்த்தை பேசிடுறேன். பாவம் அவர் வருத்தப்பட்டாரே'' - தந்தை கேட்டதும் சற்று தடுமாறினாள்.

''இல்... இல்லப்பா. வந்து... நேத்து கார் ஓட்டிட்டு வந்த டயர்ட்ல இப்பத்தான் தூங்குறார். நாங்கூட இப்பத்தான் எழுந்தேன். எழுப்பவாப்பா'' - தயக்கமாய் கேட்டாள் பதறிய உள்ளத்தை மறைத்தவாறே.

''அய்யோ வேண்டாம்மா. வேண்டாம். நல்லாத் தூங்கட்டும். கல்யாண அலைச்சல். அதோட காரையும் ஓட்டிட்டுப் போனாரே. அவரை தொந்தரவு செய்ய வேண்டாம்மா. எனக்கு நீ சொன்ன வார்த்தைகளே போதும்மா. ரொம்ப பயந்து போயிருந்தேம்மா. எப்படியோ நீங்க நல்லாயிருந்தா அதுவே எனக்குப் போதும்மா. மாப்பிள்ளைய நல்லா கவனிச்சுக்கம்மா. அம்மா இருந்தா எல்லாம் சொல்லிக் கொடுத்திருப்பா. அப்பாவுக்கு தெரிஞ்சத சொல்றேம்மா. புரியுதாம்மா.''

''புரியுதுப்பா. நீங்க சொன்ன மாதிரியே நடந்துக்கிறேம்பா'' - நெஞ்சு விம்மியது.

''ம். இந்த புத்தி ஏன் மூத்தவளுக்கு இல்லாமப் போச்சு? இப்ப எங்க இருக்காளோ. எப்படி இருக்காளோ. யாரோட போனான்னே தெரியலியேம்மா. அவளை நினைச்சாலே எனக்கு நெஞ்சையெல்லாம் அடைக்கிறாப்போல இருக்கும்மா.''

''ஐயோ! அப்பா நம்மைப்பத்தி கவலைப்படாம போனவளைப் பத்தி கவலைப்பட்டு உங்க உடம்பை கெடுத்துக் கொள்ளாதீங்கப்பா. எனக்கு நீங்கள் வேண்டுமப்பா. எனக்குன்னு வேற யாரு இருக்கா'' - சொல்லும்போதே விம்மினாள் தாமரை.

''அம்மா. அழாதேம்மா. இப்படியெல்லாம் பேசக் கூடாது. மாப்பிள்ளை கேட்டால் என்ன நினைப்பார்? சரிம்மா நான் நல்லா இருக்கேன். இனிமேல் அவளைப் பற்றி பேசி உன் மனதை சங்கடப்படுத்த மாட்டேன். அவள் துணிச்சல்காரி. எப்படியும் பிழைத்துக் கொள் வாள். எனக்கு உன்னைப் பத்தின பயம்தாம்மா. சூதுவாது தெரியாத பெண்ணாயிற்றே நீ. உன்னை உன் சம்மதம் கூட அறியாமல் மணமுடித்து அனுப்பி விட்டேனே. ஏம்மா உனக்கு.. உனக்கு மாப்பிள்ளையே நிஜமாகவே பிடிச்சிருக்காம்மா. இல்லே அப்பாவுக்காக போனி யாம்மா'' - தயங்கித்தான் கேட்டார் மீனாட்சி சுந்தரம். அப்பாவின் மனக்கலக்கம் புரிந்தது.

''அப்பா! திருமணத்திற்கு ஒத்துக் கொண்டது உங் களுக்காகத்தான். மறுக்கவில்லை. ஆனாலும் அவரை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டுதான் மணவறைக்குச் சென்றேன். சட்டையை மாத்துற மாதிரி பொண்ணை மாற்ற மாட்டேன் என கோபித்தாரே அப்போதே என் மனம் அவரை முழுதாய் ஏற்றுக் கொண்டு விட்டதப்பா. அந்த வார்த்தையும் அவரது கோபமும் அவரை உத்தமர் என்று சொல்லிவிட்டதே. இதைவிட வேறென்ன வேண்டும். நான் முழு மனதோடு அவருடன் வாழ் கிறேன் அப்பா. இனி என்னைப் பற்றிக் கவலைப் படாமல் நீங்கள் நிம்மதியாக இருக்க வேண்டும். நான்



லீவு கிடைக்கும்போது அவரை அங்கு அழைத்து வரக் கேட்கிறேன். வந்தால் அவருடன் தான் வருவேன். சரியாப்பா. வைத்துவிடவா.''

''சரிம்மா. அப்பா அப்புறம் பேசுறேன். உடம்பைப் பார்த்துக்கம்மா. வேளா வேளைக்கு சாப்பிடும்மா'' - என்றவாறு போனை வைத்துவிட ரிஸீவரை அதனிடத் தில் வைத்துவிட்டு வெடித்து அழ ஆரம்பித்தாள் தாமரை. முதன் முறையாய் தன் தந்தையிடம் பொய் பேசியதை எண்ணி தன் வெகுளித் தந்தையை எண்ணி தன் கணவனின் மனதில் உள்ள வெறுப்பை எண்ணிக் குமுறி அழ ஆரம்பித்தாள்.

கீழே ஹாலில் ரிஸீவரை அதனிடத்தில் வைக்கவும் தோன்றாமல் உறைந்து போய் நின்றான் சூர்யா. இதுவரை கேட்ட உரையாடல்கள் அவனை சாட்டை யாய் தாக்கிக் கொண்டிருந்தன. ஆபீஸிற்குக் கிளம்பிய வன் அவசரத்தில் தனது செல்லை எடுக்காமல் போய் விட பாதியிலேயே திரும்பி வந்து போனைத் தேடிக் கொண்டிருந்தபோது எங்கே வைத்தோம் என்பதே சுத்தமாய் மறந்துபோக வீட்டுத் தொலைபேசியிலிருந்து தனது எண்ணுக்கு முயன்று பார்ப்போம் என ரிஸீவரை எடுத்து காதிற்குக் கொடுத்தவன் தாமரை பேச ஆரம் பித்த முதல் வார்த்தையிலிருந்து கடைசிவரை அனைத் தையும் கேட்டு விட்டு நிலை குலைந்து போனான்.

உண்மை எதையும் அறியாமல் ஆராயாமல் தன்னை நம்பி வந்த பெண்ணை என்னவெல்லாம் பேசிவிட் டோம். கொஞ்சம் நிதானமாய் கையாண்டு இருக்க வேண்டும். சொல்லாத சொல்லுக்கு விலையேதும் இல்லை என்பது எத்தனை உண்மையான வார்த்தை.

இனி என்னை அவள் ஒவ்வொரு முறை பார்க்கும்போதும் நான் பேசிய பேச்சுக்கள் தானே நினைவு வரும் அவளுக்கு. ஏன் ஏன் அப்படிப் பேசினேன். தப்பு, பெரிய தப்பு. பட்பட்டென்று வாயில் அறைந்து கொண்டான்.

இனி எப்படி அவள் முகத்தில் முழிப்பேன். ஐயோ நான் பேசியபோது எப்படி அதிர்ந்து துடித்துப் போனாள். எப்படி அவளை சமாதானம் செய்வேன். மன்னிக்கும் படியாகவா பேசினேன். எப்படி மறப்பாள். எப்படி என்னை ஏற்றுக்கொள்வாள்.

''சின்னய்யா போனை சாப்பாட்டு மேஜை மேலேயே வெச்சிட்டுப் போயிட்டீங்க. மணி அடிச்சுகிட்டே இருக்கு'' - என்றவாறு தாயம்மா வர, அவசரமாய் போனை அதனிடத்தில் சாத்திவிட்டு செல்போனை உயிர்ப்பித்து ''பிரபு, இதோ வந்திட்டே இருக்கேன்'' - என்றவாறே வெளியேறினான்.

## 8

இரவு வீடு திரும்புகையில் வெகு நேரமாகி விட தாயம்மா வாசலிலேயே அமர்ந்திருந்ததைப் பார்த்து ஆச்சர்யமானான் சூர்யா. ''என்ன தாயம்மா! இன்னும் படுக்கப்போகவில்லையா. அய்யனார் எங்கே?'' - காரிலிருந்து இறங்கியவாறே கேட்டவனிடம் சட்டென எழுந்து நின்று, ''அவரு இப்பத்தான் உறக்கம் வருதுன்னு படுக்கப் போனாருய்யா. நான்தான் நீங்க வந்தப்புறம் வர்றேன்னு சொல்லிட்டு இருந்தேன்'' - என்றாள்.



''என்ன தாயம்மா இது புதுப்பழக்கம்? நான்தான் உன் வேலை முடிஞ்சதும் கிளம்பிடு. நான் போட்டு சாப்பிட்டுக்கிறேன்னு சொல்லியிருக்கேனே. பிறகேன் எனக்காக வெயிட் பண்ணி உன் தூக்கத்தைக் கெடுத்துக் கொள்கிறாய். போ.. போ. அய்யனார் தேடப் போகிறான்'' - காரைப் பூட்டி சாவியை எடுத்துக் கொண்டு வீட்டின் உள்ளே செல்ல முயன்றவனை, ''சின்னய்யா ஒரு நிமிடம்'' - என தயக்கமாய் நிறுத்தினாள். ''என்ன?'' - என்றான் வியப்பாய்.

''ஐயா! அம்மா காலையில இருந்து ஒரு பொட்டு தண்ணி கூட சாப்பிடலை. கதவைத் திறந்து வெளியே வரவேயில்லை. மத்தியானமா குரல் கொடுத்தேன். பசிக்கல்லன்னுட்டாங்க. இப்பவும் அதையே சொல்லிட்டாங்க. அதான் நீங்க வந்த உடனே சொல்லிட்டுப் போலாம்னு காத்திட்டு இருந்தேன்யா.''

ஒரு நிமிடம் அமைதியாய் நின்றான். ''அவங்க அப்பா ஞாபகம் வந்திடுச்சு போல. சரி தாயம்மா. அவளை நான் சாப்பிட வைக்கிறேன். நீ போ. நீங்க ரெண்டு பேரும் சாப்பிட்டாச்சா?'' - என அக்கறையாய் கேட்டவனிடம், ''இப்பத்தான்யா ஆச்சு. சரிங்கய்யா. நான் போறேன். அம்மாவுக்கு காபி பால் எதுவும் சூடு பண்ணனும்னா ஒரு குரல் கொடுங்கய்யா. ஓடியாந்திடுறேன்'' - என்றாள்.

''அதையெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். நீ போ'' - என அவளை அனுப்பிவிட்டு கதவைப் பூட்டி விட்டு டைனிங் டேபிளில் இருந்த சாப்பாட்டை தட்டில் எடுத்துக் கொண்டு படிகளில் ஏறி மாடிக்குச் சென்றான். ''தாமரை! கதவைத் திற'' - என குரல் கொடுத்ததும் உள்ளே விளக்கு எரிந்தது. கொலுசொலியைத் தொடர்ந்து

கதவைத் திறக்கும் ஒலி கேட்டது. கையில் சாப்பாட்டு தட்டுடன் நின்றவனைக் கண்டதும் ஏதும் பேசாமல் உள்ளே போய் கட்டிலில் அமர்ந்து கொண்டாள். அமைதியாக உள்ளே நுழைந்தவன் அவள் முகத்தை ஆராய்ந்தான். முகம் முழுவதும் கன்றிச் சிவந்திருந்தது. இமைகள் தடித்து வீங்கியிருந்தது. வெகு நேரம் அழுது களைத்திருந்தாள் தாமரை. ஒரே நாளில் நைந்து போயிருந்தாள். உதடுகள் வறண்டு கிடந்தது. அன்றலர்ந்த மலர்போல் நேற்று இருந்தவள் இன்று சூறாவளியாய் சுழன்றடித்து வாடிய மலராய் கிடந்தது மனதை வதைத்தது. காரணம் நான்தானே. பாவம்! இவள் அக்கா செய்த தவறுக்கு இவள் ஏன் தண்டனை பெற வேண்டும். கள்ளமின்றி இருக்கும் இந்த முகத்தைப் பார்த்தே நான் கண்டு பிடித்திருக்க வேண்டும். ஆத்திரமும் அவசரமும் தன் கண்ணை மறைத்து விட்டதோ. மனம் நெருஞ்சி முள்ளாய் மாறி குத்தியது.

நிமிர்ந்தும் பாராமல் தலை கவிழ்ந்து அமர்ந்திருந்தவளைப் பார்த்து முதன் முதலாய் மனம் கனிந்தான். ''தாமரை! காலையில இருந்து சாப்பிடலியாமே. ஏன்? உனக்கு என்ன கோபம் இருந்தாலும் அதை என்னிடம் மட்டும் காட்டு. சாப்பாடு என்ன செய்தது பாவம். அதனிடம் ஏன் உன் கோபத்தைக் காட்டுகிறாய்? முதலில் சாப்பிடு'' - என்றவாறு தட்டை அவள் முன் நீட்டினான்.

''எனக்கு சாப்பாடு வேண்டாம்.''

''ஏன்? ஏன் வேண்டாம்?''

''இது எனக்கு நானே கொடுத்துக் கொள்ளும் தண்டனை. தயவு செய்து என்னைத் தொந்தரவு செய்ய வேண்டாம்'' - அழக்கூடாது என்ற வைராக்யத்துடன் பேசினாலும் தொண்டை அடைக்க நிறுத்தினாள்.



தட்டை டீபாயின் மேல் வைத்துவிட்டு அவளருகில் அமர்ந்து கொண்டான் சூர்யா. அதிர்ந்து விலகினாள். நிற்க முடியாமல் தடுமாறியவளைத் தோள் பற்றி அமர வைத்தான். ''ஏன் இப்போ இத்தனை கோபம்? முதல்ல சாப்பிடு. அப்புறம் பொறுமையா பேசிக்கலாம்'' - என்றான் இதமாய்.

''அதான் எல்லாம் பேசி விட்டீர்களே. இன்னும் பேச வேண்டுமா? ஐயோ சாமி. இதற்கு மேல் எந்தப் பேச்சையும் என்னால் தாங்க முடியாது. என்னை இப்படியே விட்டுவிடுங்கள். பட்டினி கிடந்தே செத்து விடுகிறேன். தயவு செய்து பேசியே கொன்றுவிடாதீர்கள். என்னைக் கொன்ற பாவம் உங்களுக்கு வேண்டாம். என்னை விட்டு விடுங்கள். நான்... நான்...'' அதற்கு மேல் பேச முடியாமல் தவித்தாள்.

''ஸாரிம்மா. வெரி ஸாரி. நான் அப்படிப் பேசியிருக்கக் கூடாது. தவறு மிகப் பெரிய தவறு. என்னை மன்னித்து விடு. இனி இப்படி நடக்காது. நான் அப்படிப் பேசுபவன் அல்ல தாமரை. என் மனதை உறுத்திய கேள்வி. நான் கேட்ட விதம் தவறுதான். ஆனால் என் நிலையில் இருந்து பார். இரவு வரை கலகலப்பாக இருந்த பெண் திடீரென எப்படி மாயமானாள்? லவ் மேட்டர் எதுவும் இருந்தால் எப்படி என்னிடம் சகஜமாகப் பேசுவாள். எந்தவித வெறுப்போ மறுப்போ இல்லாமல் என்னைப் பார்த்த உடன் சம்மதம் சொன்னாளே. என்னிடம் போனில் பேசும்போதுகூட வேற மாதிரிதான் பேசினாள். அதனால்தான் கொஞ்சம் தடுமாறிவிட்டேன். அதுவும் உன் அப்பா நான் மறுத்தும் ஒரே பிடியாய் நின்று உன்னை மணக்க வைத்து விட்டாரே அது சந்தேகத்தை அதிகப் படுத்திவிட்டது.''

''என் அப்பா செய்த ஒரே தவறு அதுதான். இத்தனை சிரமப்பட்டு செலவு செய்து திருமணம் நின்று போனால் ஊருக்குள் தலை நிமிர முடியாமல் போய்விடும் என்ற பதைப்பு ஒருபுறம். ஓடிப் போனவளின் தங்கை என்ற பட்டத்தை சுமந்து கொண்டு தன் பெண் காலம் முழுவதும் பட்ட மரமாய் இருந்து விடுவாளோ என்ற பரிதவிப்பு ஒருபுறம். ஒரு அப்பாவித் தந்தையால் வேறென்ன செய்ய முடியும். அதனால்தான் தேடிக் கண்டு பிடித்த மாப்பிள்ளை மீதும் மாப்பிள்ளை வீட்டார் மீதிருந்த நம்பிக்கையாலும்தான் அந்தக் காரியத்தை செய்துவிட்டார். அதற்கு ஒத்துக் கொண்டது என் தவறுதான். தந்தையின் மனதை நானும் நோகடிக்க மனமின்றி சம்மதம் தெரிவித்துவிட்டேன். அதுதான் நான் செய்த மிகப் பெரிய தவறு. இன்று.. இன்று என் அப்பாவிடம் சரளமாய் பொய் சொல்லி என் அப்பாவை ஏமாற்றியிருக்கிறேன். எவ்வளவு பெரிய தப்பு. என் வாழ்வில் இதுவரை யாரிடமும் எதற்கும் பொய் பேசியதில்லை. ஆனால் இன்று என் அப்பாவிடமே பொய் சொல்லி...'' - முகத்தை மூடிக் கொண்டு அழுதாள் தாமரை.

பரிதவித்துப் போனான் சூர்யா. ''ப்ளீஸ் தாமரை இப்படி அழாதே. அதுதான் மன்னித்து விடு என்றேனே. ப்ளீஸ் அழாதே. போனதெல்லாம் போகட்டும். இனி இப்படி எதுவும் நடக்காது. நான் வேண்டுமானால் மாமாவிடம் மன்னிப்பு கேட்டு விடுகிறேன். இப்படி சாப்பிடாமல் கிடந்து உன்னை வதைத்துக் கொள்ளாதே. வேண்டுமானால் ஏன்டா அப்படிப் பேசினேன்னு கேட்டு ரெண்டு அடி வேண்டுமானாலும் அடித்துவிடு. ப்ளீஸ் அழாதே.''



விலுக்கென நிமிர்ந்தாள். பாவமாய் முகத்தை வைத்துக் கொண்டு நிற்கும் கணவனைக் கண்டதும் இளநகை பூத்தாள். ''ஹப்பாடி! லைட்டா சிரிப்பு வருது. நீ என்ன இம்சை அரசியா. என்னை அடித்துக் கொள் என்றதும் சிரிக்கிறாயே. சரி சரி. முறைக்காதே. ப்ளீஸ்மா சாப் பிடும்மா'' - தட்டை எடுத்துக் கையில் கொடுத்தான். கண்ணீரைத் துடைத்துக் கொண்டு,

''நீங்க.. நீங்க சாப்பிட்டீங்களா?'' - என்றாள் மெல்ல.

''நீ சாப்பிடு முதல்ல. நான் அப்புறம் சாப்பிடுறேன்'' - என்றதும் பதறி எழுந்தாள் தாமரை.

''அச்சோ! மணி பனிரெண்டைத் தாண்டுதே. வாங்க சாப்பிடலாம். நான் சாப்பாட்டை சூடு பண்ணிடுறேன்'' - என்றவாறு சாப்பாட்டு தட்டுடன் வேகமாய் கீழிறங்கி ஓடினாள். ஒரு நிம்மதிப் பெருமூச்சுடன் அவளைப் பின் தொடர்ந்தான்.

முதன் முதலாய் தன் கணவனுக்கு பரிமாறுகிறோம் என்ற பூரிப்பில் தாமரையின் வயிறு நிறைந்தது. அதே நிலைதான் சூர்யாவுக்கும். மனைவி கையால் சாப்பிடு வதில் தனி சுகம் இருப்பதை உணர்ந்தான். ''போதும் அன் டைம்ல இதுக்கு மேல சாப்பிட முடியாது. சாப் பிடவும் கூடாது'' - என்றவாறே அவளுக்கு பரிமாறி சாப் பிட வைத்தான். கூச்சத்துடன் அவள் சாப்பிடச் சாப்பிட்டு முடிக்கும் வரை அமைதியாய் காத்திருந்து பிறகு ''பாத்திரமெல்லாம் இருக்கட்டும் தாமரை. காலையில தாயம்மா வாஷ் பண்ணிடுவா. நீ மேல போ. நான் லைட்டை ஆப் பண்ணிட்டு வர்றேன்'' என்றவனிடம் ''ம்'' - என தலையசைத்து விட்டுப் படியேறினாள்.

இரவு விளக்குகளை எரிய விட்டு மற்றவற்றை அணைத்து விட்டு மேலே வந்தவன், ''நீ படுத்துக்கோ தாமரை. கண்டதையும் எண்ணி மனசைப் போட்டுக் குழப்பிக்காதே. நல்லாத் தூங்கு. சரியா? ஐ'ம் ஸோ டயர்ட். ஓ.கே. குட் நைட்'' - மென்மையாய் அவள் தலையை வருடிவிட்டு படுக்கச் செய்து ஏஸியை மிதமான குளிரில் ஓடவிட்டு விளக்கினை அணைத்துவிட்டு கதவை சாத்திக் கொண்டு அவன் வெளியேறும் வரை அவனை விட்டு பார்வையை விலக்கவில்லை தாமரை. அவன் சென்றதும் தான் உணர்வுக்கு மீண்டாள். இது கனவில் லையே, எப்படி எப்படி இந்த மாற்றம். காலையில் அத்தனை வெறுப்பாய் நெருப்பைக் கொட்டியவர் இப்போது எப்படிக் குளிர் தென்றலாய் மாறினார்.

இது என்ன மாயம்? சட்டென கழுத்தைத் தொட்டுப் தாலியை எடுத்து கண்களில் ஒற்றிக் பார்த்தாள். எல்லாம் உன் மாயம்தானா? என் தாய் கொண்டாள். மீனாட்சி தான் அவர் மனதை மாற்றினாளா? எப்படியோ இந்த மாற்றமும் மென்மையான பேச்சும் இனிமையாய் இருக்கிறதே. இத்தனை நேரமும் மனதை அழுத்திய பாரம் இலவம்பஞ்சாய் பறந்து போய்விட்டதே. அப்பா இருந்தால் ரொம்ப மகிழ்ந்திருப்பார்'' - மனம் இலே சாகிவிட தூக்கம் வந்து தழுவியது. இனிய கனவுகளோடு உறங்க ஆரம்பித்தாள்.

வாரம் ஒன்று உருண்டோடி விட தாமரை இன்பத்தின் பூரிப்பில் பேரழகாய் ஜொலித்தாள். ''தாயம்மா! இன் னிக்கு ஸன்டே. அவர் வீட்லதானே இருப்பாரு. பிரி யாணி பண்ணலாமா'' - உற்சாகமாய்க் கேட்டவளைப் பார்த்து சந்தோஷமாகவே தலையசைத்தாள் தாயம்மா.



''தாராளமா செய்யுங்கம்மா. ஐயா விரும்பிச் சாப்பிடு வாக. எனக்குத்தான் இதெல்லாம் செய்ய வராது. அத னால வாரத்தில ஒரு நாள் ஹோட்டல்ல இருந்து வரச் சொல்லியிருவாங்க. அன்னிக்கு எனக்கும் வேலை கிடையாது.'' - பெருமையாய் சொல்லிக் கொண்டிருந் தாள் தாயம்மா.

''ஏன் தாயம்மா. நீ எத்தினி வருஷமா இங்க வேலை பார்க்கிற. அய்யனார்தான் உம் புருஷனா?'' - தேவையான பொருட்களை வாங்க பேப்பரும் பேனாவும் எடுத்துக் கொண்டே கேட்டாள் தாமரை.

''ஆமாங்கம்மா. நான் பதினைஞ்சு வயசிலயே வேலைக்கு வந்திட்டேம்மா. இப்ப நாங்க செய்யிற வேலையை என் அப்பனும் ஆத்தாளும் செஞ்சிட்டு இருந்தாங்க. அப்போ வீடு இத்தனை பெரிசில்லை. வேற மாதிரி இருந்தது. அதுக்கு அப்புறம்தான் இந்த வீடு கட்டுனாங்க. இத்தை கட்டும்போதே இப்ப நாங்க இருக்கிற அவுட் அவுஸும் கட்டிட்டாங்க. என் ஆத்தா சாகும்போதுகூட பெரியய்யாவும் சின்னய்யாவும் தான் எல்லாத்தையும் பார்த்துக்கிட்டாங்க.

''அப்புறம் என் அப்பன் அய்யாவோட தோட்ட வீட் டுக்கு போயி தங்கியிருந்து தோட்ட வீட்டைப் பார்த் துட்டு இருக்குது. இவரு என் தாய்மாமன். அப்பன் போன பிறகு இவருதான் செடிகொடிகளை புறா பறவைகளை பார்த்துகிட்டாரு. இப்ப ரெண்டு வருஷம் முன்னதான் எங்களுக்கு கல்யாணம் பண்ணி வெச்சாங்க. இங்கேயே குடித்தனம் நடத்துறோம்.

''பெரிய ஐயா நாலஞ்சு வருஷம் முன்னதான் வெளி நாட்ல போய் கம்பெனி வெச்சாங்க. அது ரொம்பப்

பிரபலமாம். ஏதோ தோல் கம்பெனியாம். நல்ல லாபமாம். அதனால அய்யா அங்கேயே தங்கிட்டாங்க. கொஞ்ச நாள் கழிச்சி அம்மாவும் அங்கே போயிட்டாங்க. போகுமுன்னாடி சின்னய்யாவுக்கு எப்படியாவது கல்யாணம் பண்ணி வச்சிடனும்னு பேசிப் பார்த்தாங்க. சின்னய்யா மசியல. எப்படியோ இத்தனை வருஷமா போக்குக் காட்டிட்டு பாட்டிம்மா சொன்ன பிறகுதான் சம்மதிச்சாங்க. ஐயா இத்தினி வருஷம் காத்திருந்ததும் நல்லதுக்குத்தான். இல்லேன்னா நீங்க கிடைச்சிருப்பீங்களா?'' - வாயெல்லாம் பல்லாக தாயம்மா சொல்ல சிரித்துக் கொண்டாள் தாமரை.

''சரி. சரி. இந்தா இதில பிரியாணி செய்ய தேவைப்படும் பொருள் எல்லாம் எழுதியிருக்கிறேன். இந்தா பணம். பை எடுத்துக்கோ. ஐய்யனார் கிட்ட சொல்லி அனுப்பு. கறி நல்லதா பார்த்து வாங்கிட்டு வரச் சொல்லு'' - தாயம்மாவை விரட்டிவிட்டு காலை நேர சமையலில் ஈடுபட்டாள்.

மனம் உற்சாகமாய் இருக்கும் வரை வேலையும் சுறுசுறுப்பாகத்தான் நடந்து கொண்டிருக்கிறது. பரபரவென உருளைக்கிழங்கு குருமாவை தயாரித்துவிட்டு பூரிக்கு மாவைப் பிசைந்து எலுமிச்சை அளவில் உருண்டையாக்கினாள். அவர் எழுந்த பின் பூரியைச் செய்யலாம் என்று முடிவுடன் பாலைக் காய்ச்சி பக்குவமாய் காபி கலந்து கொண்டு மாடியேறினாள். அறைக் கதவை வெறுமனே சாத்துவது பழக்கமாகி விட்டதால் மெல்ல கதவைத் தள்ளி திறந்து உள்ளே நுழைந்தாள். ஒருக்களித்துப் படுத்து இன்னும் உறங்கிக் கொண்டிருந்தான் சூர்யா. இரவெல்லாம் லாப் - டாப்பில் போராடிக்



கொண்டிருந்ததைப் பார்க்கத்தான் செய்தாள். வெகு நேரம் விளக்கு அணைக்கப்படவில்லையே. என்னதான் இயல்பாய் பேசிப் பழகிச் சிரித்துக் கொண்டாலும் படுக்கை தனியறையிலே கிடந்தது. தாமரை அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவும் இல்லை. ஒரே வீட்டில் இருந்து கொண்டு ஒருவருக்கொருவர் வெறுத்து ஒதுங்குவதைவிட இது எவ்வளவோ மேல். அப்பாவிடமும் தைரியமாய் உண்மையை மட்டுமே பேச முடிகிறது. நேற்று ஏழு பவுனில் ஸ்டெப் செயின் வாங்கித் தந்தார் என்றதும் அப்பாவிற்கு சந்தோஷம் தாள முடியவில்லை. திக்கு முக்காடிப் போனார். கோவிலுக்கு அழைத்துப் போவதை ஷாப்பிங் போவதை எல்லாவற்றையும் சொல்லி மகிழ முடிகிறது.

இது போதும். பட்டினி கிடந்தவனுக்கு பழைய கஞ்சியே அமிர்தம். அதிலயே மனம் நிறைந்து கொண்டாள். தினமும் மூன்று வேளையும் தன்னுடனே இருந்து சாப்பிட ஓடி வந்துவிடுவான். காலையில் தாமரை வந்து எழுப்பும் வரை எழுந்திருப்பதில்லை. இது போதாதா தனக்கு. முகம் முழுக்க பூரிப்புடன் கணவனைத் தொட்டு எழுப்பினாள்.

''என்னங்க, என்னங்க காபி கொண்டு வந்திருக்கேன். எழுந்திருங்க.''

முனங்கலுடன் புரண்டு படுத்தான். ''ப்ளீஸ்டா. இன்னும் ஒரு ஒன் அவர்.''

''என்னது ஒன் அவரா. மணி ஒன்பது. பத்து மணிக்கு பிரபு வர்றதா சொன்னீங்களே. எழுந்து குளிச்சு சாப்பிட வேணாமா. எழுந்திருங்க'' - உலுக்கினாள்.

''தாமரை ப்ளீஸ். ஒரு அருமையான கனவு. அதைக் கலைச்சிடாதே. ஐ லைக் த ட்ரீம்'' - கண்களைத் திறக்காமலே சொன்னவனை உற்றுப் பார்த்தாள். முகம் முழுக்க புன்னகையோடு கண்டு கொண்டிருந்த கனவை அனுபவித்துக் கொண்டிருந்தான். அந்தப் புன்னகையில் தன்னை மறந்து லயித்திருந்தாள் தாமரை. யாரையும் சாய்த்து விடும் புன்னகை. இயல்பாகவே சிரித்த முகம், புன்னகை, சிரிப்பு இவற்றிற்கு மதிப்பு உண்டு. புதியவர்கள் என்றாலும் சிரித்த முகத்தோடு வரவேற்றால் உடனே நட்பாகி விட முடியும். சிடுசிடுவென விழுபவர்களிடம் கூட மெலிதாய் புன்னகை செய்தால் அவர்களும் கடுப்பை மறந்து பதிலுக்கு முறுவலிப்பர். இது இயல்பு. ஆனால் இந்தப் புன்னகை ஆயிரம் வால்ட் பவருக்குச் சமம்.

தோல் பொருட்களை ஏற்றுமதி செய்யும் ஒரு சாதாரண கம்பெனி எப்படி தனது கிளைகளை நாடு முழுவதும் பரப்பி வேர்விட்டு கம்பீரமாக நிற்கிறதாம். இந்த சிரிப்பு, இந்த மென்மையான பேச்சு, கம்பீரம், நுனிநாக்கின் ஆங்கிலம். தெளிவான கூர்மையான எதையும் துல்லியமாய் எடை போட்டு விடும் பார்வை. கூடவே இடைவிடாத உழைப்பு. தன்னம்பிக்கை. எதையும் சாதித்து விடும் துணிவு. இவை போதாதா ஒன்றை பத்தாக்க. தன் கணவனை விழியெடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தவள் அவனது உதட்டில் லேசாக அசைவு தெரிய சட்டென கூர்மையானாள்.

மெலிதான முனகல். காதில் விழவில்லை. ஆறிப் போன காபியை டேபிளின் மீது வைத்துவிட்டு கட்டிலின் நுனியில் அமர்ந்து அவனது உறக்கம் கெடாமல் உன்னிப்பாய் கவனித்தாள். ம்ஹூம். காதில் விழ



வில்லை. மெல்ல குனிந்து அவனது உதட்டருகே காதை வைத்தாள். இப்போது தெளிவாகக் கேட்டது. தன் கணவன் தூக்கத்தில் ஏதோ ஒரு பெண்ணுடன் சல்லாபித்துக் கொண்டிருந்தான். குப்பென உஷ்ணம் ஏற யார்? யாரவள், மீண்டும் குனிந்து செவிடுமடுத்தாள். அவன் உச்சரித்த பெயரைக் கேட்டதும் குப்பென சிவந்தாள். இதயம் பன்மடங்கு துடிக்க ஆரம்பித்தது. தன் இதயத் துடிப்பு அவன் காதில் கேட்கக் கூடுமோ என அஞ்சியவாறே விலகாமல் கேட்டுக் கொண்டிருந்தாள்.

''ப்ளீஸ்! தாமரை ஒன்றே ஒன்று. கன்னத்தில் கொடுத்தால்கூட போதும். நான் வேண்டுமானால் வட்டியோடு திருப்பித் தந்து விடுகிறேன். ப்ளீஸ்மா. என்னைப் பார்த்தா பாவமா இல்லியா. ஏய் ஓடாதே. விட மாட்டேன் தந்துவிட்டுப் போ'' - கனவில் கூட தன் கணவன் தன் பெயரை உச்சரிக்க தாமரை நெக்குருகிப் போனாள். தாலி கட்டிய மனைவி நான் உங்கள் அருகிலேயே இருக்கின்றேனே. என்னிடம் உங்களுக்கில்லாத உரிமையா? நான் உங்களுடையவள் சூர்யா. உங்களுக்கு உங்களுக்கு மட்டுமே சொந்தமானவள். என்னை ஏற்றுக் கொள்ள என்ன தயக்கம்? எது தடுக்கிறது உங்களை? நான் உங்களை எப்போதோ ஏற்றுக் கொண்டேனே சூர்யா. நான் ஏன் உங்களை விட்டு விலகியிருக்க வேண்டும். இதோ... இதோ தருகிறேன். கனவில் ஏன்... நேரிலேயே தருகிறேன். மூடிய விழிகளுக்குள் அவன் இன்னமும் தாமரையைக் கொஞ்சிக் கொண்டிருக்க, கலைந்திருந்த தலைமுடியைக் கோதினாள். மெல்ல நெற்றியில் முத்தமிட்டாள். மூடியிருந்த இரு விழிகளின் இமைகளின் மீதும் முத்தமிட்டாள். அவன் கேட்ட கன்னத்தில் முத்தமிட்ட போது அவனது முனகல் நின்று விட்டது.

அவளது சந்தன பவுடரின் மணமும் தலையில் சூடியிருந்த மல்லிகையின் மணமும் சூர்யாவின் நாசியை நெருடியது. கண்களைத் திறக்க மனமின்றியே அவளை இழுத்து அணைத்துக் கொண்டான். இதை சற்றும் எதிர் பாராத தாமரை பதறி விலக முயல, அதற்கு வாய்ப்பே இன்றி தன்னுடன் இறுக்கமாய் பிணைத்துக் கொண் டான். மீள முடியாமல் தவித்தவள் முடிவில் தன் கணவ னின் அணைப்பில் அடங்கிக் கொண்டிருந்த நேரம் அந்தக் குரல் கேட்டது.

## 9

தனக்கு வெகு அருகில் கேட்ட அந்தக் குரலில் திடுமென விழித்துக் கொண்ட தாமரை பதறி எழுந்து சுற்று முற்றும் பார்த்தாள். கட்டிலின் அருகேயிருந்த மேஜையின் மேல் தன் குட்டி நாற்காலியில் கம்பீரமாய் சாய்ந்து நின்றிருந்த சூர்யபிரகாஷின் செல்போன் தான் குரல் கொடுத்துக் கொண்டிருந்தது. ''ஹலோ ஹலோ சுகமா? ஆமா நீங்க நலமா?'' - என மீண்டும் மீண்டும் குரல் கொடுத்துக் கொண்டிருந்தது. தாமரை விழிகளை விரித்துப் பார்த்தாள். இப்படிக் கூட பாடுமா இந்த செல்போன்? தான் அறிந்தவரை டியூனை மட்டுமே கேட்டிருந்தாள்.

இந்த மாதிரி பாடல்களைக் கேட்பது இதுதான் முதல் முறை. தன் வீட்டில் அக்காவிடம் மட்டுமே செல்போன் உண்டு. தனக்கும் தன் தந்தைக்கும் வீட்டு போன் உதவியது. அக்கா போனை தொடக்கூட விட மாட்டாள்.



பத்து நாளாய் மௌன விரதம் இருந்து அப்பாவிடம் போராடி வாங்கிய போன் அது. அடிக்கடி பேசிக் கொண்டே தான் இருப்பாள். அதில்கூட இப்படி பாட்டு வராது.

என்ன சத்தம் இந்த நேரம் உயிரின் ஒலியா என்ற பாடலில் டியூன் மட்டுமே வரும். இது விலை உயர்ந்த போனாக இருக்கும். பார்த்தாலே தெரிகிறதே. தன் சிந்தனையிலேயே உழன்று கொண்டிருந்த தாமரை கணவன் எழுந்து போனை எடுத்ததும் சட்டென அறையை விட்டு வெளியேறினாள். இந்த போன் மட்டும் இந்நேரம் வராமல் இருந்தால் என்னென்ன நடந்திருக்குமோ... உடல் பதறியது. என்னதான் கோபம் மறைந்து கொஞ்சம் இனிமையாகப் பேசினாலும் இது வரை தன் உடலில் அவர் கை பட்டதில்லையே. இந்த அழகில் நாமே போய் அவரிடம் இழைந்தால்.. ச்சே.. ஏற்கனவே ஏதேதோ பேசியவர்.. இந்த செயல் மூலம் என்னை எப்படி நினைத்துக் கொள்வாரோ. மனம் படபடத்தது. ஏன் அப்படி மடத்தனமாய் நடந்து கொண் டேன். தன்னைத் தானே திட்டிக் கொண்டே கீழிறங் கியவள், ''குட் மார்னிங் மேம்'' - என்ற பவ்யமான குரலில் தலை நிமிர்ந்தாள்.

''யாரிவன் புதிதாய்? எங்கிருந்து வந்தான்? எப்போது வந்தான்? இந்த தாயம்மா எங்கு சென்றாள்? நடு ஹாலில் இவனை உட்காரச் சொன்னது யார்?

''மேடம். குட்மார்னிங்'' - என்றான் அவன் மீண்டும், சட்டென சுதாரித்துக் கொண்டவளாய்,

''குட்மார்னிங்! நீங்க யாரு? உங்களுக்கு யார் வேண் டும்?'' - என்றாள் படபடப்போடு.

''நான் பிரபு. பிரபுதாஸ். சாரோட பி.ஏ. சார் கிட்ட உங்க ரிசப்ஷன் விஷயமா பேச வந்தேன். என்னை வரச் சொல்லியிருந்தாங்க'' நேராக நின்று அடங்கிய குரலில் புன்சிரிப்போடு மென்மையாய் மரியாதையாய் கண் களை மட்டுமே பார்த்துப் பேசிய அந்த பிரபுதாஸைப் பார்த்ததுமே பிடித்துப் போனது தாமரைக்கு. எத்தனை உயரம். எத்தனை சுறுசுறுப்பு. என்ன ஒரு பணிவு. டீசண்ட்டான பேச்சு.

''ஓ நீங்கதான் பிரபுவா? ப்ளீஸ் உட்காருங்க. நீங்க வர்றதா சொன்னார். ஸாரி நான் உங்களைப் பார்த்த தில்லையே. அதான் தெரியல்ல. என்ன சாப்பிடுறீங்க காபியா டீயா?''

''நோ மேம். நான் காபி டீ எல்லாம் சாப்பிடுவதில்லை. கேட்டதற்கு நன்றி.''

''அப்படியா சரி. நான் அவரை எழுப்பிட்டு வர்றேன். இன்னும் தூங்கிட்டுதான் இருக்கார்'' - என்றவாறே நகர,

''இல்ல மேம். இப்பத்தான் ஸாருக்கு போன் பண்ணேன். பைவ் மினிட்ஸ்ல தயாராகி கீழே வர்றேன் வெயிட் பண்ணுன்னார்'' - என்றான் பிரபு.

''ஓ! நீங்க தான் போன் பண்ணீங்களா? சரி அவர் வந்தும் பேசிட்டு இருங்க. நான் டிபன் ரெடி பண்ணிடுறேன்'' - என்றவாறே சமையலறையில் புகுந்து தன்னை ஆசு வாசப்படுத்திக் கொண்டு பூரிக்கட்டையை எடுக்கும் போது கணவனின் குரல் கேட்டது. பிரபுவுடன் சேர்ந்து பேசிக் கொண்டே டைனிங் டேபிளுக்கு வர அவசரமாய் பூரியை உருட்டியவாறு அடுப்பைப் பற்ற வைத்தாள்.

கையில் சாமானுடன் வந்த தாயம்மா, ''அம்மா! நீங்க போய் ஐயாவை கவனிங்க. நான் இதைப் போட்டு



எடுத்துட்டு வர்றேன்'' - என்று விரட்ட கையில் குருமா கிண்ணத்துடன் தயக்கமாகவே வந்தாள் தாமரை.

கணவனின் முகத்தை ஏறெடுத்துப் பார்க்கவும் பயம். ''தாமரை. இன்னிக்கு என்ன டிபன். ரொம்ப பசிக்குது'' - என ஆர்வமாய் கேட்டவனிடம் எந்த விதக் கோபமோ வெறுப்போ இல்லாததைக் கண்டு நிம்மதியானாள். ''பூரி, உருளைக்கிழங்கு குருமாங்க. கெட்டிச் சட்னியும் உண்டு'' - என்றாள் மலர்ச்சியாய்.

''ஓ.கே. பிரபுக்கும் சேர்த்தே எடுத்துட்டு வா. நாம சேர்ந்தே சாப்பிடலாம். கமான் பிரபு வா. தாமரையின் கைவண்ணம் சூப்பரா இருக்கும். வந்து ஒரு பிடி பிடி. அப்புறம் மத்ததைப் பேசலாம்'' - என கொஞ்சம் தயக் கத்துடனே வந்தமர்ந்தான் பிரபு.

சாப்பிட்டு முடித்து காபி அருந்திவிட்டு, ''தாயம்மா நீயும் வா. தாமரை இதைப்பார்'' - ஹாலின் சோபாவில் அமர்ந்தவாறே தன் அருகில் மனைவியை அமர வைத்து அவள் கையில் அந்த அட்டைப் பெட்டியைத் தந்ததும் குழப்பமானாள் தாமரை. என்ன இருக்கிறது என்ற ஆவலைவிட தன் கணவனின் அருகாமை நெருடியது. வெகு இயல்பாய் சோபாவில் சாய்ந்து கொண்டு இருந் தவனின் கைகள் தன் தோளைச் சுற்றி அணைத்திருந்த விதம் கூச்சத்தால் நெளிய வைத்தது. ஆனால் அதை பெரிதுபடுத்தாமல், ''பிரிச்சுப் பாரேன். எதற்கு இத்தனை தயக்கம்... ம்?'' - மெதுவாய்த்தான் கேட்டான் என்றாலும் கணவனின் மூச்சுக்காற்று தன் மேல் பட்டதும் சிலிர்த்துப் போனாள். எதிர் இருக்கையிலிருந்த பிரபுவும் ''பாருங்க மேம். இது முழுக்க முழுக்க சாரோட செலக்ஷன். உங்களுக்கு கண்டிப்பாய் பிடிக்கும்'' - என ஊக்குவிக்க,

பட்டு நூலால் கட்டப்பட்டிருந்த முடிச்சை அவிழ்த்து பாக்ஸை திறந்தவளின் கண்கள் ஆச்சர்யத்தால் விரிந்தது. கைகள் நடுங்க அதைக் கையில் எடுத்தாள். கனமான ஆனால் மிக மிருதுவான பட்டுப்புடவை அது. இரத்தச் சிவப்பில் உடல் முழுவதும் தங்க ஜரிகை வேய்ந்திருந்த கெட்டியான பார்டருடன் கண்ணைப் பறித்தது. ஜரிகை அசாத்திய பளபளப்புடன் இருந்தது. புடவையின் கொடிகளில் பூத்திருந்த பூக்களின் இதழ்களில் குட்டி குட்டி வைரத்துணுக்குகளாய் பொடிக் கற்கள் டாலடித்தது. போதாதென்று ஆங்காங்கே வெண் முத்துக்கள்.

கையிலெடுத்து புடவையை விரித்துக் காட்டினான் சூர்யா. முந்தானை வேலைப்பாடுகளைப் பார்த்து மலைத்துப் போனாள் தாமரை. குட்டி குட்டி மயில்கள் தோகையை விரித்தபடி இருக்க அதன் தோகையில் நீலக் கற்கள் பதித்து அதன் கொண்டைப் பூவில் சில முத்துச் சரங்கள் ஆடிக் கொண்டிருந்தன. அப்படியே அதை தாமரையின் தோளில் வழிய விட்டான். ''பிடிச்சிருக்கா தாமரை. நானே ரசிச்சு தேர்ந்தெடுத்து ஆர்டர் பண்ணி செய்தது. உனக்குப் பிடிச்சிருக்கா? வேற கலர் வேணும்னாலும் சொல்லு மாத்திடலாம்'' - கணவன் பேசியதைக் கேட்டாலும் வாயைத் திறக்க முடியவில்லை. அதே போல் வாயைப் பிளந்து ரசித்துக் கொண்டிருந்தாள் தாயம்மா.

''என்ன தாமரை ஒண்ணுமே பேச மாட்டேங்கிற'' - தோள் பற்றி உலுக்கவும் தான் பிரமிப்பிலிருந்து மீண்டாள்.

''ஏங்க.. இது... ரொம்ப விலையிருக்கும் போலிருக்கே. இப்போ இது ஏன் எனக்கு?'' - திணறினாள்.



''இது நல்லாயிருக்கே. இன்னிக்கு ஈவினிங் ஹோட்டல் ப்ளூ ஸ்டார்ல நம்ம ரிசப்ஷன். அதுக்கு ஆயிரம் பேருக்கு மேல வருவாங்க. அப்போ இதைக் கட்டிக்கிட்டு தேவதையாட்டம் நீ நிற்க வேண்டாமா? இது தான் என் வொய்ப் அப்படின்னு நெஞ்சை நிமிர்த்திகிட்டு நான் நிற்க வேண்டாமா? உனக்குப் புடிச்சிருக்கா? அதை மட்டும் சொல்லு'' கணவன் பேசப் பேச மேலும் திகைத்தாள். திருமணப் பத்திரிகையில் ரிசப்ஷன் சென்னையில் என்று அச்சாகி இருந்ததுதான். ஆனால் மணப்பெண் மாறியதில் அனைத்தையும் மாற்றியிருப்பான் என்று தான் நினைத்திருந்தாள் தாமரை. இன்று அவன் வாயால் கேட்டதும் அரண்டு போனாள்.

''அட என்னம்மா. இப்படித் தயங்குறீங்க? உங்க கலர்க்கு எத்தனை பொருத்தமாய் ஐயா வாங்கிட்டு வந்திருக்காங்க. இதைப் பார்த்த உடனே சந்தோஷத்தில ஐயாவைக் கட்டிப்புடிச்சு நச்நச்னு முத்தம் குடுப்பீங்கன்னு பார்த்தா...'' - தாயம்மா இழுக்க,

''அட. இந்த ஐடியா நல்லா இருக்கே. தாமரை நான் ரெடி'' - என்றான் சூர்யா முகம் பூரிக்க.

''ஐயோ தாயம்மா. ஆம்பிளைங்க முன்னாடி இப்படியா பேசுவ?'' - வெட்கம் பிடுங்கித் தின்ன தாமரை கடிந்தாள்.

''அதானே பார்த்தேன். கனவிலதான் கொடுப்பியா. நேர்ல கொடுக்க மாட்டியா'' - காதிற்குள் சூர்யா கிசுகிசுக்க குப்பென சிவந்தாள். அவசரமாய் நிமிர்ந்து சூர்யாவைப் பார்த்துவிட்டு பிரபுவை திரும்பிப் பார்க்க அவன் ஹாலின் ஓரமாய் நின்று போனில் ஏதோ பேசிக் கொண்டிருந்தான். ''தாயம்மா. இது உனக்கு. அது அய்யனாருக்கு. போ. அவனிடம் காட்டு. நீ போனாத்தான்

அம்மா எனக்கு ஏதாவது கொடுப்பாங்க போலிருக்கு'' - என்றவாறு இரண்டு ஜவுளி பார்சல்களை அவளிடம் கொடுக்க ஒரு வெட்கச் சிரிப்புடன் அதை வாங்கிக் கொண்டு ஓடினாள் தாயம்மா.

தாமரையைத் தோளோடு அணைத்து நெருக்கிக் கொண்டான். ''ம். நான் ரெடி. இப்பக் கொடு'' - என்றான் கன்னத்தைக் காட்டி. ''என்னது?'' - என்றாள் பதறியபடி. ''பிரபு. நான் கூப்பிடாமல் திரும்ப மாட்டான். பயப்படாதே. ம்'' - என்றான் சாதாரணமாக.

''இதென்ன கொஞ்சம் கூட வெட்கமில்லாமல்? முதல்ல விலகி உட்காருங்க. பொது இடத்தில் இப்படியா நடக்கிறது. தப்பு. கணவன் மனைவியாவே இருந்தாலும் இதெல்லாம் தப்பு'' - என்றவளாய் விலகி அமர்ந்தாள். மென்மையாய் சிரித்துக் கொண்டான் சூர்யா.

''ஓ.கே. இந்தா இது பிளவுஸ். தாயம்மாகிட்ட கொடுத்தனுப்பு. நமக்குன்னு சொன்னா உடனே தைச்சுக் கொடுத்திடுவாங்க. ஈவ்னிங் சிக்ஸ் ஓ கிளாக் ரிசப்ஷன். நீ ப்ரெஷ்ஷாகி கிளம்பிடு. நானும் பிரபுவும் ஹோட்டல் வரைக்கும் போய் எல்லா ஏற்பாடும் எப்படி இருக்குன்னு பார்த்திட்டு வந்திடுறோம். ம். அப்புறம்.. அந்த ரூபி செட் ஜுவல்ஸ் இருக்கில்ல அதைப் போட்டுக்க. அம்மாவும் அப்பாவும் இன்னும் கொஞ்ச நேரத்தில வந்திடுவாங்க. லஞ்ச் கூட நாலு பேருக்கு சேர்த்து செஞ்சிடு. என்ன'' என்றவாறு எழுந்தவன்,

''பிரபு போலாமா. கொஞ்சம் இரு. கிரெடிட் கார்டை எடுத்துட்டு வந்திடுறேன்'' - என்றவாறு அறைக்குள் செல்ல, தாமரை மெதுவாய் பிரபுவின் அருகில் வந்தாள். ''யெஸ் மேம்'' என்றவனிடம் புடவையைக் காட்டி மிக



மெதுவாய் ஏதோ கேட்க, அறையிலிருந்து திரும்பிய சூர்யா அப்படியே நின்றான். தாமரை பேசிக் கொண்டே இருக்க, சூர்யாவின் முகம் கோபக் கனலாய் மாறியது.

## 10

அவள் கண்களைத் திறந்தாள். கும்மென்ற இருண்ட அறை பயமுறுத்தியது. ஜன்னல்கள் இல்லாத அறையில் உடல் முழுக்க வியர்வை கொட்ட இருட்டில் அங்கும் இங்குமாய் தேடினாள். ''யாருமே இல்லையா? ப்ளீஸ் யாராவது வாங்களேன். எனக்கு பயம்மா இருக்கு...'' என்ற அவளது உரத்த குரல் அறையெங்கும் எதிரொலித்து அவளிடமே திரும்பி வர இன்னும் பயந்தாள்.

அறைக்குள்ளே இருந்த கழிவறையின் நாற்றம் குடலைப் புரட்டியது. இருட்டில் எலி ஒன்று பாய்ந்து ஓட வீறிட்டாள். இப்போது வெளியே ஏதோ சலனம் கேட்டது. சற்று நேரத்தில் மங்கலான விடிவிளக்கு எரிந்தது. அவசரமாய் எழுந்து நின்றாள். இருட்டிலேயே பழகிய கண்கள் இன்னும் இருட்டாகவே தெரிய பதறிப் போய் கண்களை நன்றாக தேய்த்துக் கொண்டு பார்த்த போது மிக அருகில் அவன் நின்றிருந்தான். உயரமாய் ஒடிசலாய்... பார்த்ததும் பதறி விலக முயன்றவளை தோள் பற்றி நிறுத்தினான்.

''என்ன சுசி! என்னைப் பார்த்துப் பயப்படுற. நான்தான் நந்தகுமாரன். உன் நந்தா சுசி. நல்லாப்பார்'' - அவன் குரலைக் கேட்டதும் அதிர்ந்து விலகினாள் சுசித்ரா.

''அடப்பாவி! நீயா. நீயா என்னைக் கடத்திட்டு வந்து இத்தனை நாளா அடைச்சி வெச்சிருந்தே. ஏண்டா. ஏண்டா இப்படிப் பண்ணினே. ஐயோ! என் மேரேஜ். சூர்யா... உன்னால என் கல்யாணம் நின்னு போச்சே. என் சூர்யா தவிச்சிப் போயிருப்பாரே. பாவி. நீயெல்லாம் ஒரு மனிதனா? நம்பிக்கை துரோகி'' - பேசிக் கொண்டே போனவளை கையமர்த்தித் தடுத்தான் நந்தா.

''ஏய் நிறுத்து! என்ன உன் இஷ்டத்துக்குப் பேசிட்டே போறே. என்னை வில்லனாக்கிட்டு நீ ஹீரோயின் ஆகிடலாம்னு நினைப்பா உனக்கு. நான்தாம்மா ஹீரோ. உன்னோட நிஜ ஹீரோ. உன்னோட ஆசைக்காதலன்.''

''ச்சீ வாயை மூடு. ஹீரோவாம் ஹீரோ. உன்கிட்ட என்னடா இருக்கு. ஒரு சாதாரண டிரைவர். நீ எனக்கு ஹீரோவா. கலர் கலரா கார்ல வந்து மயக்கிட்டு என்னை ஏமாத்தி இப்போ என்னை ஏன்டா இங்கே கொண்டு வந்தே?

''அதான் நீ கேட்டபடி பணம் நகையெல்லாம் கொண்டு வந்து தந்தேனே. அப்புறம் ஏன் கடத்திட்டு வந்தே'' - சுசித்ரா ஆத்திரமாய் கத்தினாள்.

''ஏன்டி! நீ நான் வந்த காரைப் பாத்து என்னைக் காதலிச்சா நானும் அப்படியே இருப்பேன்னு நினைச்சியா? நான் உன்னை.. உன் மனசைக் காதலிச்சேன்டி. நீயும் என்னைத்தான் விரும்புறேன்னு நினைச்சேன் அப்புறமாத்தான் தெரியுது நீ விரும்புனது நான் ஓட்டிட்டு வர்ற காரைன்னு. நீயில்லாம என்னால வாழ முடியாதுன்னு என் கூட கார்ல சுத்தும்போது டயலாக் விட்ட. நான் ஒரு கால் டாக்ஸி டிரைவர்னு தெரிஞ்சதும் கமுக்கமா கழட்டி விட்டுட்டு நல்ல பிள்ளையா பணக்கார மாப்பிள்



ளையை கட்டிக்கப் போறியா? விட்டுடுவேனா? என்னை மாதிரி இன்னொருத்தனை ஏமாற விட்டுடுவேனா? நீ ஏமாத்தின முதலும் கடைசியுமான ஆளு நானாகவே இருந்திட்டுப் போறேன். நான் ஒண்ணும் உன் பணத்துக்கும் நகைக்கும் ஆசைப்பட்டு உன்னைத் தூக்கலை. உன் கூட கடைசி வரைக்கும் வாழணும்னுதான் தூக்கிட்டு வந்தேன். ஏன்னா இப்பவும் நான் உன்னை விரும்புறேன்.''

''வாயை மூடுடா பொறுக்கி. நான்தான் நீ வேணாம்னு தூக்கியெறிஞ்சிட்டேனே. பிறகேன் என்னை சுத்தி வர்ற. பெரிய உத்தமனாட்டம் பேசுற நீ எதுக்காக கல்யாணத்துக்கு முந்தின நாள் வந்து நகை, பணம் எல்லாத்தையும் தந்தா கல்யாணத்துக்கு தடையா இருக்க மாட்டேன்னு சொன்ன. உன் பேச்சை நம்பித்தானே எல்லாத்தையும் கொண்டு வந்து விடியுமுன்னே உங்கிட்ட கொடுக்க வந்தேன். மயக்க மருந்தை தெளிச்சு தூக்கிட்டு வந்திட்டியே. ஏன் உனக்கு அந்தப் பணம் போதாதா? இன்னும் வேணுமா? என்னை வெச்சு மிரட்டப் போறியா? என் அப்பாகிட்ட இருந்து ஒத்தை பைசா கூடப் பெயராது. அதைத் தெரிஞ்சுக்க முதல்ல'' - ஏளனமாய் சொன்னவளை அலட்சியமாகவே பார்த்தான் நந்தகுமாரன்.

''அதான் தெரியுமே. அந்தப் பெரிய மனுசன் உன்னை வளர்த்த பாவத்திற்கு அவரைக் கடனாளியாத்தான் நிக்க வெச்சிட்டியே நீ. அதனால தான் உன் நகையெல்லாம் வித்து அந்தப் பணத்தையெல்லாம் அவர் பேருக்கு அனுப்பி வெச்சிட்டேன், அவருடைய மருமகன்ற போர்ல. அவரும் தன்னோட மருமகன் சூர்யாதான் இதையெல்லாம் பண்ணிட்டார்னு ஊரெல்லாம் பேசிப் பேசி

சந்தோஷப்படுறாரு தெரியுமா. எப்படியோ என்னால முடிஞ்ச ஒரு நல்ல காரியம்'' - அவன் சாதாரணமாய் சொல்ல காளி சொருபமானாள் சுசித்ரா.

''முட்டாள். முட்டாள். யாரைக் கேட்டு இப்படிச் செய்தாய்? ஒவ்வொரு நகையும் வாங்க நான் என்னென்ன போராட்டம் பண்ணினேன்னு தெரியுமா உனக்கு. எப்படி பாடுபட்ட பணம் தெரியுமா அது. பாவி. எல்லாத்தையும் வீணாக்கிவிட்டாயே. அப்படி என்னடா உனக்கு அவர் மேல் அத்தனை அக்கறை. எனக்கில்லாத அக்கறை. ஏன்? ஒரு வேளை அவர் பெத்து வைத்திருக்கிறாரே ஒரு ஊமைக் கோட்டானை. அதை விரும்புகிறாயா என்ன? அப்படியென்றால் நீ அவளைத்தானே தூக்கி வந்திருக்க வேண்டும்'' - பளாரென கன்னத்தில் விழுந்த அறையில் கதிகலங்கிப் போய் பேச்சை நிறுத்தினாள் சுசித்ரா.

கண்கள் சிவப்பேற, ''என்னை என்ன உன்னைப்போல் நினைத்தாயா? நீ இல்லையென்றால் அடுத்தவள் என்று அலைய நான் ஒன்றும் பொறுக்கி அல்ல. நான் நேசித்த ஒரே பெண் நீதான்டி. நான் பெரிய பணக்காரன்னு நினைச்சு எம் பின்னாடி சுத்தி என்னை மயக்கின. நான் சாதாரண டிரைவர்னு தெரிஞ்சதும் என்னை விட்டு விலகின. இப்போ வசதியான இடம்னு தெரிஞ்சதும் சூர்யாகிட்ட உன் வேலையைக் காட்ட ஆரம்பிச்சிட்டே. என்ன பார்க்கிற. நான் உன்னை டப்பா வாட்ச் பண்ணிட்டுத்தான்டி இருந்தேன். பாவம் அவர். உன் அழகில் மயங்கி விட்டார் போல. ஆனால் நீயும் கில்லாடிதான். போனில் பேசியே சாய்த்து விட்டாய். அதற்காகத்தான் பொறுத்திருந்தேன். உன் திருமண நாள் வரை



பொறுத்திருந்தேன். உன்னைப் பணம் நகையோடு ஏன் வரச் சொன்னேன் தெரியுமா? நீ யாரோடோ உன் முழு மனதோடு வாழப் போவதாக எல்லோரும் நினைக்க வேண்டும். நினைத்து உன்னை வெறுக்க வேண்டும் என்றுதான் காயை நகர்த்தினேன். நீயும் நம்பி அந்த அதிகாலையில் பெட்டியோடு என்னைத் தேடி வந்தாயே. விட்டு விட நான் என்ன மடையனா?'' - என்றான் ஆத்திரமாய்.

சுசித்ரா வாயடைத்துப் போனாள். 'அப்படியென்றால் நான் ஓடிப் போய்விட்டதாகவே எல்லோரும் எண்ணியிருப்பார்களோ? அதனால்தான் என்னை யாரும் தேடவில்லையா? இது எந்த இடம்? எத்தனை நாளாய் இங்கு அடைபட்டுக் கிடக்கிறோம்? இப்போது எப்படி வெளியேறிப் போவது? போய் உண்மையைச் சொன்னால் யாராவது நம்புவார்களா? இவனிடம் இருந்து எப்படித் தப்புவது?' சுசித்ராவின் மனம் கணக்குப் போட்டதைத் தெரிந்தவன் போல் நந்தா பேசினான்.

''நீ வெளியில் சென்று என்னைக் கடத்தி விட்டார்கள் என்று சொல். உன் முகத்தில் காறி துப்புவார்கள். கடத்துபவன் உன் பணம் நகை துணிமணி எல்லாம் கடத்தினானா? எப்படி என்று கேட்க மாட்டார்களா? அதோடு இன்னும் ஒரு மாதம் வரை இந்த அறையை விட்டு வெளியேற்றுவதாய் ஐடியா இல்லை. நீ தப்பிக்கவும் முடியாது. பேசாமல் நான் தருவதை சாப்பிட்டுவிட்டு அடைந்து கிட. இதுதான் நீ எனக்கு செய்த துரோகத்திற்கு தண்டனை'' - என்றவாறு வெளியேற திரும்பியவனை கைபற்றி தடுத்தாள்.

''இதோ பார்! நந்தா. போனதெல்லாம் போகட்டும். என்னை விட்டுவிடு. உன் நல்லதிற்குத்தான் சொல்

கிறேன். சூர்யாவைப் பற்றி உனக்கு தெரியாது. இப்போது அவர் என்னைத் தேடி எல்லாப் பக்கமும் போலீஸ் படையை அனுப்பியிருப்பார். நீ நிச்சயம் மாட்டி விடுவாய். அதனால்தான் சொல்கிறேன். என்னை வெளியே அனுப்பிவிடு. நான் உன் பெயர் சொல்லாமல் ஏதாவது காரணம் சொல்லி சமாளித்துக் கொள்கிறேன். அவர் என்னைத் தேடுவார் நந்தா. என்னைக் காணாமல் துடித்துப் போய்விடுவார் ப்ளீஸ். என்னை வெளியே அனுப்பிவிடு'' - நயந்து பேசியவளைப் பார்த்து வாய்விட்டுச் சிரித்தான். பலமாகச் சிரித்தான். குழப்பமாகவும் கடுப்பாகவும் பார்த்துக் கொண்டிருந்தவளைப் பார்த்து,

''அவர் ஏன் உன்னைத் தேடப் போகிறார். அவருக்கு ஆயிரம் வேலை. அதோடு புது மனைவியோடு ஹனிமூன் போவாரா இல்லை எவனோடோ ஓடிப் போனவளை தேடிக் கொண்டிருப்பாரா? அவரை என்ன வேலை வெட்டி இல்லாத மாங்கா மடையன் என்று நினைத்தாயா?'' என்றான் அலட்சியமாய்.

அதிர்ந்து போய் நின்றாள் சுசித்ரா. ''என்ன? என்ன சொன்னாய்? பொய் தானே? என்னை ஏமாற்றச் சொன்ன பொய்தானே? நான் நம்ப மாட்டேன். சூர்யா என்னை விட்டுவிட்டு இன்னொரு பெண்ணை மணக்க மாட்டார். எனக்கு நிச்சயமாய் தெரியும். நீ பொய் சொல்கிறாய்'' - என்றவளை கேலியாய் பார்த்தான்.

''எல்லாம் நல்லபடியாய் நடந்து முடிந்து மணப்பெண் கணவன் வீடு போய் வாழ ஆரம்பித்தாயிற்று. பெண் அவருக்கு அத்தனை பொருத்தம். பார்ப்போர் அனைவரும் வியக்கும் வண்ணம் அத்தனை அருமையான ஜோடிப் பொருத்தம். அடக்கமான அன்பான அற்புத



மான பெண் கிடைத்தால் யாராவது மறுப்பார்களா? அதனால்தான் தாமரையை சந்தோஷமாக ஏற்றுக் கொண்டார் சூர்யா.''

சட்டென அவனது சட்டையை கொத்தாகப் பற்றினாள் சுசித்ரா. ''என்ன சொன்னே? தாமரையா? தாமரையா அவரைக் கட்டிக் கொள்ள சம்மதித்தாள்? எத்தனை சதி? அடப்பாவி! எல்லாம் உன்னால்தானே. போச்சு. எல்லாம் போச்சு. என் வாழ்க்கையே போயிடுச்சு'' - தலையில் அடித்துக் கொண்டு அழ ஆரம்பித்தாள்.

''நாம என்ன செய்யிறமோ அது நமக்கே திரும்ப வந்திடும் சுசி. நீ நல்லது செய்திருந்தா உனக்கு நல்லதே நடக்கும். நீ பாவம்தானே செய்தே. இரண்டு மாசம் முன்னால உன் தங்கையைப் பார்த்து விரும்பி பக்கத்து ஊர் பண்ணையார் குடும்பம் பெண் கேட்டு வந்ததே. அப்போது நீ என்ன செய்தாய்? நினைவிருக்கிறதா?'' - நந்தா கேட்க அவமானத்தால் முகம் சுருங்கினாள்.

''என்னைப் பகடைக்காயாக்கி என்னுடன் உன் தங்கை ஊர் சுற்றுவதாக வதந்தியைக் கிளப்பி அந்த வீட்டுப் பெரியவர்களுக்கே போன் மூலம் தெரிவித்தாய். உன் திட்டப்படி திருமணமும் நின்று போனது. ஆனால் நல்லவர்களுக்கு எல்லாமே நல்லபடியாய் முடியும் தெரியுமா? நீ நிறுத்திவிட்ட குடும்பத்தை விட சூர்யா பேமிலி ரொம்ப வசதியாம். இவர் ஒரே வாரிசு தானாம். உலகம் முழுக்க அவர் கம்பெனி இருக்காம். இத்தனை சீரும் சிறப்புமா அவ வாழணும்னு இருக்கு. அதனாலதான் நல்லபடியா கல்யாணம் முடிஞ்சு ஜேஜேன்னு இருக்கா.''

''ந்நோ.. நோ. நான் நம்பமாட்டேன். நிச்சயமா சூர்யா மனசில நான்தான் இருக்கேன். எனக்குத் தெரியும். அவர்

தாமரையை ஏத்துக்க மாட்டார். என்னை விட்டுடு. நான் அவரைப் பார்க்கணும். நான் பேசினா அவர் புரிஞ்சுப்பார். தாமரையை விரட்டிட்டு என்னை ஏத்துப்பார்'' - ஆத்திரமாய் அரற்றியவளை அற்பமாய் பார்த்தான் நந்தா.

''ச்சீ! நீயெல்லாம் ஒரு பெண்ணா? உன்னைப்போய் நேசித்தேனே. அவ உன் தங்கைடி. அவளை விரட்டிவிட்டு அந்த இடத்தில் வாழத் துடிக்கிறாயே. இத்தனை சுயநலவாதியா நீ? உன்னை வெளியே விட்டால் பெரிய ஆபத்து. ஒரு மாதம் கழித்து உன்னை அழைத்துக் கொண்டு போய் உன் அப்பாவின் காலில் விழுந்து மன்னிப்பு கேட்க வேண்டும் என்றுதான் நினைத்தேன். இனி அது நடக்காது. நாளைக்கே நம்ம கல்யாணம். இந்த அறையிலே நடக்கும். நம்ம வாழ்க்கையும் இங்கதான் தொடங்கும். ஒரு குழந்தை பெற்ற பிறகு போய் அப்பாவிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்ளலாம். நான் தாலி மாலையெல்லாம் வாங்கிக் கொண்டு காலையிலேயே வந்திடுவேன். குளிச்சு ரெடியா இரு'' - என்றவாறு அறையை விட்டு விலகி வெளியேறி கதவை சாத்திப் பூட்டினான். உள்ளே சுசித்ரா கத்தியது சுற்றிலும் இருந்த சவுக்குத் தோப்பை தாண்ட முடியாமல் போனது.

## 11

''ஏன் அண்ணி! நான் கல்யாணப் பத்திரிகை கொண்டு வரும்போது அண்ணன் நிலை இத்தனை மோசமா இல்லையே. திடீர்னு ஏன் இப்படி ஆயிடுச்சு. வீட்லயே வெச்சிட்டு இருக்கீங்களே. வாங்க மொதல்ல



ஆசுபத்திரிக்கு போவோம். நான் போயி கார் ஏதாவது கிடைச்சா கூட்டிட்டு வர்றேன்'' - என்றவாறு எழுந்த மீனாட்சி சுந்தரத்தின் கைகளைப் பற்றிக் கொண்டார் அழகு சுந்தரம். வாயைத் திறக்க முடியாமல் தலையை மட்டும் அசைத்து தன் மறுப்பைத் தெரிவித்தார்.

''இப்படித்தான் தம்பி! எப்படிக் கூப்பிட்டாலும் ஒரேயடியாய் வேணாம்றாங்க. டாக்டரையே வீட்டுக்குக் கூட்டியாந்து பார்த்தோம். நிலமை கவலைக்கிடந்தான்னு சொல்லி மருந்து மாத்திரை தந்திட்டுப் போனாரு. ஆனா ஒரு சொட்டு மருந்தைக்கூட குடிக்க மாட்டேங்காக. நானும் தான் என்ன பண்ணுவேன். எங்களைப் பத்தியெல்லாம் அவுகளுக்கு கவலை இல்லை. மூத்தமக நினைப்பு மட்டும்தான் இருக்கு. அவ போயிட்டாளேன்ற கவலைதான் இப்படி ஒரேயடியா சாய்ச்சிடுச்சி. ரெண்டு மாசமாவே படுக்கையில கிடந்தாலும் சாப்பாடு மருந்து கொடுத்து தெம்பாத்தான் இருந்தாக. கல்யாணமுன்னு நீங்க வந்ததும் தன்னால எழுந்து நடமாட முடியலேன்னு தன் பொண்ணோட கல்யாணத்தை பார்க்க முடியலைன்னு நாலு நாளா சாப்பிடாம அழுது அடம் பிடிச்சாக. அவ போயிட்டான்னு தகவல் தெரிஞ்ச நிமிஷம் இடிஞ்சு போனவுகதான் காபித் தண்ணிகூட குடிக்காம தன்னையே வருத்திக்கிட்டு சாவைத் தேடி கிடக்காக. அதான் நீங்க வந்து ஏதும் சொன்னா கேட்பாங்களேன்னு தான் எம்புள்ளைய அனுப்பி உங்களை கூட்டியாரச் சொன்னேன்.'' கண்களில் வழிந்த நீரை துடைத்தவாறே சொன்னாள் மரகதம்.

மனம் துடிக்க கட்டிலில் கிடந்த அண்ணனைப் பார்த்தார் மீனாட்சி சுந்தரம். சர்க்கரை வியாதிக்கார

அண்ணன் அதற்கான மருந்து எதுவும் சாப்பிடாமல் அலட்சியமாய் உணவுக் கட்டுப்பாடும் இல்லாமல் சாப்பிட்டு உடம்பைக் கெடுத்துக் கொண்டார். காலில் சிறு காயம் ஏற்பட்டு அதை சரிவர கவனிக்காமல் டாக்டரிடம் போகாமல் விட்டு விட்டார். புண் புரையோடிப் போய் விரல் அழுக ஆரம்பித்தபோதுதான் பயந்துபோய் மருத்துவமனையில் சேர்த்து பார்த்தபோது நிலைமை கைமீறிப் போய் விட்டது. கண்டிப்பாக காலை எடுத்தே ஆக வேண்டும் என மருத்துவர்கள், கூறிவிட, ''வேண்டாம் அதற்கு பதிலாக நான் செத்தே விடுகிறேன். முடமாகிப் படுக்கையில் கிடந்து நான் வாழ வேண்டாம். ஓடியாடி உழைத்துக் கொண்டே இறந்து விடுகிறேன்'' என்று மன்றாடினார். ஆனாலும் அவரது உயிரைக் காப்பாற்றியே ஆக வேண்டும் என்று அவர் மகனும் மீனாட்சி சுந்தரமும் சேர்ந்து டாக்டர்களிடம் கெஞ்ச அழகு சுந்தரம் மயக்க நிலையில் இருந்தபோது ஆபரேஷன் செய்தாகி விட்டது. விழித்துப் பார்த்தவர் துடித்த துடிப்பை இன்று நினைத்தாலும் மனம் நடுங்கியது. பிறகு படுக்கையே கதி என்றாகி விட மாதம் ஒரு முறை மதுரையிலிருந்து அரியலூர் வந்து அண்ணனைப் பார்த்துவிட்டுப் போவார்.

இம்முறை அவரது மகன் வந்து அழைத்ததும் பதறிப் போனவர் அண்ணனின் நிலைகண்டு நொறுங்கிப் போனார். உடம்பில் எலும்பைத் தவிர வேறெதுவும் இல்லை. படுக்கையில் கிடந்து உடம்பில் பல இடங்களில் புண் வந்து பெரிதாகி சீழ்வடிந்தது. சுவாசம் சீராக இல்லாமல் மிக நிதானமாக வந்தது. கண்கள் குழிக்குள் விழுந்து பார்வை மங்கிப் போயிருந்தது. காய்ந்த ஈர்க்குச்சியாய் இருந்த விரல்களால் தம்பியை வருடினார்.



''தா.. தாமரை நல்லா இருக்காளா?'' காய்ந்த தொண்டையிலிருந்து குரல் மெல்ல கசிந்து வந்தது. கண்களில் நீர் வழிய, ''நல்லா இருக்காண்ணே. இன்னிக்கு சாயங்காலமா ஏதோ ஹோட்டல்ல வெச்சு வரவேற்பாம். மாப்பிள்ளை நேத்தே போன் பண்ணிச் சொன்னாரு. அங்கதான் கிளம்பினேன். அப்பத்தான் பொன்ராசு வந்து உங்க நிலமையச் சொன்னான்.'' என்றார் மீனாட்சி சுந்தரம்.

''மாப்... மாப்பிள்ளே. நம்ம குழந்தைய நல்லா வெச்சிருக்காராமா. அவ சந்தோஷமா இருக்காளா'' - திணறி திணறி கேட்டார்.

''மாப்பிள்ளை தங்கமானவருண்ணே. நம்ம புள்ளைய சந்தோஷமா வச்சிருக்காரண்ணே. தினமும் போன்ல பேசுவாண்ணே'' - புன்னகை முகமாய் சொன்ன தம்பியை உற்றுப் பார்த்தார் அண்ணன்.

''நீ... நீ நல்லவன்டா. உனக்கு எல்லாம் நல்லதாவே நடக்கும். நான்தான் பாவம் பண்ணிட்டேன். அதான் எனக்கு பிறந்தது இப்படி ஓடுகாலியாப் போச்சு. ஓடிப்போனவ சும்மா போனாளா. நீ கஷ்டப்பட்டு சேர்த்த பணம் நகை உன் மானம் மரியாதை எல்லாத்தையும் தூக்கிட்டுப் போயிட்டாளே. அதான்டா தம்பி என்னால தாங்க முடியல்ல. நீ அவளை எப்படி வளர்த்தேன்னு எனக்குத்தான்டா தெரியும். உன்னைப் போய் தலை குனிய வெச்சிட்டாளே. சண்டாளி. அவ நல்லா இருப்பாளா. நல்லா இருக்கமாட்டா. கெட்டு சீரழிஞ்சு போயிருவா. என் வயிறு எரியுதுடா. அவ நாசமாப் போயிடுவாடா'' - அவசரமாய் அண்ணனின் வாயைப் பொத்தினார் மீனாட்சி சுந்தரம்.

''அண்ணே! இதென்ன பேச்சு? தப்பு. பெத்த தகப்பன் நீ. நீயே இப்படிப் பேசலாமா? அவ நம்ம பொண்ணுன்னே. எங்க இருந்தாலும் நல்லா இருக்கட்டும்னு நினைக்கணும். இப்படி வயிறு எரியக்கூடாதுன்னே. பெத்தவங்க வயித்தெரிச்சல் பிள்ளைகளை வாழவிடாது. இனிமே இப்படியெல்லாம் பேசாதே. அவ எம்பொண்ணு. நல்லா இருப்பா.'' தொண்டை அடைக்கப் பேசிய தம்பியைப் பார்த்து கண்ணீர் உகுத்தார். ''நீ.. நீ தெய்வம்டா. உன்னைப் போய் கலங்க வெச்சுட்டாளே பாவி. அவ பாவம் அவளைச் சும்மா விடுமா. சரி போனவள் போகட்டும். நீ சீக்கிரமாய் கிளம்பு. தாமரையைப் பார்த்துக் கொள். என்னைப் பற்றிக் கவலைப்படாமல் போ. பாவம் குழந்தை உன்னைத் தேடுவாள்'' - அவசரமாய் பேசினார்.

மரகதம் ஆச்சர்யமானாள். நேற்று வரை முனகிக் கொண்டிருந்தவர் இன்று இத்தனை தெளிவாய் பேசுகிறாரே. இரத்த பந்தம் என்பது இதுதானா? என்ன தான் கண்ணும் கருத்துமாய் கவனித்துக் கொண்டாலும் இத்தனை பேச்சு தன் தம்பியைக் கண்டதும் தானே வந்திருக்கிறது. இனி பிழைத்துக் கொள்வார். நம்பிக்கையுடன் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''அண்ணா உன்னை இந்த நிலையில் விட்டுவிட்டு நான் எப்படி...'' - தயங்கியவரை பொன்ராசு தைரியப் படுத்தினான். ''நீங்க போய் ரிசப்ஷன் முடிச்சப்புறம் வாங்க சித்தப்பா. நானும் அம்மாவும் பார்த்துக்கிறோம். அம்மா தாமரைக்கு என்னவோ பரிசு கொடுக்கணும்னு சொன்னியே. சித்தப்பாகிட்ட கொடுத்தனுப்பு. நாம இன்னோர் நாள் போய் பார்த்திட்டு வருவோம். நீங்க கிளம்புங்க சித்தப்பா. ஒன்பது மணி பஸ் வந்திடும்'' -



என்றான். கிளம்ப மனமே இல்லாமல் அண்ணனிடம் விடைபெற்றுக் கொண்டு மரகதம் கொடுத்த சிறு நகைப் பெட்டியை பத்திரப்படுத்திக் கொண்டு புறப்பட்டார். அண்ணனின் நைந்த விழிகள் தன்னை விட்டு அகலாமல் தொடர மனம் முழுக்க வேதனையோடு வெளியேறினார் மீனாட்சி சுந்தரம்.

''ஏன் பிரபு! இந்தப் புடவை இவரே செலக்ட் பண்ணினதா? எப்போ. எப்போ ஆர்டர் பண்ணினார்'' - அந்த விலை உயர்ந்த பட்டுப் புடவை தனக்காக எடுக்கப்பட்டதா இல்லை தன் அக்காவிற்காக எடுக்கப் பட்டதா என தெரிந்து கொள்ள வேண்டும் என்ற தவிப்பு தாமரைக்கு. கணவனிடம் இப்படிக் கேட்க முடியாதே. என்ன நினைத்துக் கொள்வானோ. தவிர இப்போதுதான் கொஞ்சம் இயல்பாய் நெருங்கிக் கொண்டிருப்பவனுக்கு அக்காவை நினைவு படுத்துவானேன் என்ற எண்ணத்தில்தான் கணவன் அகன்ற உடன் பிரபுவை நெருங்கிக் கேட்டாள்.

''ஷ்யூர் மேம். ரெண்டு மூணு கடைக்காரங்களை வரவழைச்சு நூற்றுக் கணக்கான டிசைன் சில்க் ஸாரிங்களைப் பார்த்து ஒதுக்கி கடைசியா ஒவ்வொரு புடவையில இருந்தும் ஒவ்வொரு டிஸைனை பிரிச்சி குறிப்பா இந்தக் கொடியும் இலைகளும் வேற புடவையில இருந்தது. பட் ஜரிகை இத்தனை கெட்டியா இல்லை. அப்புறம் இந்தக் குட்டி மயில்கள் ஒரு பனாரஸ் பட்டுப் புடவையில் இருந்த டிஸைன். இப்படி எல்லாத்தையும் கலந்துதான் இந்த டிஸைன் ரெடியாச்சு மேம். அப்புறம் இந்த ஸ்டோன் வொர்க் பேர்ல் எல்லாம் சாரோட ஐடியா. கலர்.

இந்தக் கலர் சாரோட பேவரிட் கலர் மேம். யூ லைக் திஸ்?'' கேள்வியாய் நிறுத்தினான் பிரபு.

''யா. ஐ லைக் இட். பட். விலை.. விலை ரொம்ப அதிகமோ. ஏன்னா ஜரிகை இத்தனை பளபளப்பா இருக்கே. எங்கிட்டயும் பட்டு ஸாரிங்க இருக்கு. ஆனா இப்படி ஜொலிக்கலியே'' - உண்மையாக வியந்து போயிருந்திருந்தாள் தாமரை.

''இது தங்க ஜரிகை மேம். அதான் அப்படி பளபளப்பா இருக்கு. அதோட இந்த ஸ்டோன் எல்லாம் அமெரிக்கன் டைமண்ட்ஸ். இந்த முத்து ஒரிஜினல் முத்து. மயிலிற கில் உள்ள ப்ளூ ஸ்டோன் ஒன்று மட்டும் த்ரீ தவுஸன்ட் மேம். எல்லாம் சேர்ந்தா ஒரு சிக்ஸ் ஆர் செவன் லாக்ஸ் ஆகியிருக்கும் மேம்'' - அவன் இயல்பாய் சொல்லிக் கொண்டே போக தன் கையிலிருந்த புடவையை நழுவ விட்டாள் தாமரை. சட்டென புடவை கீழே விழாமல் கையில் ஏந்திக் கொண்டான் பிரபு.

''ஏழு லட்சமா? அம்மா இந்த பணத்துல பத்து கல்யாணம் பண்ணிடலாமே. ஒரு புடவைக்கு இவ்ளோ செலவா? இதைக் கட்டவே பயமால்ல இருக்கும்'' - அவளது வெகுளித்தனமான பேச்சால் பிரபுவின் முகம் புன்னகை பூத்தது.

''நோ மேம். இன்னிக்கு ஈவினிங் பங்க்ஷன் ஒன்றும் சாதாரணமானது அல்ல. பெரிய பெரிய தொழிலதி பர்கள் எல்லாம் வருவார்கள். அவர்கள் மத்தியில் நீங்களும் சாரும் இப்படி விலையுயர்ந்த ஆடையில் நின்றால்தான் மதிப்பு. அதோடு நம் பேக்டரி ஆட்களு மாய் எப்படியும் மூவாயிரம் பேர் வரலாம். நீங்கள் புதுமணத் தம்பதி. ஸோ இப்படி இருந்தால்தான் நன்றாக



இருக்கும். சாருக்கு ட்ரெஸ் ரெடியாக இருக்கும். வாங்கி விட்டு வரப்போகிறோம். கருநீல கோட் சூட். ஸ்டான் பட்டன்ஸ். சாருக்கு ரொம்பப் பொருத்தமா இருக்கும்.

''இன்னிக்கு உங்களைப் பார்க்கிறவங்க எல்லாம் இப்படி ஒரு ஜோடியான்னு வாயைப் பிளக்கப் போறாங்க. கோயம்பேடு மார்க்கெட்ல இருந்து பெரிய பூசணிக்காய் வாங்கி வர வேண்டும். உங்களை சுற்றிப் போட'' - சாதாரணமாகவே பிரபு சொல்ல தாமரை வெட்கத்தோடு சிரித்துக் கொண்டாள்.

அந்த சிரிப்பு சூர்யாவை மேலும் தகிக்க வைத்தது. இத்தனை நேரம் அவள் மீதிருந்த இளக்கம் மறைந்து போய்விட ஒருவித இறுக்கம் சூழ்ந்தது. சுசித்ராவின் தங்கை என்பதை நிரூபித்து விட்டாளே. என்னவெல் லாம் நினைத்து வைத்திருந்தேன். ரிசப்ஷன் முடிந்து தங்களது வாழ்க்கையைத் தொடங்கலாம் என்ற முடிவைத் துடைத்தெறிந்தான். கடுப்பை மறைத்தபடி ''பிரபு போலாமா'' என்றவாறே கார்ச் சாவியை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

''யெஸ் ஸார்...'' என்று பிரபுவும் பின்னே ஓட கணவனின் முகமாற்றம் மனதை நெருடியது.

''இது! இந்தப் புடவை அக்காவிற்காக வாங்கியதோ. இவருக்கு அவள் நினைப்பு வந்து விட்டதோ'' - நினைப்பே கண்களில் நீரை வரவழைத்தது.

''பிரபு! நீ டிரைவ் பண்ணு. எனக்கு லேசா தலை வலியா இருக்கு'' - சூர்யா சொன்னதும் டிரைவிங் ஸீட்டில் ஏறி அமர்ந்தான் பிரபு. ''ஸார்! நீங்கள் வேண்டு மானால் வீட்டில் ரெஸ்ட் எடுங்கள். இந்த வேலையை நான் பார்த்துக் கொள்கிறேன்'' - என்றவனை அவசரமாய் மறுத்தான்.

''நோ. நோ.. லைட்டான தலைவலிதான். ரெஸ்ட் எல்லாம் தேவையில்லை. நீ காரை எடு'' என்றவாறு முன் இருக்கையில் ஏறி சாய்ந்து அமர்ந்து கொண்டான். கார் புறப்பட்டு வெளியேறி மெயின் ரோட்டில் கலந்து சீரான வேகத்தில் சென்று கொண்டிருக்க, சூர்யா பக்கவாட்டில் திரும்பி பிரபுவைப் பார்த்தான். பிரபு அழகன்தான். நல்ல உயரம். பெண்கள் யாவரும் திரும்பிப் பார்க்கும் அழகு. அடக்கமான பேச்சு. கூரிய அறிவு. பெண்களிடம் சற்று எட்டி நின்றே பேசும் நாகரீகம். இவையெல்லாம் பார்க்கும் பலரையும் கவர்ந்து விடும். ஏன் தன்னிடம் வேலை பார்ப்பதில் ஒரு கூட்டமே பிரபுவுக்கு ரசிகைதான். எல்லாம் சூர்யாவுக்கும் தெரியும். தனக்கும் பிரபுவின் கம்பீரமும் ஒழுக்கமும் தன்னடக்கமும் உழைப்பும் சுறுசுறுப்பும் ரொம்பவே பிடிக்கும்.

அதனால் ஏழு வருஷமாய் தன்னிடம் வேலை பார்க்கும் பிரபுவை தன் நண்பனாகவே ஏற்றுக் கொண்டிருந்தான் சூர்யா. அந்த நட்பின் அடிப்படையில்தான் பெண் பார்த்து நிச்சயம் செய்தபோது மாப்பிள்ளை தோழனாக பிரபுவை அழைத்துப் போயிருந்தான். கலகலப்பாக எல்லாம் முடிந்து கிளம்புகையில், ''ஸார்! பெண் உங்களிடம் பேச ஆசைப்படுவதைப் போல் தெரிகிறது. ஆனால் நம் வீட்டுப் பெரியவர்கள் அதற்கு சம்மதிக்கத் தயங்குவார்கள். அதனால் உங்க செல் நம்பரைக் கொடுத்து விட்டு வாருங்கள். மேரேஜ்க்கு இன்னும் இருபது நாள் இருக்கு. அதுக்குள்ள நீங்க பேசி உங்க எண்ணங்களைப் பகிர்ந்துகிட்டா லைப் ஸ்மூத்தா இருக்கும். இப்போ சிட்டியில மட்டுமில்ல கிராமங்கள்ல கூட போன் பேசுறது சகஜமாகி விட்டது'' - என்று தன்னிடம் கிசுகிசுத்ததோடு நில்லாமல் தனது



விஸிட்டிங் கார்டையும் பெண்ணின் தந்தையிடம் கொடுத்து விட்டான். ''இது மாப்பிள்ளையோட கார்டு ஸார்.

''இதுல ஆபீஸ் நம்பர், வீட்டு போன் நம்பர், மாப்பிள்ளையோட செல் நம்பர் எல்லாமே இருக்கு. எதுவும் அவசரம்னா நீங்க அவரை காண்டாக்ட் பண்ணிக்கலாம்'' என்றதும் இரு பெரியவர்களும் சிரித்துக் கொண்டனர். ''பார்த்தீங்களா சம்பந்தி! இந்தக் காலத்து பசங்க எத்தனை வேகமா செயல்படுறாங்க பார்த்தீங்களா. உங்களுக்கோ எனக்கோ இது தோணிச்சா பாருங்க. எப்படியோ நம்ம புள்ளைங்க சந்தோஷமா இருந்தா சரிதான்'' - என்றார் ராஜசேகரன்.

வீட்டிற்கு வந்து வெகு நேரத்திற்குப் பிறகு எதிர்பார்த்ததைப் போல் சுசித்ராவிடம் இருந்து போன் வந்ததும் படபடப்பானான் சூர்யா. ஒரு பெண்ணிடம் அதுவும் தன் வாழ்க்கைத் துணையாக நிச்சயிக்கப்பட்ட பெண்ணிடம் முதன் முறையாக பேசப்போகிறோம் என்றதும் வியர்த்துக் கொட்டியது. என்ன பேசலாம் எப்படிப் பேசலாம் என மனதிற்குள்ளே ஒத்திகை பார்த்தது எல்லாம் மறந்து போய்விட ''ஹாய்'' என்ற ஒற்றைச் சொல்லோடு சூர்யா நிறுத்திவிட சுசித்ரா வெகு இயல்பாய் பேச ஆரம்பித்தாள். சம்பிரதாயமாய் இரண்டு வார்த்தைகள் பேசியவள் பிறகு பேசியதெல்லாம் பிரபு புராணமாகத்தான் இருந்தது. சூர்யா முகம் சுளித்தான். என்ன பெண் இவள். எதிர்கால கணவனிடம் பேசும் பெண் இப்படியா இன்னொரு ஆடவனைப் பற்றி பேசுவாள். சூர்யாவின் மனப்போக்கை அறியாத சுசித்ரா மறுமுனையில் பேசிக் கொண்டே போனாள்.

''என்னங்க நீங்க. பெண் பார்க்கும் போது இப்படி அழகான பிரண்டை எல்லாம் கூட்டிட்டு வரக்கூடாதுங்க. இப்போ நான் என்பதால் பரவாயில்லை. இதுவே வேற பெண் என்றால் எனக்கு மாப்பிள்ளையைப் பிடிக்கல்ல. அவர் பக்கத்தில் இருப்பவரைத்தான் பிடிச்சிருக்குன்னு பட்டுனு சொல்லிடுவா'' - என்று விட்டு கலகலவென சிரிக்க சூர்யாவிற்கு சுறுசுறுவென கோபம் கிளர்ந்தது.

''உங்களுக்குத் தெரியுமா சூர்யா. கிராமங்கள்ல அக்காவைப் பெண் பார்க்க வந்தா தங்கச்சிங்களை புழக்கடைக்கு போகச் சொல்லிடுவாங்க. ஏன்னா அக்காவைப் பார்க்க வந்த மாப்பிள்ளை தங்கச்சிய பிடிச்சிருக்குன்னு சொல்லிடுவாரோன்னு பயம். நான்கூட என் தங்கையை வெளியே அனுப்பிட்டேன். என்னைவிட அவ அழகில்லைதான். ஆனாலும் நீங்க கொஞ்சம் தடுமாறினாலும் போச்சே. அதான் எதற்கு வம்பு என்று அவளை வெளியேற்றிவிட்டேன்'' - என்றவாறு மீண்டும் சிரிக்க கொதித்துவிட்டான் சூர்யா.

''நான் ஒன்றும் நிலையில்லாத புத்தி உடையவனும் அல்ல. பெண்களைப் பார்த்து வழிபவனும் அல்ல. மற்ற ஆண்களைப் போல் என்னை நினைக்க வேண்டாம்'' - காட்டமாகவே சூர்யா சொன்னதும் சற்று இறங்கி வந்தாள் சுசித்ரா.

''ஐயோ சூர்யா! நான் சும்மா ஜோக்காகப் பேசினேன். உங்களை அப்படி நினைக்கவில்லை. நான் எப்போதுமே இப்படித்தாங்க. மனசுல ஒண்ணு வெளிய ஒண்ணுன்னு எனக்குப் பேசத் தெரியாது. ஸாரிங்க. மனசுல உள்ளதை மறைக்காம பேசிடுவேன். அதனால எங்க அப்பாகிட்ட



கூட திட்டு வாங்குவேன். உங்களைப் பார்த்ததுமே எனக்கு உங்களை ரொம்ப பிடிச்சுப் போச்சு. எங்க சொந்தக்காரங்க எல்லாம் பேசினதை வெச்சுத்தான் உங்க பிரண்டைத் தெரியும். நான் ஒன்றும் அவரைப் பார்க்கவில்லை தெரியுமா'' - குழந்தை போல் அவள் பேசியதைக் கேட்டதும் இளகினான். வெள்ளை மனம் கொண்ட குழந்தை என்று தான் எண்ணி ஏமாந்து போனேன். அதே போல் இதோ இவளும் பால் மனம் மாறா குழந்தை போல் முகத்தை வைத்துக் கொண்டு என்னை ஏமாற்றி விட்டு நான் நகர்ந்த பின்பு பிரபுவிடம் என்ன ரகசியமான பேச்சு வார்த்தை.

சிரிப்பு. ச்சே! எல்லாவிதத்திலும் ஏமாந்து போனேனே. படிக்கும் காலத்தில் கூட பெண்கள் பக்கம் திரும்புவதில்லை சூர்யா. நண்பர்கள் கூட்டம் சாமியார் என கேலி பேசினாலும் கண்டுகொள்ள மாட்டான். ''இந்த வயசுல படிப்பு மட்டும்தான்டா நம்ம நினைப்பில் இருக்கணும். அப்பத்தான் படிச்சு முன்னேற முடியும். படிக்கிற காலத்தில இந்த மாதிரி விஷயங்கள் மனசுல நுழைஞ்சிட்டா படிப்பிலயும் ஜெயிக்க முடியாது. ஒழுங்கா படிக்காம லைப்லயும் ஜெயிக்க முடியாது. நான் ரெண்டுலயும் ஜெயிக்கணும். என்னை விட்டுடுங்க'' என்று ஒதுங்கிக் கொள்வான். ''சரிடா சாமியாரே! எங்களை மாதிரி ஜோடி போட்டு சுத்த வேண்டாம். ஜஸ்ட் கலர் கலரா பட்டர் பிளைங்க நம்ம கண்ணு முன்னால நடமாடுதே. அதைக்கூட பார்த்து ரசிச்சு கமெண்ட் அடிக்கமாட்டியா?'' - என்பான் கோகுல்.

''இல்லடா கோகுல். இது தப்பு. இந்தப் பொண்ணுங்க வேற வீட்ல போய் வாழப் போறவங்க. இன்னொரு

ஆணுக்கு சொந்தமாகப் போறவங்க. அவங்களப் பார்த்து ரசிக்கிறதே தப்பு. இதில அசிங்கமா கமெண்ட் அடிக்கிறது ரொம்பவும் தப்பு. நமக்குன்னு பொறந்திருக்கிற பொண்ணைப் பார்ப்போம்ல. அவங்களைத் தான் ரசிக்கணும். பேசணும். விரும்பணும்'' என்றெல்லாம் பேசுவதால் சூர்யாவைக் கண்டாலே ஜொள்ளு விட்டுத் திரியும் நண்பர்கள் ஒதுங்கி விடுவார்கள்.

படிப்பு முடிந்த பிறகும் கூட ஏனோ சூர்யாவிற்கு பெண்களிடம் பெரிதாய் ஈடுபாடு வரவில்லை. தன்னிடம் பணிபுரியும் பெண்களாகட்டும் விருந்து விசேஷங்களில் காணும் நவநாகரிகப் பெண்கள் ஆகட்டும் அவன் மனதை அசைக்கவேயில்லை. ஏன் சுசித்ராவைப் பார்க்கும் போது கூட தயக்கமும் கூச்சமும் தான் போட்டி போட்டதே தவிர ஆசை நேசம் பூரிப்பு என எதுவுமே ஏற்படவில்லையே. திருமணத்திற்கு பிறகு தான் இதெல்லாம் ஏற்படுமோ என்று நினைத்ததுண்டு. ஆனால் ஆசை வார்த்தைகளைப் பேசிவிட்டு கடைசியில் கம்பியை நீட்டி விட்டாள் என்றதும் பெண் என்ற வார்த்தையே கசந்து போனது. அதனால்தான் திருமணமே வேண்டாம் என்று தலைகீழாய் நின்று பார்த்தான். விதி வலியதோ அன்றி தனக்கான இணை இந்தத் தாமரை தானோ. அதனால் தான் திருமணம் இப்படிக் கைமாறியதோ. எதுவோ ஒன்று தாமரையிடம் தன்னைக் கட்டிப் போட்டதை தாலி கட்டிய நிமிடமே உணர்ந்து கொண்டான் சூர்யா.

மங்கல நாண் பூட்டியபோது தன் கைகளில் விழுந்த கண்ணீர் துளியா அல்லது நெற்றித் திலகமிடும்போது பார்த்த செந்தாமரை முகமா ஏதோ ஒன்று தாமரையை தன் மனதிற்குள் பதித்துக் கொண்டது. வெளியே



சிடுசிடுத்தாலும் அவள் சாப்பிடாமல் வருத்திக் கொண்டால் தன் உள்ளம் பதறுகிறதே. அவள் முகத்தில் விழிக்கத்தானே மனம் விரும்புகிறது. அவள் கொலுசொலியும் வளையோசையும் தானே தான் விரும்பிக் கேட்கும் இசையாகிறது. அப்படியானால் நான் அவளை விரும்புகிறேனா. என் மனதை ஆட்கொண்டு விட்டாளா அவள். அதனால்தான் இன்று அவள் சாதாரணமாக பிரபுவிடம் பேசினால் கூட எனக்கு பற்றி எரிந்ததா? வேறு பெண்கள் பிரபுவிடம் பேசும்போது எரியாத தேகம் இப்போது எரிகின்றதென்றால் இது பொறாமைத் தீயா? இதுதான் நேசத்தின் அடிப்படையா? தன் நேசத்திற்கு உரியவள் தானா தாமரை. இந்த சந்தேகம் வந்ததும் மனம் நொந்தது. என்ன பேசினாள் இவனிடம். இதை எப்படிக் கேட்க முடியும் என்னால். கேட்டால் சந்தேகப்படுவதைப் போல் ஆகாதா? அது எத்தனை பெரிய இழி செயல். அதை நான் செய்யலாமா? மன உளைச்சல் அதிகமாக தலைவலியும் அதிகமாயிற்று. தலையைப் பற்றிக் கொண்டான்.

காரை ஓரமாய் நிறுத்தினான் பிரபு. ''ஸார்! தலைவலி அதிகமாக இருக்கிறதா? மாத்திரை போட்டுக் கொள்கிறீர்களா? இல்லை உங்களை வீட்டில் விட்டு விட்டு நான் போய் ட்ரெஸ் மெட்டீரியல்ஸ் வாங்கி வந்து விடட்டுமா?'' என்றான்.

''இல்ல பிரபு. ட்ரஸ்ஸ வாங்கிட்டு ஏர்போர்ட் போகணும். அம்மா அப்பாவை ரிஸீவ் பண்ணணுமே. ஏற்கனவே எம்மேல அவங்களுக்கு கொஞ்சம் கோபம். இப்போ நான் போகல்லன்னா ரொம்ப வருத்தப்படுவாங்க. நீ வண்டியை எடு. ஒரு மணிக்கு ப்ளைட்

வந்திடும். நாம அதுக்குள்ள மத்த வேலையை முடிச்சிட்டு ஏர்போர்ட்டுக்கு போயிடணும்'' - என்றதும் மீண்டும் கார் புறப்பட்டது. தாமரையின் நினைவுகளை ஒதுக்கி விட்டு சாலையில் கவனத்தைத் திருப்பினான் சூர்யா.

## 12

அதிர்ச்சியாய் விழிகளை விரித்தாள் சுசித்ரா. ஏதோ சும்மா தன்னை பயமுறுத்துவதற்காகத்தான் அப்படிச் சொன்னான் என அலட்சியமாய் இருந்தவள் நந்தா கையில் மஞ்சள் கயிற்றுடன் வந்து நின்றபோது திகைத்துப் போனாள். ''என்ன சுசி! அப்படிப் பார்க்கிற? இன்னிக்கு நம்ம கல்யாணம். அதான் மஞ்சள் கயிறு வாங்கிட்டு வந்தேன். மாலையும் வாங்கலாம்னுதான் பார்த்தேன். ஆனா பாரு இன்னிக்கு சரியான முகூர்த்த நாளாம். எல்லா மாலையும் வித்துப் போச்சுன்னு கடைக் காரன் சொல்லிட்டான். சரி வாடிப்போற மாலை எதுக்குன்னு எப்பவும் கழுத்தோட இருக்கப்போற தாலி போதுமேன்னு வாங்கிட்டு வந்திட்டேன். பாரு நான் காலம் நேரம் எதுவுமே பார்க்கல்ல. ஆனா கடவுளா பார்த்து நல்ல முகூர்த்த நாளா நம்ம கல்யாணத்துக்கு அமைத்துக் கொடுத்துட்டாரு. சரி. சரி. கிழக்கே பார்த்து நில்லு. நான் தாலி கட்டுறேன்'' - என்றான்.

அவனது தீவிரம் சுசித்ராவின் வயிற்றில் புளியைக் கரைத்தது. போயும் போயும் இவன் கையில் தாலி வாங்குவதா? அதுவும் மஞ்சள் கயிறு. எனக்காக



பதினைந்து பவுனில் தங்கத் தாலி செய்து வைத்திருந்த என் சூர்யாவை என்னிடம் இருந்து பிரித்து நான் இருக்க வேண்டிய அரண்மனையில் அந்த கழிசடையை அமர்த்தி வைக்கக் காரணமான இவனது கழுத்தை அறுத்தால் என்ன? இவனை விடக்கூடாது. சுசித்ரா என்ற பெயரைக் கேட்டாலே அலறி ஓட வேண்டும். கனவில் கூட என்னை நினைக்கக் கூடாது இவன். மரண பயத்தை ஏற்படுத்த வேண்டும்.

என்ன செய்யலாம். இது எந்த இடம் என்றும் தெரியவில்லையே. அக்கம் பக்கம் வீடும் இருப்பதைப் போல் தெரியவில்லை. முதலில் இங்கிருந்து வெளியேற வேண்டும். தன்னால் நிச்சயம் அது முடியாது என இரவே தெரிந்து போனது. அது பழங்கட்டிடம் என்றாலும் ஜன்னல்கள் இல்லாத அறை. சுவரையோ கதவையோ உடைக்க முடியவில்லை.

இவனையாவது அடித்துப் போட்டுவிட்டு தப்பிக்கலாம் என்றால் அறையில் சிறு துரும்புகூட இல்லை. சாப்பிடும் தட்டு கூட இல்லை. பார்சலில்தான் சாப்பாடு வாங்கி வருவான். சாப்பிட்டு முடித்ததும் கையோடு குப்பைகளை கவரில் போட்டு எடுத்துப் போய் விடுவான். அதுவும் அரை வயிற்று சாப்பாடு மட்டுமே சாப்பிட்டு உடலும் பலவீனமாக இருப்பதால் இவனை எதிர்த்துப் போராடவும் முடியாது. இவனிடம் இருந்து தப்ப வேண்டும் என்றால் அது தன் பேச்சால் தான் முடியும். எப்படித் தொடங்கலாம்? மூளை அவசரமாய் கணக்கு போடத் தொடங்க,

''என்ன சசி. கிழக்கு எதுன்னு தெரியலியா? என்னை மாதிரி நில்லு'' என தோள் தொட்டு திருப்பினான் நந்தா.

சுசித்ராவின் கண்களில் நீர் ஆறாய் பெருகி ஓட பதறிப் போனான். ''என்ன சசி! ஏன் அழறே? என்னடா இருட்டு அறையில வெறும் மஞ்சக் கயிறை கட்டிப் போறானேன்னு தானே அழற? கவலைப் படாதே. கொஞ்ச நாள் அட்ஜஸ்ட் பண்ணிக்கோ. உன்னைத் தூக்கிட்டு வந்து உன்னைப் பாதுகாத்துக் கிடந்ததால அந்த டிரைவர் வேலையும் போயிடுச்சு. வேற வேலைக்கு சொல்லி வைச்சிருக்கேன். இன்னும் ஒரு வாரத்துல வேலை கிடைச்சிடும். அதுக்கப்புறம் வேற வீடு பார்த்து உன்னைக் கூட்டிட்டுப் போயிடுறேன். தங்கத்துல தாலி செய்து போட்டு உன்னை ராணியாட்டம் வைச்சுப்பேன். அழாதே'' - என்றவாறு கண்ணீரைத் துடைத்துவிட்டவனின் மார்பில் சாய்ந்து கதறினாள்.

''என்னை மன்னிச்சிடு நந்தா. உன்னைப் போய் ஒதுக்கி விட்டேனே. எத்தனை நல்லவன் நீ. எனக்காக எத்தனை கஷ்டப்பட்டிருக்கிறாய். உன்னை உன் மனதைப் புரிந்து கொள்ளாமல் பைத்தியக்காரியாய் இருந்து விட்டேனே. நான் உயிரோடு இருக்கக் கூடாது நந்தா. இருக்கவே கூடாது. என்னைக் கொன்றுவிடு. உன் கையால்தான் நான் சாக வேண்டும். அதுதான் நான் செய்த பாவத்திற்கான தண்டனை. என்னைக் கொன்று விடு. உன் கையால் என்னைக் கொன்று விடு'' - அவனது கைகளை எடுத்து தன் கழுத்தில் வைத்துக் கொண்டு பெருங்குரலெடுத்து அழுதாள்.

இதனை சற்றும் எதிர்பாராத நந்தா திணறித்தான் போனான். கையிலிருந்த தாலியைத் தவற விட்டு அவளை அணைத்துக் கொண்டான். ''சுசி. இது என்ன பேச்சு. இப்படியெல்லாம் பேசக்கூடாதும்மா. நான் இப்பவும்



உன்னை விரும்புறேம்மா. நீ ஒரு குழந்தை. உலகம் புரியாத குழந்தை. நீ என் உயிர்டா. உன்னைப் போய் என் கையால... ச்சே'' - பேச முடியாமல் நந்தா நிறுத்த,

மனம் கறுவினாள் சுசித்ரா. மீண்டும் அழத் தொடங்கியவளாக, ''இல்ல நந்தா. நான் உன்னை ரொம்ப கஷ்டப்படுத்திட்டேன். நீ நேத்து சொன்னப்பறம்தான் எனக்கு எல்லாமே புரிஞ்சது. தாமரை நல்லவ. அதனால தான் அவளுக்கு நல்ல வாழ்க்கை அமைஞ்சிருக்கு. நான்தான் பாவி. உன்னைப் புரிஞ்சுக்காம என் வாழ்க்கையை வீணாக்கிட்டேன்.''

''ஏன்டா இப்படிப் பேசுறே? அதான் நம்ம கல்யாணம் பண்ணிக்கப் போறோமே. நீ இனிமே எதை நினைச்சும் கவலைப்படக்கூடாது. சரியா?'' என்றவாறு அவளை நிமிர்த்தினான். நிமிர்ந்து அவனைப் பார்த்து சிரித்தாள். ''ஆமாம்! நமக்குக் கல்யாணம் இல்ல'' என்றவாறு அறையைச் சுற்றிப் பார்த்தாள். மீண்டும் கண்ணீர் எட்டிப் பார்க்க, ''நந்தா. நாம கல்யாணம் பண்ணி நூறு வருஷம் சந்தோஷமா வாழணும். அந்த வாழ்க்கை இப்படி இருளடைஞ்ச வீட்லயா தொடங்கணும். இதைப் பார்த்தாலே பாழடைஞ்ச இடம் மாதிரி இருக்கு. எனக்கு பயமாவும் இருக்கு. என்னை ஏதாவது கோவிலுக்குக் கூட்டிட்டுப் போய் தாலி கட்டேன். நம் வாழ்க்கை நாதஸ்வர ஓசையில் இல்லாவிட்டாலும் கோவில் மணியோசை கேட்டாவது மங்களகரமாக ஆரம்பமாகட்டுமே. என்ன சொல்றே நந்தா'' - என்றாள் அவனது முகத்தைப் பார்த்துக் கொண்டே.

சட்டென உஷாரானான் நந்தா. இவளை வெளியில் அழைத்துச் செல்வது தன் மேல் பெட்ரோல் ஊற்றிக் கொண்டு தீ வைப்பதற்குச் சமம்.

ஏதோ ப்ளான் பண்ணுகிறாள். ஏமாந்துவிடக்கூடாது. அவனது யோசனையை பார்த்து விட்டு மீண்டும் கண்ணீர் உகுத்தாள் சுசித்ரா.

"நீ என்னை நம்பல இல்லை. நீ என்னை நம்ப மாட்டாய். நீ நம்பும்படியா நடந்து கொண்டேன் நான். நான் பாவி - பணத்தாசை பிடிச்ச பேய். தேவைக்கேற்றாற் போல் நிறம்மாறும் பச்சோந்தி என்றுதானே நினைக்கிறாய். நான் மாறிவிட்டேன் நந்தா. நீ மாற்றிவிட்டாய். உன் உண்மையான நேசம் என்னை மாற்றிவிட்டது நந்தா. இன்னும் நம்பவில்லையா நீ. நான் என்ன செய்தால் நம்புவாய். இதோ இந்த சுவற்றில் என் தலையை மோதி உயிரைவிட்டால் நம்புவாயா? சொல். இப்போதே என்னை மாய்த்துக் கொள்கிறேன். நீ நம்பாமல் நான் உயிரோடு இருக்க வேண்டுமா. வேண்டாம். நான் போகிறேன்" - என்றவாறு அந்த கருங்கல் சுவற்றில் மடார் மடாரென்று தலையை மோதினாள். உறுதியான அந்தப் பாறாங்கல் உடனே அவள் நெற்றியை பதம் பார்க்க இரத்தம் கசிந்து வழிய ஆரம்பித்தது. பதறி துடித்துப்போனான் நந்தா.

"ஐயோ இரத்தம். என்ன காரியம் செய்துவிட்டாய் சுசி. நான் நம்புகிறேன். உன்னை முழுதாய் நம்புகிறேன். தயவு செய்து நிறுத்து. ஐயோ இரத்தம் வழிகிறதே. இப்போது நான் என்ன செய்வேன். ஹாஸ்பிடல் போக வேண்டும் என்றால் கூட ஒரு மணி நேரமாகுமே, சுசி. வலிக்கிறதா." - நெற்றிக் காயத்தை அழுத்திப் பிடித்த வாறே கேட்டவனைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

"நீ என்னை நம்பிட்டல்ல. அதுவே போதும். இது ஒன்னும் பெரிய காயம் இல்லை. வா முதல்ல நம்ம கல்



யாணத்தை முடிச்சிட்டு அப்படியே அப்பா கால்ல விழுந்து மன்னிப்புக் கேட்க வேண்டும். மீனாட்சி அம்மன் கோவிலுக்குப் போலாமா? ஏன்னா முகூர்த்த நாள்ல எப்படியும் அங்கே நாலஞ்சு கல்யாணம் நடக்கும். நாமளும் அதோட சேர்ந்து கல்யாணம் பண்ணிக்கலாம். மேள தாளம் முழங்க நீ எங்கழுத்துல தாலி கட்டணும்னு ஆசைப்படறேன் நந்தா. என் ஆசையை நிறைவேற்று வியா. ப்ளீஸ் நந்தா" - நெற்றியில் வழியும் செந்நீரைப் பற்றி துளியும் வருந்தாமல் தமது திருமணத்தைப் பற்றி அவள் பேசவும் சுத்தமாய் மதிமயங்கிப் போனான் நந்தா.

"அதெல்லாம் சரி சுசி. ஆனா நாம இப்போ மதுரையில் இல்லை. திண்டுக்கல் தாண்டி ஒரு குக்கிராமத்தில் இருக்கோம். இது ஒரு சவுக்கு தோப்பு. ஆள் நடமாட்டம் இல்லாததால இந்த இடத்தைத் தேர்ந்தெடுத்தேன். காவல்காரனுக்கு கொஞ்சம் காசை கண்லகாட்டி அப்பப்போ கவனிச்சு வந்து போயிட்டு இருக்கேன். இங்கே பஸ் போற ரூட் இல்லை. வெறும் மண்ரோடு தான். அதான் பிரண்டோட ஒர்க்ஷாப்ல ரிப்பேருக்கு வந்த ஒரு ஆட்டோவை எடுத்திட்டு வந்தேன். இப்போ எப்படி உன்னை இந்தக் காயத்தோட நான் மதுரைக்கு அதுவும் மீனாட்சி அம்மன் கோவிலுக்குப் போக முடியும். ஏற்கனவே அங்கே போலீஸ் பாதுகாப்பு அதிகம். நம்மள இந்தக் கோலத்தில பார்த்தா சந்தேகப்படமாட்டாங்களா?" - நந்தா இயல்பாய் கேட்க,

"படுவாங்கடா! அதற்காகத்தானே உன்னை அங்கே கூட்டிட்டு போகச் சொல்லி பாலும் பழமும் சாப்பிட்டு வளர்த்த என் இரத்தத்தை சிந்திப் போராடுகிறேன். உன்னை காக்கிச்சட்டையிடம் மாட்டி விட்டு ஆயுசுக்கும்

நீ வெளியே வரமுடியாதபடி உள்ளேயே உன் காலத்தைக்
கழிக்க வைக்க வேண்டும். இதற்காக எவ்வளவு இரத்தம்
வேண்டுமானாலும் சிந்துவேன்'' தனக்குள்ளே பேசிக்
கொண்டவளை உலுக்கினான். சுதாரித்துக் கொண்ட
வளாய், ''ஓ. அது வேற பிரச்சனை ஆயிடுமே. சரி அப்போ
எங்க வீட்டுக்குப் போவோம். அப்பா கண் முன்னாலயே
நம்ம கல்யாணம் நடக்கட்டும். எங்கப்பா எல்லாக்
கடவுள்களை விட பெரிய கடவுள். அவர் முன்னிலை
யில் திருமணம் நடந்தால் நிச்சயமாய் நாம் அமோகமாக
வாழ்வோம். போலாமா'' - என்றாள்.

''இல்ல சுசி! உன் அப்பா இப்போ இங்கில்லை.
சென்னையில ரிஸப்ஷன் இருக்காம். அதற்காக போயி
ருக்காராம்.''

ஓஹோ. திருமணம்தான் மாறிப்போனது. ஆனால்
திட்டமிட்டபடி எல்லா நிகழ்ச்சிகளும் நடந்து கொண்டு
தான் இருக்கிறதா? சூர்யா எப்படி வெட்கமில்லாமல்
அவளுடன் மேடையேறி நிற்பார். ச்சே! இவளுக்கு
அறிவு வேண்டாம். அக்கா கணவராக இருக்க வேண்
டியவரை எப்படித் தன் கணவராக ஏற்றுக்கொள்ள மனம்
வந்தது. இந்த அப்பாவுக்குக் கூடவா புத்தி மழுங்கி
விட்டது. காணாமல் போன என்னைப் பற்றி துளியும்
கவலையின்றி தன் மகளின் திருமண வரவேற்பைப்
பார்த்து மகிழப் போய்விட்டாரா? என்ன இருந்தாலும்
நான் வளர்ப்பு மகள்தானே. வருகிறேன். உங்கள் அனை
வரையும் சிதற அடிக்க வருகிறேன். நான் இங்கே இருட்
டிலும் பசியிலும் துடித்துக் கொண்டிருக்க அங்கு விருந்து
விசேஷம் தடபுடலாக நடக்கிறதோ? உங்கள் அத்தனை
பேரின் கொண்டாட்டத்தையும் தூள்தூளாக்க வரு



கிறேன். மனம் எரிமலையாய் குமுற முகத்தை துயரமாக
வைத்துக் கொண்டாள்.

''அப்படியா! அப்பாவும் இல்லையா? சரி அவராவது சந்தோஷமா இருக்கட்டும். சரி நந்தா. நாம மதுரை போகவேண்டாம். திண்டுக்கல்ல ஒரு சக்திவாய்ந்த அம்மன் கோவில் இருக்கு. நான் சில சமயம் வந்திருக்கேன். எனக்கு இடம் தெரியும். நான் வழி சொல்றேன் போலாமா? அதோட தலையும் விண்விண்ணு தெரிக்குது. போற வழியில தலையில கட்டுப்போட்டுட்டுப் போயிடலாமா? இரத்தமும் நிக்கமாட்டேங்குது. நந்தா எனக்கு மயக்கம் வர்றமாதிரி இருக்கு. சீக்கிரமா ஹாஸ்பிடலுக்கு போவோம்'' -என்றவாறே விழிகள் செருக அவன் தோள்மீது சாய்ந்துவிட அவசரமாய் அவளை அழைத்துக் கொண்டு காவலாளியிடம் பணத்தைத் திணித்துவிட்டு ஆட்டோவில் அவளை அமர வைத்துவிட்டு ஓட்டுநர் இருக்கையில் ஏறி அமர்ந்தான். சட்டென நினைவு வர ''சுசி தாலியை விட்டுவிட்டேனே. ஒரு நிமிஷம். நீ அப்படியே சாய்ந்து படுத்துக்கோ. நான் தாலியை எடுத்துட்டு வர்றேன்'' - என்றவாறு இறங்கினான்.

''சீக்கிரமா வா நந்தா. என்னால வலியைத் தாங்க முடியல.'' முனகினாள்.

''இதோடா. ஒரே செகண்ட்.'' - என்றவாறு பரபரவென இறங்கி காவலாளியிடம் ஏதோ பேசிவிட்டு ஓட்டமாய் ஓடி கையில் தாலியுடன் வந்தவனை புழுவைப் பார்ப்பதுபோல் பார்த்தாள். மஞ்சள் கயிற்றை சுற்றி சட்டை பையினுள் பத்திரப்படுத்திவிட்டு ஆட்டோவை ஸ்டார்ட் செய்தான். அந்த அமைதியான பகுதியில் ஆட்டோவின் அலறல் எதிரொலித்தது. சத்தம் பலமாக

இருந்தாலும் ஆட்டோ வேகமாகவே பறந்தது. நிம்மதிப் பெருமூச்சொன்றை விட்டுக் கொண்டாள் சுசித்ரா. ம்... எப்படியோ இந்த சிறையை விட்டு வெளியே வந் தாயிற்று. இனி இவனை சரியான வகையில் நிமிரவே முடியாத அளவில் மாட்ட வைக்க வேண்டும். எப்படித் தொடங்கலாம்'' - என கணக்குப் போட்டுக் கொண்டு அவள் வர, நந்தா ரொம்பவே உற்சாகமாய் வாகனத்தை செலுத்தினான். தன்னை முழுதாய் சுசித்ரா ஏற்றுக் கொள்வாள் என கனவிலும் நினைக்கவில்லை அவன். எப்படியோ மனம் மாறினாளே. தனக்காக தன் உயிரையே மாய்த்துக் கொள்ளத் துணிந்துவிட்டாளே. என் மீதுள்ள அன்பு மறையாமல் குறையாமல்தான் இருந்திருக்கிறது. நான் தான் அவளைத் தப்பாக நினைத்து கஷ்டம் கொடுத்துவிட்டேன். இனி அவளை சந்தோஷமாக வைத்துக் கொள்ள வேண்டும். கனவுகளில் மிதக்க ஆரம்பித்தான்.

## 13

மின்னல் ஒளியை மிஞ்சும் வண்ணமாய் வீசிய பிளாஷ்களாகட்டும், தன் அருகிலேயே நின்று கொண்டு வியர்வையை ஒற்றியெடுப்பதும் பரிசு கொடுப்பவர் களிடம் தனது மருமகளை அறிமுகப்படுத்துவதுமாய் அக்கறையாய் தன்னைப் பார்த்துக் கொண்ட மாமியா ராகட்டும், தேவதையாய் ஜொலித்த தன் மகளை முகம் முழுக்க பூரிப்புடன் ரசித்துக் கொண்டிருந்த தந்தை யாகட்டும், வரிசையாய் வந்திறங்கிய வாழ்த்திய



செல்வந்தர்களும் சீமாட்டிகளும் தாமரையைக் கவர வில்லை. அவள் கவனம் முழுக்க தன் கணவன் மீதே இருந்தது. கருநீல கோட்சூட்டுடன் இளம்நிற ரோஜா மாலையுடன் கம்பீரமான மகாராஜா தோற்றத்துடன் நின்றிருந்தவன் மறந்தும் கூட மனைவியின் புறம் திரும்பவில்லையே. இயல்பான புன்னகையுடன் வந்த வர்களிடம் கை குலுக்குதல் நண்பர்களைத் தோளோடு லேசாக அணைப்பது என்று யாருக்கும் துளியும் சந்தேகம் வராதபடி நடந்து கொண்டான் தான். அதுவும் உடன் பயின்ற கல்லூரி நண்பர்கள் கூட்டம் ஒன்றின் வற்புறுத்தலின் பேரின் மனைவியின் தோளைப் பற்றி கொண்டு போட்டோ எடுத்தபோது கூட பட்டும்படா மல் இருந்தவிதம் இதயத்தைப் பிராண்டியது.

இனி இந்தப் புடவையை கட்டக்கூடாது. இதைப் பார்த்ததில் இருந்துதான் இவர் முகம் சரியில்லை. எதுவுமே இல்லையென்றாலும் அந்த கலகலப்பு மட் டுமே போதும் என்றிருந்தாளே. அந்த சிரிப்பும் கலகலப் பான பேச்சும் எங்கே போயிற்று. அவரது புன்னகையை பறித்த இந்த விலைமதிப்புள்ள புடவை வேண்டவே வேண்டாம். எப்போது நிகழ்ச்சி முடியும் கழற்றி எறிந்து விடலாம் என்று முள்மேல் நிற்பது போல் தவித்துக் கொண்டிருந்தாள். பிரபு கடைசிவரை இந்தப் புடவை எப்போது ஆர்டர் கொடுத்தது என்று சொல்லாமல் போனாலும் கணவனின் முகமே காட்டிக் கொடுத்து விட்டதே. சுசித்ராவிற்காக ஆசை ஆசையாய் செலக்ட் பண்ணிய ஆடை. இது தன் மேனியில் படர்ந்திருப்பதைப் பார்க்கவும் அவருக்கு விருப்பமில்லாமல் போயிற்றே. இதுவே தன் இடத்தில் சுசித்ரா நின்றிருந்தால் இவர் முகம் எப்படி இருந்திருக்கும். இந்த கம்பீரமான அழகு

முகம் சூரியனைப்போல் ஜொலித்திருக்குமோ. பெயருக் கேற்றாற்போல் சூரிய ஒளியைப் போல் பிரகாசமாய் இருந்திருப்பாரோ. விருப்பமில்லாமல் தானே தாலியைக் கட்டினார். அந்த வெறுப்பு இன்னும் மறையவில் லையோ. இத்தனை நாள் சந்தோஷமாக சிரிப்பது போல் இருந்தாலும் தன் மீதான வெறுப்பு இன்னும் இவரது அடிமனதில் நீறுபூத்த நெருப்பாகக் கனன்று கொண்டு தான் இருக்கிறதோ. சிந்தனையைச் சிதறவிட்டதில் தலை விண்ணென்று தெறித்தது. விரல்களால் நெற்றியைப் பற்றிக் கொண்டாள் தாமரை.

''என்னம்மா? தலை வலிக்கிறதா. காபி எடுத்திட்டு வரவா'' பரிவாய் கேட்ட விசாலாட்சியைப் பார்த்து அவசரமாய் மறுத்தாள்.

''வேண்டாம் அத்தை. லேசான தலைவலிதான். சரியாகிடும்'' என்றாள்.

விசாலாட்சி மகனை நோக்கி, ''சூர்யா! எவ்வளவு நேரம் நிற்பீங்க. உட்காருங்க ரெண்டு பேரும், முக்கிய மான பெரியவங்க வந்தா எழுந்துக்கலாம். பாவம் தாமரைக்கு தலைவலிக்குதாம்'' - என்றாள்.

''ஓ.கே'' - என்றவாறு சிம்மாசனம் போன்று அமைக்கப் பட்டிருந்த அந்தப் பட்டு இருக்கையில் அமர்ந்து கொண் டான். தாமரையை அவனருகில் அமரவைத்தாள் விசா லாட்சி. தாமரையின் இதயம் படபடத்தது. புதுமணத் தம்பதிகள் நெருக்கமாய் அமர்வதற்காகவோ என்னவோ அந்த இருக்கை அத்தனை விசாலமாய் இல்லை. ஒருவரையொருவர் உரசும்படியாக இருந்தது. ஆடை யின் மேலாகத்தான் என்றாலும் சூர்யாவின்- தோள் உரசிய இடம் தகித்தது. எப்படி விலகினாலும் அவனை



உரசித்தான் உட்கார முடிந்தது. அந்த அவஸ்தையைத் தொடர விடாமல் ஆர்ப்பாட்டமாய் வந்தாள் ஒரு அம் மாள்.

''ஹாய் சூர்யா. அமர்க்களமா இருக்கியே. நாங்கள் ளாம் பெண் தர்றதா சொன்னப்போ கல்யாணம் பண்ற ஐடியாவே இல்லன்னு எஸ்கேப் ஆகிட்ட. இப்ப எப்படி மாட்டினே'' - பொது இடம் என்றும் பாராமல் சூர்யாவைத் தொட்டு உரசி தட்டிப்பேசிய அந்தப் பெண்மணியை எரித்துவிடுவது போல் பார்த்தாள் தாமரை. எப்படியும் இந்தக் கிழவிக்கு வயது அம்பதுக்கும் மேலிருக்கும். உதட்டுச் சாயம் இவ்வளவு தேவையா? இந்தப் புடவையை அழகாய் கட்டி வரக்கூடாதா. இத்தனை மெலிதான புடவையை இப்படியா உடல் முழுவதும் தெரியும்படி ஒற்றை அடுக்கில் படரவிட வேண்டும். வயதுக்கு தகுந்தாற் போல் பேச்சும் பார்வையும் இல்லையே. தாமரையின் முகம் கடுப்படித்தது.

''என்னப்பா. நீ எப்பவும் கலகலன்னு இருப்பே. உன் பொண்டாட்டி முகம் என்ன கடுவன் பூனையாட்டம் இருக்கு. சிரிக்க காசு கேட்பா போலிருக்கே?'' - அலட் சியமாய்க் கேட்டவளை அவசரமாய் இடைமறித்தான் சூர்யா.

''சேச்சே! என்னோட தாமரை சிரிச்சு நீங்க பார்த்த தில்லேயே. புதுசா பூத்த பூவாட்டம் அத்தனை அழகா இருக்கும். இப்போ மாலை பூ புடவை எல்லாமே வெயிட். ஸோ கொஞ்சம் டல் ஆகிட்டா, ஆன்ட்டி. எங்க ஜோடிப் பொருத்தம் எப்படி இருக்குன்னு சொல்லுங்க'' - என்றவாறே தாமரையைத் தோளோடு அணைத்து தன்னுடன் நெருங்கி நிற்க வைத்தான். கூச்சமாய்

நெளிந்தவனை அழுத்தமாய் பற்றிக் கொண்டான். மற்றவர்கள் சந்தேகப்பட்டுவிடக்கூடாதாம்.

அந்தப் பெண்மணியோ முகம் சுண்டிப்போனவளாய், ''ம். பரவாயில்லை. இருந்தாலும் என் ஆரஞ்சு அழகுக்கு வராதுதான். என்னவோ நீதான் இங்கெல்லாம் பெண் கிடைக்காத மாதிரி மதுரையில் போய் கட்டிட்டு வந்திட்ட. சரி. போனது போகட்டும். காங்கிராட்ஸ்'' - என்றவாறு கிப்டை நீட்டினாள். சிரித்தவாறே போட்டோ எடுத்துக் கொண்டாள். நகர மனமின்றி நின்று கொண்டு தாமரையின் கோபத்தீயை எண்ணையை ஊற்றி எரிய வைத்து கொண்டிருந்தவளை பிரபு தான் வந்து சாப்பிட்டுப் போகும்படி வற்புறுத்தி அழைத்துக் கொண்டு போனான்.

பெரிய ஆசுவாசப் பெருமூச்சுடன் இருக்கையில் தொப்பென அமர்ந்தவனிடம், ''என்ன பொம்பளைடா இவ. எங்க என்ன பேசணும்னு தெரியாம இப்படி அநாகரிகமா பேசிட்டுப் போறா. யாருடா இவ?'' - என்றாள் விசாலாட்சி கொஞ்சம் கோபமாக.

''இது பெரிய தொல்லைம்மா. இவங்க வீட்டுக்காரர் நம்ம கம்பெனியில டீலிங் வச்சிருக்கார். இவங்க பொண்ணை எப்படியாவது எனக்கு முடிக்கணும்னு கேட்டாங்க. நான் அவாய்ட் பண்ணிட்டேன்ற வயித்தெரிச்சல்ல பேசிட்டுப் போறாங்க. மத்தபடி அத்தனை முக்கியமானவங்க இல்லம்மா. தேவையில்லாம டென்ஷன் ஆக வேண்டாம்'' - மனைவிக்கும் சேர்த்தே சொன்னான் சூர்யா.

''ஸார். நேரமாயிட்டே இருக்கு. ஆல்மோஸ்ட் எல்லோரும் வந்தாயிற்று. நீங்களும் மேடமும் சாப்பிடலாமே'' - என்றபடி வந்தான் பிரபு.



''யா பிரபு. ரொம்ப டயர்டா இருக்கு. இனிமே வர்றவங்கள கொஞ்சம் கவனிச்சு அனுப்பிடு. நாங்க ட்ரெஸ் சேஞ்ச் பண்ணிட்டு வந்திடுறோம்'' - என்றவாறு எழுந்தான் சூர்யா. தாமரையும் வேகமாய் எழ, ''மேம் ஒன்மினிட். ஸார் ரெண்டு பேரும் சேர்ந்து நில்லுங்க. ஃபுல் போஸ்ல ஒரு ஸ்நாப் எடுத்துடலாம். வீட்ல மாட்டினா நல்லா இருக்கும்'' - என வற்புறுத்தி நிற்க வைத்து போட்டோகிராபரை அழைத்து போட்டோ எடுக்க வைத்தான்.

ஒரு வழியாய் விருந்து முடிந்து கிளம்புகையில் வெகு நேரமாகி விட, அமைதியாகவே காரை ஓட்டினான் சூர்யா. அருகே அமர்ந்து அவன் முகத்தையே பார்த்துக் கொண்டு வந்தாள் தாமரை. ''என்ன?'' - என்றான் பார்வையை சாலையிலிருந்து விலக்காமலேயே.

சட்டென திடுக்கிட்டுப் பின் கொஞ்சம் தயக்கமாய், ''ஏங்க! இந்தப் புடவை உங்களுக்குப் பிடிக்கலியா? உங்களுக்கு விருப்பமில்லைன்னா இனிமே இதைக் கட்டமாட்டேன். ஆனா தயவுசெய்து இப்படி முகத்தை வெச்சுக்காதீங்க. ஏன்னா மாமாவும் அத்தையும் ரெண்டு நாள் நம்ம கூட தங்குற மாதிரி சொன்னாங்க. வயசுலயும் அனுபவத்திலும் பெரியவங்க. உங்க முகத்தை வெச்சே நாம வாழுற வாழ்க்கையை கணிச்சிடுவாங்க. கொஞ்சம் கலகலப்பா இருந்தா அவங்களுக்கு சந்தேகம் வராது. எனக்கு உங்க வேதனை புரியுது. இருந்தாலும்..'' என்றவளை இடைமறித்தான்.

''என்ன..? என்ன வேதனை எனக்கு'' - என்றான் கடுப்பாய்.

எச்சில் விழுங்கினாள் தாமரை. தொண்டை அடைக்கத்தான் செய்தது. என்றாலும் தனக்குத் தேவையான

பதில் தெரிந்தே ஆகவேண்டுமே. இல்லையென்றால் தலையைக் குடைந்து குடைந்து பைத்தியமாகிவிட் டாலும் ஆச்சர்யப் படுவதற்கில்லை. கொஞ்சம் துணிவைத் திரட்டிக் கொண்டு, ''இல்ல. இன்னிக்கு பங்ஷன்ல உங்க பக்கத்தில இருக்க வேண்டியவ அக்கா. இந்தப் புடவை கூட அவளுக்காக நீங்களே ரசிச்சு டிஸைன் பண்ணி எடுத்தது. அதை நான் கட்டிக் கொண்டது தப்புதான். அது உங்க மனசை எப்படி பாதிச்சிருக்கும்னு எனக்குப் புரியுது'' - என்றாள்.

தலையில் அடித்துக் கொண்டான் சூர்யா. ''உனக்கு ஏன் இந்த மாதிரி எண்ணமெல்லாம் வருது. இதோ பார் தாமரை. உன் அக்காவைப் பெண் பார்க்க வந்த அன்று தான் முதலும் கடைசியுமாகப் பார்த்தேன். நான் ஒன்றும் அவளைப் பல ஆண்டு காதலித்து ஏமாறவில்லை அவ ளையே நினைத்துக் கொண்டு இருப்பதற்கு. உண் மையைச் சொல்ல வேண்டும் என்றால் நான் முதலில் பார்த்து ஆசைப்பட்டது உன்னைத்தான்'' - என்று ஒரே போடாக போட திணறிவிட்டாள் தாமரை.

''என்ன? என்னையா.. இல்லையே.. நீங்கள் பெண் பார்க்க வந்த அன்று நான் வீட்டில் இல்லையே. அந்த நேரம் தன் தோழியை அழைத்துக் கொண்டு வா என என்னை அக்கா வெளியேற்றிவிட்டாளே. பிறகெப்படி என்னைப் பார்த்திருப்பீர்கள் நீங்கள்?'' - அதிர்ச்சி மாறா மலேயே கேட்டாள்.

''உன் அப்பா ஒரு வெகுளியாய் இருக்க வேண்டும். என் பாட்டி மூலம்தான் உங்கள் வரன் எங்களுக்கு வந்தது. பாட்டியிடம் உன் அப்பா பெண்ணின் போட்டோவை யும் கொடுத்துவிட்டிருந்தார். போட்டோவில் இருந்தது



உன் அக்கா மட்டுமல்ல நீயும்தான். ஏதோ கோவிலின் முன் எடுத்திருந்த போட்டோ அது. உங்கள் இருவரில் யார் மணப்பெண் எனத் தெரியாமலேயே என் மனம் விரும்பியது உன்னைத்தான். உன்னைத்தான் என் மனைவி என்றே முடிவுசெய்துவிட்டு பெண் பார்க்க வந்தால் வந்து நின்றது உன் அக்கா. என்ன செய்வது என நான் திணறும் முன் தட்டுமாற்றிவிட்டார்கள். பிரபு விளையாட்டாய் என் போன் நம்பரைக் கொடுக்க அதைக் கொண்டு உன் அக்கா என்னிடம் தொடர்பு கொள்ள என்னென்னவோ நடந்துவிட்டது'' - என்றான் பெருமூச்சுடன்.

''நான் தனியா இருக்கிற போட்டோ எத்தனையோ இருந்தும் என் அப்பா எதுக்காக அவர் மகளோட இருக்கிற போட்டோவை உங்களிடம் கொடுத்தணுப் பணும்? எப்படி இருந்தாலும் அவ என்னை விட கொஞ்சம் கலர் கூடுதல். எப்பவும் புதுப்பெண் போல் அலங்கரிச்சுத்தான் இருப்பா. அதுல அழகும் கூடுதலா தெரியும். பார்த்த உடனே அவளை யாருக்கும் பிடிச்சு போயிடும். அதனாலதான் அந்த போட்டோவை உங் களுக்கு தந்துவிட்டிருக்கார். பார்த்தீங்களா சூர்யா. இதிலேயே அவரைப்பத்தி உங்களுக்குத் தெரிஞ்சிருக் கணுமே. என்ன இருந்தாலும் நான் அனாதை தானே. சின்ன வயசிலேயே அம்மாவை இழந்துட்டேன். அப்பா வும் இன்னொரு பொண்ணை கட்டிட்டுப் போயிட்டாரு. நான் இவங்களுக்கு வேண்டாத சுமையா வாழ்ந்திட்டு இருக்கேன். அப்பாவும் முதல்ல ரொம்ப அன்பா எனக் காகத்தான் உங்களைப் பாத்தாரு. ஆனா உங்களை நேரில் பார்த்திட்டு வந்ததில் இருந்து உங்க புராணம்தான். உங்க அழகையும் திறமையையும் பழகுற தன்மையையும்

வாய் ஓயாமல் பேசிட்டே இருக்காரு. போற போக்கைப் பார்த்தா என்னை விட்டுட்டு அவரோட மகளை உங்களுக்கு பேசி முடிச்சிடுவாரோன்னு பயம்மா இருக்கு. சத்தமா பேசவே பயம்மா இருக்கு. அதான் மெல்ல பேசறேன். நீங்கதான் சூர்யா என்னை இந்த ஜெயில்ல இருந்து காப்பாற்ற வேண்டும்'' - என தினமும் போனில் கிசுகிசுப்பாள் சுசித்ரா. அவள் வார்த்தைகளை நம்பி தாமரை மீதும் மீனாட்சி சுந்தரத்தின் மீதும் வெறுப்பு தான் ஏற்பட்டதே தவிர இதில் உண்மை இருக்குமா என யோசிக்கவும் தோன்றவில்லைதான். இப்போதும் கூட எந்த ஒரு தெளிவும் இல்லாமல் மனம் குழம்பி தவித்துக் கொண்டுதானே இருக்கிறது. தாமரை நல்லவள் என்றால் சுசித்ரா ஏன் ஒவ்வொரு முறையும் தன்னிடம் குறை சொல்ல வேண்டும்? சுசித்ரா நல்லவள் என்றால் ஏன் மறைந்து போனாள்? அதுவும் பணம் நகையோடு. தன் கண்முன்னே இன்னொருவனுடன் குரலை தழைத்துக் கொண்டு பேசுகிற தாமரை நல்லவள்தானா? திருமண மாகி வந்தது முதல் தன்னிடம் கூட அதிகம் நெருங்கி வழியாமல் இருப்பவள் எப்படித் தவறானவளாக இருக்க முடியும்? பிரபுவிடம் ஏதோ பேசியிருக்கலாம். அதை மட்டும் வைத்து ஒரு பெண்ணை எப்படித் தவறாக நினைக்க முடியும். அது பெரிய பாவமல்லவா. ஆனால் சுசித்ரா ஏன் அப்படிச் சொன்னாள்? தன்னைச் சுற்றி ஏதோ ஆபத்து இருப்பதைப் போல் தானே பேசினாள். ஒரு வேளை நான்தான் குருடனாக இருக்கிறேனா. மீனாட்சி சுந்தரம் வெகுளி இல்லையோ. என்னை மடக்கத்தான் இரு பெண்களும் இணைந்திருந்த புகைப்படத்தை அனுப்பி வைத்தாரோ. இல்லையே பாட்டியும் அம்மா வும் சொல்வதை வைத்துப் பார்த்தால் மீனாட்சி சுந்தரம்



தன் மகளை விட அண்ணன் மகளைத் தான் தலையில் வைத்துக் கொண்டாடியிருக்கிறார். அப்படி இருந்தால் காரணமே இல்லாமல் ஏன் தன் தந்தையைப் பற்றி என்னிடம் அவள் குறை கூற வேண்டும்? இதில் எது உண்மை? நான் எப்படி உண்மை அறியப்போகிறேன்? என் வாழ்க்கை எப்படி அமையப்போகிறது. தாமரை நல்லவள் அவளுடன் மனம் ஒன்றி வாழப்போகிறோம் என்ற வேளையில் ஏன் என் மனம் அலைக்கழிக்கப் படுகிறது? ஏன் இத்தனை குழப்பம்? இந்தக் குழப்பம் தீர வேண்டுமெனில் முதலில் சுசித்ராவைக் கண்டுபிடிக்க வேண்டும். அவள் கடத்தப்பட்டாளா இல்லை விரும்பிய வனுடன் சென்றாளா எனத் தெரிந்தாலே போதும். ஓரளவு குழப்பம் தீர்ந்துவிடும். அவளை எங்கே போய் தேடு வது? எந்த உரிமையில் தேடுவது? இது சரியா தவறா? அவளைக் கண்டுபிடித்து ஒருவேளை கடத்தப்பட்டாள் என்று தெரிந்தால்... அதன் பிறகு என் வாழ்வு.. தாமரை யின் நிலை... ''ஐயோ'' - இரு கைகளாலும் தலையைப் பற்றிக் கொள்ள கார் கட்டுபாடின்றி தடுமாறியது.

தன் கணவன் தன்னைத்தான் விரும்பியிருக்கிறான் என்ற எண்ணமே நிம்மதியைத் தர சந்தோஷக்கடலில் மூழ்கிக் கொண்டிருந்த தாமரை கார் தடுமாறியதில் பதறி விழித்துக் கணவனை உலுக்க கீச்சென்று பிரேக்கை அழுத்தினான் சூர்யா. இருவரின் இதயமும் தாறுமாறாய் படபடக்கக் காரை ஓரமாய் நிறுத்தி இயல்பாய் மூச்சை இழுத்துவிட்டு தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டான் சூர்யா.

''இனிமே பேசாம காரை ஓட்டுங்க. காரை ஓட்டும் போது கவனத்தை சிதறவிடக்கூடாது. நான் இனிமே

எதுவும் கேட்கமாட்டேன் சரியா'' -என்றவாறு குழந்தையாய் வாயைப் பொத்திக் கொண்ட தாமரையைக் கண்டதும் மனம் நெகிழ்ந்தது. இவளா? இவளா இப் பாவவள். ம்ஹூம். நிச்சயமாய் இருக்க முடியாது. இந்தக் கண்களில் துளி வஞ்சமோ கள்ளத்தனமோ இல்லையே.

''என்னங்க காரை எடுக்காம என்னையே பார்த்திட்டு இருக்கீங்க'' - மெல்லக் கேட்டாள்.

''தாமரை! சுசித்ரா என்ன ஆனான்னே தெரியலியே. போலீஸ்ல கம்ப்ளெய்ண்ட் கொடுத்துப் பார்ப்போமா? அவ மட்டும் இருக்கிற மாதிரி போட்டோ எதுவும் இருக்குதா உங்ககிட்ட? என்னா உங்க அப்பா பாவம் எப்படி தவிக்கிறார்னு எனக்குப் புரியுது. என்னால முடிஞ்ச உதவியை நான் செய்யலாமே'' என்றான் தயக்கமாய்.

''உங்க நல்ல மனசு எனக்குப் புரியுதுங்க. ஆனா அக்கா மட்டும் தனியா இருக்கிற போட்டோ எதுவுமே இல்லியே. நாங்க ஸ்டூடியோ போய் படமே எடுத்ததில்லை. உங்ககிட்ட கொடுத்தனுப்பியது கூட ஒரு முறை மருதமலை கோவிலுக்கு போனப்போ எடுத்ததுதான். அங்க போட்டோ எடுத்தா அரைமணி நேரத்தில தந்துடுவோம்னு ஒரு போட்டோக்காரர் விடாம நச்சரிச்சிட்டே இருந்தார். சரின்னு ஒரே ஒரு போட்டோ மட்டும் எடுத்துக்க அப்பா பர்மிஷன் கொடுத்தாங்க. அந்த போட்டோ உங்ககிட்ட வந்ததே எனக்கு இப்ப நீங்க சொல்லித்தான் தெரியும். முதல்லயே தெரிஞ்சிருந்தா பாதியா கட் பண்ணி அக்கா மட்டும் இருக்கிறதைத் தந்திருப்பேன். ஸாரிங்க. வேற எந்த போட்டோவும் இல்லியே. வேணும்னா அந்த போட்டோ உங்ககிட்ட தானே இருக்கும். அதை கட் பண்ணி எடுத்திட்டுப் போய் போலீஸ்ல



கொடுக்கலாமா? எங்க போலீஸுக்கு போகாம அக்காவைத் தேட முடியாதா? என்னா ஒருவேளை அவ சந்தோஷமா வாழ்ந்திட்டு இருந்தா அதை நாம கெடுத்திடக்கூடாது இல்லையா. போலீசு கேசுன்னு போனா அது அவளுக்கும் அசிங்கம் தானே. அதான் கொஞ்சம் பயம்மா இருக்கு.''

சுருக்கென தைத்தது சூர்யாவிற்கு. அப்படியென்றால் தன் போட்டோ தனியாக இருக்கும் போட்டோ இருப்பதாக சுசித்ரா சொன்னது பொய். இந்தச் சிறிய விஷயத்திற்கே பொய் சொன்னவள் சொன்ன மற்ற விசயங்களில் எத்தனை உண்மை இருக்கும். சூர்யாவின் மனம் உலைக்களமானது.

''சரி, அதை அப்புறமா பார்த்துக்கலாம். உங்க அக்கா ஒருவேளை யாரையேனும் விரும்பியிருந்தால் உன் அப்பாவுக்குத் தெரியாமல் இருந்திருக்கலாம். பட் உனக்குத் தெரியாமல் இருக்க வாய்ப்பில்லையே. என்னா அந்த வீட்ல இருந்தது நீங்க ரெண்டு பெண்கள்தான். கிட்டத்தட்ட ஒத்த வயசு கூட. அப்படி இருக்கும்போது அவ மனசில எதுவும் இருந்தா உன்கிட்டதானே சொல்வா. அப்படி ஏதேனும் சொல்லியிருக்காளா?'' - என அடுத்த தூண்டிலை வீசினான்.

இதற்கு உடனே பதில் சொல்லவில்லை தாமரை. ஒரு கணம் தயங்கினாள். அந்தத் தயக்கம் சூர்யாவை சந்தேகிக்க வைத்தது. ''உனக்கு விருப்பம் இல்லையென்றால் விட்டுவிடு'' - என்றான் சாதாரணமாய்.

''ஐயோ! அப்படி இல்லீங்க. என்னைப் பற்றி என்றால் உடனே சொல்லிவிடுவேன். அக்காதான் என்றாலும் ஒருநபர் அருகில் இல்லாதபோது அவரைப்பற்றிப் பேசுவது

தவறு. அதுவும் அவரது குறைநிறைகளைப் பற்றிக் கூறுவது பெரிய தவறு. அப்பா அடிக்கடி சொல்லும் வார்த்தை இது. அதனால்தான் கொஞ்சம் யோசிக்கிறேன்.''

''நாம் ஒன்றும் அவளைப்பற்றி விமர்சனம் செய்யப் போவதில்லையே. எதுவும் தெரிந்தால் அவளைத் தேட வசதியாக இருக்குமே என்று பார்த்தேன். குறிப்பாக ஏதேனும் ஆண்களின் பெயரைச் சொல்லியிருக்கலாம். அல்லது யாராவது தன்னைப் பின்தொடருவதாக அல்லது தொந்தரவு செய்வதாக.. இப்படி ஏதாவது சொல்லியிருக்கலாமே என்றுதான் கேட்கிறேன்.''

''அப்படி எல்லாம் அக்கா எதுவுமே எங்களிடம் பேசமாட்டாள். வீட்டில் இருக்கும் போதெல்லாம் தன் அறைக்குள்தான் அடைந்துகிடப்பாள். எங்களுடன் அமர்ந்து கலகலப்பாகப் பேசமாட்டாள். எப்போதும் தன் தோழிகளுடன் சதா செல்போனில் கிசுகிசுத்துக் கொண்டே இருப்பாள். பெண் பிள்ளைக்கு போன் எதற்கு என்று அப்பா மறுத்து விட்டாரென்று பட்டினி கிடந்து சாதித்து போனை வாங்கிக் கொண்டாள். ஆனால் அந்த போன் வந்ததில் இருந்து எங்களுடன் பேசுவதை சுத்தமாய் நிறுத்திக் கொண்டாள். போனில் பேசுவதும் அவசரமாய் வெளியே போவதும்தான் அவள் வேலையாக இருந்தது. நான் படித்து முடித்து வேலையில் சேர்ந்ததும் அப்பா அவளுக்கு வரன் தேட ஆரம்பித்தார். முதலில் தாம்தூம் என்று குதித்தாள். யாரைக்கேட்டு மாப்பிள்ளை பார்த்தீர்கள் என்று அப்பாவிடம் சண்டைக்கு நின்றாள். பிறகு என்ன நினைத்தாளோ சம்மதம் என்றாள். உங்கள் போட்டோவைப் பார்த்த பிறகு ஒத்துக் கொண்டாள் என்று



அப்பாவிற்கு ஒரே ஆனந்தம். அதன் பிறகும் போனில் பேசிக் கொண்டே இருப்பாள். அப்பா ஒரு முறை அதட்டிக் கேட்ட பிறகு, ''மாப்பிள்ளைதான் போன் செய்தார். அதான் பேசிக் கொண்டிருக்கிறேன்'' - என்றாள். அப்பா அதன் பிறகு அவளிடம் எதுவும் கேட்பதில்லை. மாப்பிள்ளை தானே பேசுகிறார் என விட்டுவிட்டார். திருமணத்திற்கு ஒரு வாரம் முன்பு தொடர்ந்து போன் வந்து கொண்டே இருந்தது. என்னை எடுத்துப் பேசச் சொன்னாள். நான் எடுத்ததும் போன் கட்டாகி விடும். யாரென்று கேட்ட போது ''உன் அத்தான்தான். மேரேஜ்க்கு நான் மெரூன்கலர் பட்டு ஸாரி எடுக்கச் சொன்னேன். அவர் யெல்லோ கலர் எடுத்திட்டாராம். அதனால எங்களுக்குள்ளச் சின்னச் சண்டை..! இனிமே போன் வந்தா நீயே பேசு. மேரேஜ் வரைக்கும் அவர்கிட்ட பேசமாட்டேனுட்டா. அதனாலதான் நீங்க பண்ணும்போதெல்லாம் நானே எடுத்தேன். என் குரல் கேட்டதும் நீங்க கட் பண்ணிடுவீங்க. எனக்கு சங்கடமா இருந்தது. ஒரு ரெண்டுநாள் பார்த்திட்டு அவகிட்டயேக் கொடுத்திட்டேன். அதுக்கப்புறம் அதைப்பத்தி யோசிக்கவே இல்லை. அவளும் கலகலப்பா இருந்தா. சரி உங்களுக்குள்ள ஊடல் சரியாகிடுச்சுன்னு நினைச்சேன். ஆனா கடைசி நேரம் எப்படிப் போனா ஏன் போனான்னு சத்தியமா எனக்குத் தெரியலிங்க. அப்பா சொல்ற வரைக்கும் அவ ரூம்லதான் ரெடியாயிட்டு இருக்கான்னே நினைச்சேன். வேற எதுவும் எனக்குத் தெரியாதுங்க'' - என்றவளை நம்பிக்கையாய் பார்த்தான். ஒரு முறை கூட சுசித்ராவிற்கு போன் பண்ணவில்லை என்று அவனுக்கே தெரியாதா?

# 14

வாசலிலேயே காத்து நின்ற விசாலாட்சி கார் உள்ளே நுழைந்ததும் தான் நிம்மதி மூச்சுவிட்டாள். காரிலிருந்து இறங்கிய சூர்யாவைப் பார்த்து, ''ஏன்டா இவ்ளோ நேரமாச்சு. நாங்க என்னவோ ஏதோன்னு பயந்து போயிட்டோம். எங்கே போனே நீ'' - என்றாள்.

''இல்லம்மா சும்மா பேசிகிட்டே மெதுவா வந்ததுல கொஞ்சம் லேட்டாச்சு. நீங்க இன்னும் தூங்கலியா. சொன்னா கேட்கமாட்டீங்களே'' - என்றவாறு வீட்டிற்குள் நுழைந்தவனைத் தடுத்து நிறுத்தினாள்.

''மருமகளோட சேர்ந்து நில்லுடா. ஆலம் கரைச்சி வெச்சிருக்கிறேன். சுத்தினப்புறம் உள்ளே போலாம்'' - என்றவாறு வெள்ளித்தட்டில் கரைத்து வைத்திருந்த ஆரத்தியை சுற்றி நெற்றியில் துளி திலகமிட்டு உள்ளே அனுப்பினாள். தாயம்மா தட்டை வாங்கிக் கொள்ள உடன் வந்த அம்மாவை ஏறிட்டான். ''அப்பா மாமால்லாம் தூங்கியாச்சாம்மா'' - கேட்டவாறே படிகளில் ஏறினான்.

''அம்மாடி தாமரை. மணி பதினொன்னு தாண்டியாச்சு. ரொம்ப அலுப்பா இருக்கும். கொஞ்சம் படுத்து தூங்கி எழுந்திருங்க. விடிகாலையில் நாமெல்லாம் கிளம்பணும்'' - என்றாள் மருமகளிடம்.

''எங்கே அத்தை, ஏதேனும் கோவிலுக்கா?'' - ஆச்சர்யமாய் கேட்டாள்.

''அதைக் காலையில் சொல்றேன். முதல்ல போய் ரெஸ்ட் எடுங்க. நானும் கொஞ்சம் படுத்து எழுந்துக்



கிறேன்'' - என்றவாறு கீழே இருந்த அறைக்குள் நுழைந்து கொண்டாள் விசாலாட்சி.

''என்ன சஸ்பென்ஸ் வேண்டிகிடக்கு. அம்மா. நான் ரொம்ப டயர்டா இருக்கேன். மார்னிங் பத்துமணிக்கு முன்னால என்னால எழுந்துக்க முடியாது. ஸோ. எந்த ப்ரோகிராம் இருந்தாலும் கேன்ஸல் பண்ணிடுங்க.''

தாயிடம் இருந்து பதில் வராமல் போகவே, ''தாமரை நீ ட்ரெஸ் சேஞ்ச் பண்ணிட்டு படுத்துக்கோ. நான் அம்மாகிட்ட கேட்டுட்டு வர்றேன்'' - என்றவாறு இறங்கி தாயின் அறைக்குள் நுழைந்தான்.

''கதவை சாத்திட்டு வாடா'' - என்றாள் விசாலாட்சி.

''என்னம்மா ஏன் உங்க முகம் ஒரு மாதிரி இருக்கு. எதுவும் பிரச்சனையா? அப்பா எங்கே காணோம்?'' - கண்களைச் சுழற்றி தேடினான்.

''தாமரை மாடிக்கு போயிட்டாளா?'' - என்ற விசாலாட்சியை குழப்பமாய் பார்த்தான். ''அவ போயிட்டா. நீங்க விஷயத்தைச் சொல்லுங்க.''

''டேய் சூர்யா தாமரையோட பெரியப்பா அதான் அந்த சுசித்ராவோட அப்பா இறந்துட்டாராம். அவர் பையன் வந்து சொன்னான்.

''என்ன?'' - அதிர்ச்சியாய் தாயினருகே தொப்பென அமர்ந்தான் சூர்யா.

''என்னம்மா சொல்றீங்க. எப்போ. எப்படி?''

''சாயங்காலமே உயிர் போயிடுச்சாம். இங்க அரியலூர் பக்கம் ஏதோ கிராமம் தானாம். காலையில் கூட சம்பந்தி பார்த்திட்டுத் தான் வந்தாராம். ஏற்கனவே சுகர் பேஷண்ட் இல்லயா? ஒரு காலையும் எடுத்திட்டாங்

களாம். இதுல அந்தப் பொண்ணு ஓடிப்போனதில இருந்து மருந்து மாத்திரை சாப்பாடுன்னு எதுவுமே சாப்பிடாம கிட்டத்தட்ட தற்கொலை பண்ணிகிட்ட மாதிரி செத்துட்டாராம்ப்பா. நம்ம போன் நம்பர் எதுவும் தெரியாம அவரோட பையன் அட்ரஸை விசாரிச்சுகிட்டு இங்க வந்திருக்கான். நாமெல்லாம் ரிஸப்ஷன்ல இருந்தோமே. வந்தப்புறம்தான் தெரிஞ்சது. அதான் அப்பாவும் சம்பந்தியும் அந்தப் பையனை கூட்டிட்டு உடனே கார்ல கிளம்பிட்டாங்க. நாம காலையில கிளம்பி வந்தா போதும்னு சொல்லிட்டுப் போறாங்க.''

பெருமூச்சுடன் தலையைக் கோதிக் கொண்டான்.

''எப்படிம்மா. டெத் விஷயம் தெரிஞ்சும் எப்படி வீட்டில இருக்க முடியும்? நான் போயி தாமரையை கிளம்பச் சொல்றேன். போலாம்'' -என்றவாறு எழுந்தவனை தோள்பற்றி அமர வைத்தாள் விசாலாட்சி. ''அவசரப்படாதப்பா. பாவம் அவ சின்னப் பொண்ணு. ஏற்கனவே ரொம்ப டயர்டா இருக்கா. தலைவலியா இருக்குன்னா. இப்பப் போயி சொன்னா உடனே அழ ஆரம்பிச்சுடுவா. தூங்கவும் மாட்டா. உடனே கிளம்பினாலும் நேரம் கடந்துபோச்சுப்பா. இப்படி அர்த்த ராத்திரியில கிளம்பக் கூடாது. அது நல்லதில்லை. நீ போய் ஏதாவது சொல்லி அவளைத் தூங்கவை. காலையில் அஞ்சு மணிக்கெல்லாம் கிளம்புவோம். சரியா? அவ உன்னைத் தேடி வரப்போறா. நீ போ மேல'' - மகனை எழுப்பி அனுப்பினாள்.

கால்கள் தடுமாற மாடியேறினான் சூர்யா. டையைக் கழற்றி கோட்டையும் கழற்றி தோளில் போட்டுக் கொண்டே ஏறுகையில் ''ஐயா! பால்'' - என்றவாறே பின்னால் வந்தாள் தாயம்மா. தட்டில் இரண்டு கண்ணாடி



டம்ளரில் பால். ஒன்றை மட்டும் எடுத்துக் கொண்டு, ''எனக்கு வேண்டாம் தாயம்மா. இதை தாமரைக்கு கொண்டு போறேன். நீ போய் படுத்துக்கோ'' - என்றவாறு தாமரையின் அறைக்குள் நுழைந்தான். அறை காலியாய் இருந்தது. தண்ணீர் சத்தம் கேட்க பாத்ரூமில் இருக்கிறாள் என்று புரிந்தது. கோட்டை ஹேங்கரில் மாட்டிவிட்டு பால் டம்ளருடன் கட்டிலில் அமர்ந்தான். இரண்டு நிமிடங்களில் சோப் மணம் கமழ பனியில் பூத்த ரோஜாவாய் இரவு ஆடையுடன் வெளியே வந்தவள் தன் கணவனைக் கண்டதும் அவசரமாய் முகத்தை ஒற்றிக் கொண்டே வந்தாள். ''என்னங்க, எதுவும் வேணுமா?'' - பதட்டமாய் கேட்டவளிடம் பாலை நீட்டினான். ''நீங்க ஏன் கொண்டு வந்தீங்க?'' - என தயக்கமாய் வாங்கிக் கொண்டவளை கை பற்றி தன்னருகே அமர வைத்துக் கொண்டான். ''முதல்ல பால் சாப்பிடு'' - என்றதும் மறுக்காமல் சாப்பிட்டாள். அவளிடம் இருந்து டம்ளரை வாங்கி டேபிள் மீது வைத்துவிட்டு, ''படுத்துக்கோ தாமரை. நல்லாத் தூங்கு'' - என்றான்.

ஆச்சர்யமாய் விழிகளை விரித்தாள். ''நீங்க.. நீங்க படுக்கப் போகவில்லையா?''

''இல்ல. நான் அப்புறம் படுத்துக்கிறேன். நீ படுத்துக்கோ'' என்றவாறு அவளைப் படுக்க வைத்து அருகில் அமர்ந்து தலையைக் கோதிவிட்டான். வியப்பு மாறாமல் நோக்கியவளை, ''தூங்கும்மா. குட்நைட்'' - என்றவாறே அவளை விட்டு நகராமல் அமர்ந்து கொள்ள தாமரைக்கு லேசாய் புரிந்தது. வீட்டில் பெரியவர்கள் இருப்பதால் தன் அறைக்குப் போகாமல் இருக்கிறார். தனித் தனி அறையில் தூங்குவது தெரிந்தால் பெற்றவர்கள் மனம்

தாங்குமா என்ன? மனம் லேசாய் ஏமாற்றம் அடைந்தாலும் அந்த அண்மையை மனம் விரும்பி ஏற்றுக் கொண்டது. அவனது நெருக்கமும் பரிவும் அலுப்பை மீறிய புத்துணர்வைத் தர மனம் குளிர்ந்தது. அவனது தலை கோதலில் விழிகள் செருகியது. கட்டிலில் சாய்ந்தமர்ந்து தலைகோதியவனின் மடிமேல் கைகளைப் போட்டவாறு அவன் மீது வீசிய இதமான சென்ட் நறுமணத்தோடு அவன் நேசமும் சுவாசமும் நாசியை வருட இதமாய் தூங்கிப் போனாள். தாமரை நன்றாகத் தூங்கி விட்டாள் என தெரிந்த பிறகும் விலக மனமின்றி அப்படியே அமர்ந்து இருந்தான் சூர்யா. இதமான ஏசி குளிரில் கணவனின் நெருக்கத்தில் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தாள் தாமரை. மனைவியின் முகத்தைக் கூர்ந்து நோக்கினான். கள்ளமில்லாத குழந்தை முகம். உடலை சுருக்கி அவள் படுத்திருந்த விதம் கூட ஒரு குழந்தையின் உறக்கத்தையே நினைவுபடுத்தியது. 'தூங்கும்போது கூட மென்சிரிப்புடன் கூடிய பூமுகம். தான் மிகவும் விரும்பிய பூ முகம். தன் அருகிலேயே இருந்தும் உறவாட முடியாத குழப்ப முடிச்சுகள். எல்லாம் சுசித்ரா ஏற்படுத்திய குழப்பங்கள். அது தீருமோ தீராதோ. எது எப்படி இருந்தாலும் நீ என் மனைவி தாமரை. என்னில் சரி பாதி. எனக்கென பிறந்து என்னைச் சேர்ந்த இணை நீ. இனி எந்த சூழ்நிலையிலும் உன்னை யாருக்காகவும் யாரிடமும் விட்டுக் கொடுக்க மாட்டேன். விட்டு விலகவும் மாட்டேன். என்றும் இப்படியே இதோ போல் என் அணைப்பில் என் நிழலில் உன்னைப் பாதுகாத்துக் கொள்வேன். தூங்கு. நாளை உன் பெரியப்பாவின் காரியங்கள் முடிந்து நீ துக்கம் தெளிந்த பின் என் மனதில் நீ குடிகொண்டிருப்பதைக் கூறுகிறேன். நீ நல்லவள்



தாமரை. என் உள்மனம் கூறுகிறது. உன்னை நான் சந்தேகித்திருக்கக் கூடாது. தவறுதான். நான் செய்தது தவறுதான். உன்னிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். உன் கைகளைப் பற்றிக்கொண்டு மதுரை நகரைச் சுற்றி வர வேண்டும். நீ மிகவும் விரும்புகிற பொற்றாமரைக் குளத்தில் உன்னுடன் அமர்ந்து நானும் ரசிக்க வேண்டும். வைகை நதியோரம் நாம் காலார நடந்து கவிதை பேச வேண்டும். உன் விருப்பம் போல் வாழ வைக்க வேண்டும். உன்னை எனக்குத் தந்ததற்காக உன் தந்தையின் காலில் விழுந்து நன்றி தெரிவிக்க வேண்டும்.' விடிய விடிய இமைகளை மூடாமல் கண்களை விழித்தே இருந்தான் சூர்யா. அதிகாலை ஐந்து முறை கூவிய குருவியின் குரல் கேட்டு கண்விழித்த தாமரை முதலில் பார்த்தது தன் கணவனின் முகத்தைத்தான். இரவு படுக்கையில் எப்படி அமர்ந்து இருந்தானோ அந்த நிலையிலிருந்து சற்றும் மாறாமல் அப்படியே அமர்ந்திருந்தான். தூக்கம் முற்றிலும் கலைந்து போக விருட்டென எழுந்தாள். ''என்னங்க.. நீங்க.. நீங்க தூங்கவே இல்லையா? ஏன். ஏன்? ரொம்ப டயர்டா இருக்குன்னீங்களே. ஏன் படுக்கல? என்னாச்சுங்க'' - பதட்டமாய் கேட்டாள்.

''ஒன்னுமில்லடா. இதோ இப்பத்தான் எழுந்தேன். மணி அஞ்சாச்சே. உன்னை எழுப்பலாம்னு பார்த்தேன். நீயே எழுந்திட்ட. கமான். கமான். சிம்பிளா கிளம்பு. நானும் ரெடியாயிடுறேன்'' - என்றவாறு எழுந்து தன் அறைக்குக் கிளம்பினான். குளித்து ரெடியாகி காருக்கு வரும்வரை எத்தனையோ முறை கேட்டும் தாயும் மகனும் மழுப்பியதில் தாமரைக்கு மூச்சு முட்டியது. அப்பாவும் மாமாவும் போய்விட்டார்கள் என்ற செய்தியையும் நம்பமுடியவில்லை. குழப்ப முகத்தோடு காரில்

ஏறியவளைப் பார்க்கையில் விசாலாட்சியால் தாங்க முடியவில்லை. மகளிடம் லேசாய் கிசுகிசுத்தாள்.

''ஏங்க எந்த இடத்திற்கு போகிறோம்னு சொல்ல மாட்டேங்கிறீங்க. அட்லீஸ்ட் எந்த ஊருக்கு போறோம்னாவது சொல்லுங்களேன். எனக்கு என்னவோ மனசெல்லாம் கலங்குதே. ஒரு மாதிரி உடம்பெல்லாம் பதறுதே. ப்ளீஸ். அத்தை நீங்களாவது சொல்லுங்களேன்'' - பரிதாபமாய் கேட்டவளை ஆறுதலாய் அணைத்துக் கொண்டாள் விசாலாட்சி.

''நாம.. நாம அரியலூர் போறோம்மா. உன் பெரியப்பாவை பார்த்துவிட்டு வரலாம்னு'' - தாமரைக்கு புரிந்துவிட்டது. ''பெரியப்பா... பெரியப்பாவிற்கு என்ன. ஐயோ ஏன் எங்கிட்ட மறைக்கிறீங்க. சொல்லுங்க சொல்லுங்க'' - கணவனின் சட்டையைப் பற்றி உலுக்கியவளை மார்போடு அணைத்துக் கொண்டான் சூர்யா. ''ரிலாக்ஸ் தாமரை. நேற்று நைட் தான் தெரிந்தது. சொன்னால் தாங்க மாட்டாய் என்றுதான் சொல்லவில்லை. இதோ போயிடலாம். ப்ளீஸ் அழாதேம்மா'' - என்றவாறு காரை எடுத்தான். வாயை மூடியவாறு அழுதுகொண்டே வந்தவளை எப்படி சமாதானம் செய்வதென்று புரியாமல் அவ்வப்போது கரம் பற்றி ஆறுதலாய் வருடிவிட்டு காரை விரட்டினான். இடையே பிரபுவிறகு போன் செய்து விஷயத்தை சொல்லிவிட்டு தான் வர இரண்டொரு நாள் ஆகும் என்றும் ஆபீஸ் பொறுப்பை பார்த்துக் கொள்ளும்படி கூறிவிட்டு அணைத்தான். இடையில் நிறுத்தி காபி வாங்கி கொடுக்க தாமரை பச்சைத் தண்ணீர் கூட வேண்டாம் என அழுதுகொண்டே வந்தாள். விசாலாட்சி அறிவுரை ஆறுதல் என கூறிக்கொண்டே



வர கார் அரியலூரை நெருங்கியது. தாமரையின் விம்மல் மேலும் அதிகரித்தது.

சூர்யா எந்திரத்தனமாய் நின்று கொண்டிருந்தான். 'என்ன வாழ்க்கை. எத்தனை ராஜபோகமாய் வாழ்ந்து என்ன? கடைசியில் இதோ இதேபோல் பிடிசாம்பலில் எல்லாம் முடிந்துவிடுகிறது. அதற்குள் எத்தனைஆட்டம் ஆர்ப்பாட்டம், சண்டை, சச்சரவு, பிரிவினைகள், பேதங்கள். மரணம் நிச்சயமானது என்று தெரிந்தும் ஏன் யாரும் நியாயங்களுக்கு கட்டுப்பட்டு நடப்பதில்லை. அடுத்தவரை ஏன் வதைக்கிறார்கள். அடுத்தவரைத் துன்புறுத்துவதால் என்ன நன்மை கிடைக்கப்போகிறது. இதோ இந்த அழகுசுந்தரம் சாகும் அளவிற்கு தள்ளாத வயதொன்றும் இல்லையே. இன்னும் திருமணமாகாத மகனும் மகளும் இருக்க தன்னை ஒரு பொருட்டாக எண்ணாமல் சென்ற சுசித்ராவிற்காகத் தன்னை வருத்திக் கொண்டு ஏன் மரணத்தை ஏற்றுக்கொண்டார்? இவரை வதைக்க அந்தப் பெண்ணிற்கு எப்படி மனம் வந்தது? நோயால் படுக்கையில் கிடந்தாலும் பூவோடும் பொட்டோடும் வாழ்ந்த இவரது மனைவி இனி அப்படி வாழ முடியுமா. சிறிய தாய் என்றாலும் தாய்தானே. ஒரு தாயின் தாலியைப் பறிக்கும் அளவிற்கு கல்நெஞ்சக்காரியா அவள். அவளைப் போய் மணமுடிக்க இருந்தேனே.' காரியங்கள் மளமளவென நடந்து கொண்டிருக்க பெரியப்பாவின் காலடியில் அமர்ந்து அழுது கொண்டிருந்தாள் தாமரை. வாயிலும் வயிற்றிலுமாய் அடித்துக் கொண்டிருந்த மரகதம், ''பாவி சண்டாளி. போனவ என் புருஷனை அடியோட வேரறுத்துட்டுப் போயிட்டாளே. நான் பூவும் பொட்டும் இழந்து பட்டமரமா நிற்கிறேனே. எத்தனை பேர் குடியைக் கெடுத்திட்டு அவ மட்டும் சந்தோஷமா

வாழ்ந்திடுவாளா? நாசமா போயிடுவா. எம் புருசன் சோறு தண்ணி பல்லுல படாம நொந்து கண்ணை மூடினாரே. அந்தப் பாவம் அவளைச் சும்மா விடுமா'' - என புலம்ப, ''வேண்டாம் பெரியம்மா. அக்காவை அப்படிப் பேசாதீங்க'' - என தாமரை அரற்றினாள்.

''அடி எந்தங்கமே! உன்னை மாதிரி புள்ளை பொறந்திருக்கக் கூடாதா இவருக்கு. அந்தக் குடிகேடி பொறந்து உன் பெரியப்பாவை உயிரோடு கொன்னுட்டுப் போயிட்டாளே'' - தாமரையைக் கட்டிக் கொண்டு அழுதாள்.

அதற்கு மேல் அங்கு நிற்க முடியாமல் நகர்ந்தான் சூர்யா. சற்று நேரத்திற்கெல்லாம் அழகு சுந்தரம் திரும்பவே முடியாத பயணத்திற்குப் புறப்பட்டார். மௌனமாய் அவர் பின்னே சென்றான். நெருப்பிற்கு தாரை வார்த்துவிட்டு ஆற்றில் நீராடிவிட்டுத் திரும்பினான். இரவாகிவிடவே மீனாட்சி சுந்தரம் அருகில் வந்தார். ''மாப்பிள்ளே! நாளைக்கு மூனாம் நாள் காரியம் இருக்கு. உங்களால இருக்க முடியுமா?'' தயக்கமாய் கேட்டவரை, ''என்ன மாமா இது. அது என் கடமை. நிச்சயமா இருக்கேன். அதோட தாமரையும் இங்க இருந்தா பெரிய அத்தைக்கு கொஞ்சம் தெம்பா இருக்கும். நாங்க இருந்திட்டு காரியம் முடிஞ்சே போறோம்'' - என்றான் மென்மையாய்.

''பாதகத்தி. இந்தத் தங்கமான புள்ளையை ஏமாத்திட்டு போயிட்டாளே. போனதும் நல்லதுதான். இல்லே அந்த ராட்சஸியைக் கட்டிட்டு இந்தப் புள்ளை திண்டாடிப் போயிருக்கும். தாமரையோடத் தங்கமான குணத்துக்குத் தான் ஆண்டவன் இந்தப் புள்ளையை தாமரையோட சேர்த்திருக்கான்'' - என்றார் யாரோ ஒரு பெண்மணி.



அந்த சூழ்நிலையிலும் இருவரின் கண்களும் ஒன்றோடொன்று கோர்த்துக் கொண்டன. பிரிய மறுத்தன. காவியம் பாடின. இமைக்க மறந்தன.

மறுநாள். மகனிடம் வந்தார் ராஜசேகரன். ''சூர்யா, நீ இருந்து காரியமெல்லாம் முடிஞ்சப்புறம் கிளம்பு. எனக்கு பதினோரு மணிக்கு ப்ளைட். நாங்க வீட்டுக்கு போயி லக்கேஜை எடுத்திட்டுக் கிளம்புறோம். அடிக்கடி போன் பண்ணு. தாமரையைப் பார்த்துக்கோ. நான் மத்தவங்க கிட்ட சொல்லிட்டு வர்றேன். இப்போ கிளம்பினாத்தான் சரியா இருக்கும்.''

''எம்ப்பா! உடனே போகணுமா? நாலஞ்சு நாள் தங்கணும்னு சொல்லிட்டு இருந்தீங்களே. என்ன அவசரம். ரெண்டு நாளாவது இருந்துட்டுப் போலாம்ப்பா'' - என்றான் சூர்யா.

''இல்லடா! நானும் அந்த ஐடியாவிலதான் வந்தேன். ஃபாரின் எக்யூப்மெண்ட்ஸ் பத்திப் பேசினோமில்ல. அந்த விஷயமா ஒரு மீட்டிங் இருக்கு. நான் அங்க இருந்தே ஆகணும். புரிஞ்சுக்கடா. வேணும்னா அம்மா ஒரு பத்து நாள் இருந்துட்டு வரட்டுமே'' என்றார்.

''அதானே பார்த்தேன். என்னை விட்டுட்டுப் போனாத்தானே கண்ட கண்ட சாப்பாட்டைச் சாப்பிட்டு பிரண்டுகளோடு தண்ணி அடிக்கலாம். நான் விடமாட்டேன். போறதா இருந்தாச் சேர்ந்தே போகலாம். தனியே அனுப்ப மாட்டேன்'' - மெல்லிய குரலில் கண்டிப்பாய் கூறிவிட்டாள், விசாலாட்சி.

''விடமாட்டாளே! என்னை ஒரு நாளாவது சுதந்திரமா இருக்க விடமாட்டாளே! சரிடா நாங்க கிளம்புறோம். நீ

பார்த்துப் பொறுமையா வா'' என்றவாறு புறப்பட்டார். விசாலாட்சி மருமகளை தனியே அழைத்துப் போனாள்.

''பாரும்மா தாமரை. துக்க வீட்ல வந்து இதையெல்லாம் சொல்லக் கூடாதுதான். இதையெல்லாம் வீட்ல வெச்சுச் சொல்லியிருக்கணும். நேரம் இல்லை. தப்பா எடுத்துக்காதேம்மா. நாள் எதுவும் தள்ளிப்போனாலோ தலை சுத்தல் வாந்தி எதுவும் இருந்தாலோ உடனே எனக்கு போன் போடு. நான் கிளம்பி வந்திடுறேன். அந்த மாதிரி நேரம் ரொம்ப இனிப்பான பழங்கள் இந்த பலாப்பழம், பைனாப்பிள், பப்பாளி இப்படி எதுவும் சாப்பிடாதே. என்ன? பார்த்துக்கோம்மா. அத்தை கிளம்பட்டுமா?'' - அடுத்தவர் செவியில் விழாத வண்ணம் தாமரையிடம் கிசுகிசுத்தாலும் தாமரையின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த சூர்யா தாமரையின் முகச்சிவப்பைப் பார்த்தே அம்மா என்ன சொல்லியிருப்பாள் என்பது புரிந்து போக கொஞ்சம் தடுமாறிப் போனான்.

## 15

கார் சீரான வேகத்தில் போய்க் கொண்டிருக்க தாமரை சாலையை வெறித்துக் கொண்டே வந்தாள். சற்று நேரம் பொறுமையாக வந்த சூர்யா தாமரையின் அமைதியை கலைக்க எண்ணி, ''தாமரை! இன்னும் பெரியப்பாவையே நினைச்சிட்டு இருக்கியா?'' - என்றான்.

''ம்? இல்லங்க. பெரியப்பா ரொம்ப நல்லவங்க. அமைதியானவர். அதிர்ந்து பேசி நாங்க யாருமே பார்த்ததில்லை. காலை ஆபரேஷன் பண்ணி எடுத்தப்போத் துடிச்சுப்



போயிட்டார். என்னைக் கொன்னுடுங்கன்னு கத்திட்டே இருப்பார். பெரியம்மாவும் நல்லவங்கதான். பொறுப்பா கவனிச்சுகிட்டாங்க. அதற்கப்புறம் பெரியப்பா தெம்பாத்தான் இருந்தாங்க. இத்தனை வயசுக்கப்புறம் ஏன் இப்படி உயிரை மாய்ச்சுகிட்டாங்க? சுசித்ரா செய்தது அவள் தப்பு. அதற்கான தண்டனையை பெரியப்பா ஏன் ஏற்றுக் கொண்டார்? அவர் என்ன பாவம் பண்ணினார்?'' - கண்ணீர் பொங்கி வர பேச்சை நிறுத்தி மீண்டும் தொடர்ந்தாள்.

''பொண்ணுங்க தன் மனசுக்குப் பிடிச்சவன விரும்புறது தப்பில்லை. ஆனா ஏன் இப்படி மத்தவங்களை அவமானத்திற்கு ஆளாக்கி பெற்றவர்களை பலியாக்கும்படி ஓடிப்போகிறார்கள்? அது எத்தனை பெரிய தவறு. இவர்கள் ஏன் பெற்றவர்களின் விருப்பத்தைப் பெற முயற்சிக்கவில்லை. அக்கா சொல்லியிருந்தால் நிச்சயமாய் அப்பா மறுத்திருக்க மாட்டார். பிறகேன் மறைத்தாள்? அத்தனை கல்நெஞ்சக்காரியா அவள்? சொல்லப் போனால் அப்பா என்னைவிட அவள் மீதுதான் அதிகப் பாசம் வைத்திருந்தார் தெரியுமா? அதற்கு அவள் என்ன கைமாறு செய்தாள்? திருமண மண்டபத்தில் என் அப்பா நெஞ்சைப் பிடித்துக் கொண்டு துடித்ததை இன்னும் என்னால் மறக்கமுடியவில்லையே'' - சொல்லும்போதே தாமரையின் உடல் அதிர்ந்தது. பரிவாய் தோளில் தட்டினான் சூர்யா.

''போனது போகட்டும். இப்ப ஏம்மா அதைப்பத்தியெல்லாம் நினைக்கிற?''

''இல்லங்க. அந்த சமயம் நானும் இந்தக் கல்யாணத்திற்கு மறுத்திருந்தால் எங்க அப்பாவும் என்னை

விட்டுட்டு ஐயோ! நினைக்கவே நடுங்குகிறதே. அதனால தாங்க நான் உங்களை மணக்கச் சம்மதித்தேன். அந்த நேரம் என் அப்பாவோட உயிரும் மானமும் தான் என் கண்ல தெரிஞ்சதே தவிர உங்களைப் பற்றி உங்கள் விருப்பம் பற்றி நான் யோசிக்கவே இல்லை. மத்தபடி நீங்க நினைக்கிற அளவுக்கு நானும் அப்பாவும் மோசமானவங்க இல்லங்க'' - மீண்டும் கண்கள் நிறைந்தது.

''ஷ்! தாமரை நான் அதையெல்லாம் மறந்துவிட்டேன். உன்னிடம் மன்னிப்பும் கேட்டேனே. வேண்டுமானால் மீண்டும் கேட்கிறேன். என்னை மன்னித்துவிடு தாமரை. நான் அப்படிப் பேசியிருக்கக் கூடாது. அதற்கு காரணம் சுசித்ரா தான். உன்னைப் பற்றியும் உன் அப்பாவைப் பற்றியும் வேறு விதமாகச் சொல்லி வைத்திருந்தாள். நம்பியது என் தவறு தான். அந்த நம்பிக்கையில் கொஞ்சம் ஓவராகப் பேசிவிட்டேன். ஆனால் நாம் சென்னை வந்த முதல் தினமே உன்னைப் பற்றியும் உன் அப்பாவைப் பற்றியும் புரிந்து கொணடேன். அதனால் தான் மன்னிப்பும் கேட்டேன்.''

ஆச்சர்யமாய் விழிகளை விரித்தாள். ''எப்படி? எப்படித் தெரிந்தது?'' அவஸ்தையாய் நெளிந்தான் சூர்யா. ''எனக்கு எப்பவுமே ஒரு பழக்கம் உண்டு. டைனிங்டேபிள் மாடி பாத்ரூம்னு எங்கே போனாலும் கையோட செல்போனை எடுத்துட்டு போவேன். அப்படியே மறந்து வந்திடுவேன். சிலநேரம் தேடி சலிச்சுப்போய் வீட்டுப்போன்ல இருந்து என் நம்பரை டயல் பண்ணி கண்டுபிடிப்பேன். அன்றும் அப்படித்தான் சாப்பிட்டுட்டு டைனிங் டேபிளில் போனை வைத்துவிட்டு பிரபுவுடன் போய் விட்டேனா. போகும் வழியில்தான் நினைவு வந்தது. பிரபுவை



மீட்டிங் ஹாலுக்கு அனுப்பிவிட்டு நான் மட்டும் வீட்டுக்கு வந்தேன். போனை எங்கு வைத்தேன் என தேட அவகாசமில்லாமல் வீட்டு போன் ரிஸீவரை எடுத்தேன். உன் அப்பாவிடம் நீ பேசிய அனைத்தும் என் காதில் விழுந்தது. முறைக்காதேம்மா. சத்தியமாய் ஒட்டுக் கேட்கவில்லை. ஏதோ தெய்வாதீனமாய் தானாகவே காதில்விழுந்தது. அந்த நொடியே என் மனம் உன்னை முழுதாய் ஏற்றுக் கொண்டது தாமரை. நீயும் ரொம்ப அப்செட்டா இருந்ததால நான் மேற்கொண்டு உன்னை நெருங்கல. நீ கூட பார். அப்பாவுக்காகத்தான் உங்களை மணந்து கொண்டேன் என்றுதானே சொல்கிறாய். அப்படியென்றால் என்னைப் பிடிக்கவில்லைதானே.''

''அய்யய்யோ! நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை. உங்களைக் கூட பிடிக்காமல் போகுமா.''

''ஹய். அப்போ என்னைப் பிடிச்சிருக்கா'' - உற்சாகமாய் கேட்டவனை நிமிர்ந்தும் பாராமல், ''ரொம்ப பிடிச்சிருக்கு. இப்படிச் சிரிச்ச முகத்தோட இருந்தா இன்னும் பிடிச்சிருக்கு'' - என்றாள் மெதுவாக.

''என்ன? என்ன சொன்னே. எனக்கு காதில விழல்ல. சத்தமாகச் சொல்'' - சத்தமாகக் கேட்டவனை செல்லமாய் முறைத்தாள்.

''ம்ஹூம். இப்போ சொல்லமாட்டேன். பாருங்க டிராபிக் ஜாஸ்தியா இருக்கு. வீட்ல போய் சொல்றேன். பேசாம ரோடைப் பார்த்து ஓட்டுங்க.''

''ப்ளீஸ் தாமரை. வீட்டுக்கு போய்ச்சேர இன்னும் இருபது நிமிஷம் ஆகும். அதுவரை எனக்கு பொறுமை கிடையாது. சொல்லிடேன் ப்ளீஸ். என் செல்லம் இல்ல'' - கொஞ்சினான்.

''நோ. நோ. சொன்னா சொன்னது தான். பேசக்கூடாது. வீட்ல போய் பேசிக்கலாம். வாயைத் திறக்காம ஓட்டுங்க'' - கண்களை உருட்டி தாமரை மிரட்ட பயந்த குழந்தையாய் வாயை மூடிக் கொண்டான் சூர்யா. வீட்டில் தங்களுக்கு என்ன காத்திருக்கிறது என்று அறியாமல் ஒருவரையொருவர் நினைத்தபடி இன்பமாய் வீட்டை நோக்கி பயணித்துக் கொண்டிருந்தனர்.

''இதோ வீடு வந்தாச்சு. சொல்லு. சொல்லு'' - அவசரப்படுத்தியவனை கையமர்த்தினாள். ''பொறுமை. பொறுமை. இப்பத்தான் கேட் வந்திருக்கு. உள்ளே போய் இறங்கி தாயம்மா கையால சூடா ஸ்ட்ராங்கா ஒரு கப் காபி சாப்பிட்டுட்டு நம்ம ரூம்லபோய் பொறுமையா சொல்றேன் சரியா?'' - கண்களில் குறும்பு மின்ன தாமரை கேட்க, ''போடி. போடி. ராட்சஸி. இரக்கமே இல்லாத ராட்சஸி.'' - உறுமிக் கொண்டே ஹாரனை அழுத்தினான் சூர்யா.

அய்யனார் ஓடி வந்து கேட்டை அகலமாய் திறந்து வைக்க கார் உள்ளே நுழைந்து போர்டிகோவில் போய் நின்றதும் சூர்யாவின் புருவங்கள் முடிச்சிட்டது. ''தாமரை அது யார். தாயம்மா இல்லையே. அது.. அது உன்னோட ஸாரி மாதிரி இல்ல?'' - கணவனின் சீரியஸான குரலில் கதவை திறக்க முயற்சித்த தாமரை குனிந்து கணவன் காட்டிய திசையைப் பார்த்தாள். தாமரையின் ஆரஞ்சு நிற காட்டன் ஸாரியில் கூந்தலைப் பரப்பிக் கொண்டு நின்ற அந்தப் பெண்ணும் புறாக் கூண்டை விட்டு நகர்ந்து போர்டிகோவை நோக்கி வர,

''ஆமாங்க இது என்னோட புடவைதான். துவைக்கப் போட்டிருந்தேன். இது யாருன்னு தெரியலியே'' - குழப்ப



மாய் சொல்லிக்கொண்டே கதவைத் திறந்து கீழே இறங்க சூர்யாவும் இறங்கி காரைப்பூட்டிவிட்டு நிமிரவும் அந்த உருவம் ஓடி வந்து, ''சூர்யா. எங்கே போனீங்க சூர்யா. நான் எப்படி துடித்து போய்விட்டேன் தெரியுமா. சூர்யா. ஐ லவ் யூ ஸோ மச் சூர்யா'' - என அவனை கட்டிக் கொள்ள தாமரையின் காலடியில் பூமி நழுவியது. உலகம் தலைகீழாய் சுற்றியது. தொண்டை உலர்ந்து போனது. இவள் எப்படி வந்தாள் ஏன் வந்தாள் எதற்காக என் சூர்யாவைக் கட்டிக் கொண்டிருக்கிறாள். நான்.. நான் என்ன செய்வேன்.

''அடடே! சின்னய்யா வந்தாச்சா. வாங்க சின்னம்மா. உங்களைத் தேடி விருந்தாளி வந்தாக. நான் தான் சாப்பிடவெச்சு உங்க துணிமணியக் கொடுத்துத் தங்க வெச்சேன். பிரபு ஐயாதான் கூட்டியாந்து விட்டாக. அங்கன சாவு காரியமெல்லாம் முடிஞ்சதாம்மா'' - தாயம்மா பேசியது கேட்டதே தவிர உருவம் பிடிபட வில்லை. எல்லாமே புகைமயமாய் தெரிய தாமரை கால்கள் தொய்ந்து மயங்கிச் சரிந்தாள். கடைசி வினாடியில் அதைக் கண்டு கொண்ட சூர்யா தன்னை இறுகக் கட்டிக் கொண்டிருந்த சுசித்ராவை உதறி தள்ளிவிட்டு ஒரே பாய்ச்சலில் தாமரையை ஏந்திக் கொண்டான். ''ஐயோ! என்னாச்சுய்யா? சின்னம்மா. சின்னம்மா'' - பதறிய தாயம்மாவிடம் ''தாயம்மா நீ போய் சூடா ஹார்லிக்ஸ் கலந்து எடுத்துட்டு மாடிக்கு வா. க்விக்'' - தந்தி வேகமாய் உத்தரவிட்டுவிட்டு தாமரையை கைகளில் ஏந்திக் கொண்டு சூர்யா உள்ளே செல்ல சுசித்ராவின் முகம் கறுத்தது. தான் ஒருத்தி இங்கு நிற்பதையே கண்டு கொள்ளாமல் ஏன் திரும்பியும் பாராமல் என்னவோ ஒ பூச்செண்டைப் பொத்தி எடுத்தாற்போல் தாமரை

அவன் அள்ளிக் கொண்டு சென்றதை ஏனோ அவள்
மனம் ரசிக்கவில்லை. 'எத்தனை தடை மீறி எத்தனை
நாடகம் ஆடி இங்கு வந்து சேர்ந்தோம். நிலைமை கை
மீறி போய் விட்டதா? இல்லை. இருக்காது. தனித்தனி
அறையில் இருக்கிறார்களே. இது ஒன்று போதாதா
சூர்யாவின் மனதில் இன்னும் நான்தான் இருக்கிறேன்.
நான் வந்துவிட்டேனடி தாமரை. இனிமேல் நீ மதுரைக்கு
போய் பழைய மாதிரி கம்பெனியில சேர்ந்து கணக்
கெழுத வேண்டியதுதான். உனக்கு இந்த அரண்மனை
கேட்கிறதா. அம்மாடி! எத்தனை பெரிய வீடு. என்ன
அழகு கார்டன். மை பேவரிட் ஸான்ட்ரோ கார். எவ்ளோ
லவ்பேர்ட்ஸ். எல்லாவற்றிக்கும் சிகரமாய் ஆணழகன்
பேரழகன் என் சூர்யா. இதில் ஒன்றைக் கூட உனக்குத்
தரமாட்டேன். தன் உடலை மூடியிருந்த புடவையை
வருடினாள். எத்தனை முறை கேட்டேன் இந்தப் புட
வையை. தந்தீர்களா? நீயும் உன் அப்பனும் சேர்ந்து
அட்வைஸ்தானே செய்தீர்கள். அடுத்தவர் பொருளுக்கு
ஆசைப்படக்கூடாது அது இது என்று ஒரு பக்க
நீளத்திற்கு நீட்டி முழக்கினாரே அப்பா. இப்போது பார்த்
தாயா. தானாகவே அது என்னிடம் வந்துவிட்டது பார்த்
தாயா. நான் எப்போதும் அதிர்ஷ்டக்காரிடி. நான் சுசித்ரா.
என்னை மீறி என் சூர்யாவை உன்னை நெருங்கவிடு
வேனா? விட்டுவிடுவேனா?' மனம் கொதிக்க வீட்டினுள்
நுழைந்தாள்.

சிலீரென தெளிக்கப்பட்ட நீரின் குளிர்ச்சியில் கண்
களைத் திறந்தாள் தாமரை. வெகு அருகில் கணவனின்
முகம் தெரிந்ததும் மருட்சியாய் எழுந்தாள். கணவனை
ஒண்டிக் கொண்டாள். ''எங்கே அவ? எங்க அவ வந்துட்
டாளே. ஏன் வந்தா. எனக்கு பயம்மா இருக்கு. உங்களைப்



பறிச்சிடுவாளே. என்னை விட்டுடுவீங்களா? என்னை
விட்டுட்டுப் போயிடுவீங்களா? நான் எங்கே போவேன்?
என்னை தவிக்க விட்டுட்டு போயிடமாட்டீங்களே?'' -
பரிதாபமாய் கெஞ்சியவளை மார்போடு அணைத்துக்
கொண்டான் சூர்யா.

''என்னடா! என்ன பேசற நீ? யார் வந்தா இப்போ.
யாரும் வரலை. அப்படியே யாரும் வந்தாலும் உன்னை
எப்படி விட்டுவிடுவேன். நீ என் மனைவி. என் உயிர்.
உயிரோடு இணைந்தவள். உன்னை யாருக்காகவும் எந்த
சூழ்நிலையிலும் விட்டுத்தர மாட்டேன். நான் உனக்கு
மட்டும்தான் சொந்தம் தாமரை. அதை இதோ உன்
கழுத்தில் தொங்கும் தாலி சொல்கிறதே. உனக்கு என்
மீது நம்பிக்கை இல்லையா?'' - தலையை அழுத்திக் கேட்
டான்.

கழுத்தில் மறைந்திருந்த தாலியை எடுத்து கண்ணில்
ஒற்றிக் கொண்டாள். ''ஆமா! இந்தத் தாலி நம்மை
பிரிக்காது. இது நம்மை இணைத்துக் கட்டிய கயிறு. நீங்க
நல்லவர். என்னை விட்டுப் போகமாட்டீங்க. ஆனா..
ஆனா.. அவ பிரிச்சிடுவாளே. அவ ஒன்னை நினைச்
சான்னா அதை அடையாம விடமாட்டாளே. கிடைக்
கலன்னா கொளுத்திடுவாளே. இன்னிக்கு கட்டியிருந்
தாளே புடவை என்னோடது. அது என் அப்பா போன
வருஷம் என்னோட பிறந்த நாளுக்காக வாங்கினது. அன்
னிக்கு என்ன நடந்தது தெரியுமா'' - உடல் அதிர்ந்தது.
இன்னும் மறக்கவில்லை அந்த நிகழ்ச்சி.

எப்போது புடவை வாங்கினாலும் இருவருக்கும்
சேர்த்தே வாங்குவது தான் மீனாட்சி சுந்தரத்தின் வழக்கம்.
அன்றும் அப்படித்தான். மகளது பிறந்தநாளை முன்

ணிட்டு இருவருக்குமே புடவை வாங்கி வந்திருந்தார். எப்போதும் போல் முதல் ஆளாய் சிகப்பு நிற வெல்வெட் புடவையை தனக்காக எடுத்துக் கொண்டாள் சுசித்ரா. மீதமிருந்த ஆரஞ்சு நிறப் புடவையை திருப்தியாக பெற்றுக் கொண்ட தாமரை தன் அறைக்குள் நுழைந்து உடனே கட்டிக் கொண்டு வந்து தன் தந்தையின் காலில் விழுந்து ஆசிபெற, சுசித்ரா உற்றுப் பார்த்தாள். தீங்கங்கு ஆரஞ்சு நிறத்தில் குட்டி குட்டி புட்டாக்கள் உடல் முழுவதும் சிதறியிருக்க முந்தானையில் பச்சைக்கிளிகள் இரண்டு செவ்வாயோடு கொஞ்சிக் கொண்டிருந்தன. கீழே வரிசையாய் குட்டி மணிகளோடு கூடிய குஞ்சலங்கள் ஊசலாட புடவை வெகு பாந்தமாய் தாமரைக்குப் பொருந்தியிருந்தது. உடனே உள்ளே நுழைந்து தான் எடுத்த புடவையை எடுத்து வந்து, ''தாமரை இதை நீ வெச்சிக்க. அந்தப் புடவையை எனக்குக் கொடு'' - என்றாள் உத்தரவாய்.

மகளுக்கு திருநீறுபூசிக் கொண்டிருந்தவர், ''எம்மா. இப்ப நீதானே அந்தப் புடவையை எடுத்துட்டுப் போனே. அதற்குள் என்ன மாற்றம். இப்படி அடுத்தவ கட்டின புடவையைக் கேட்கலாமா?'' என்றார்.

''பார்த்த உடனே அது நல்லா இருந்தது எடுத்தேன். இதை பிரிச்சுப் பார்க்கலியே. இதுல நிறைய டிஸைன் இருக்கு. எனக்கு வேணும். கழற்றிக் கொடு'' - குரலை உயர்த்தினாள்.

''அக்கா! ப்ளீஸ் இதை மட்டும் கேட்காதே. இது என் பர்த்டே ஸாரி. அப்பா ஆசையா வாங்கினது. எனக்கும் ரொம்ப பிடிச்சிருக்கு.'' - என்றவாறே கண்ணாடி முன் நின்று அழகு பார்த்தாள் தாமரை.



''எனக்கு வேணும்னு கேட்கிறேன். உனக்கு என்னடி ஸ்டைல் வேண்டிக்கிடக்கு. தரமுடியுமா முடியாதா'' - என்றவாறு தங்கையை நெருங்க பயந்து போன தாமரை தந்தையிடம் ஒடுங்கினாள். ''இதோ பாரு சுசி. உன் அதிகாரம் எல்லை மீறுது. இது தப்பு. அடுத்தவங்க பொருளுக்கு எப்பவுமே ஆசைப்படக் கூடாது. இது வரைக்கும் உன் விருப்பத்துக்கு வளைஞ்சு கொடுத்தது பெரிய தப்பா போச்சே. நீ என்ன இன்னும் சின்னப் பெண்ணா. மனசை எப்பவும் ஒரே நிலையில் வெச்சுக்கணும். அது இஷ்டத்துக்கு அலைபாய விடக்கூடாது. நாளைக்கு இதே மாதிரி வேற புடவை எடுத்துட்டு வர்றேன். இது தாமரைக்கு நல்லாயிருக்கு. அவளே வெச்சுக்கட்டும்.'' - என்றவாறு நகர்ந்து வெளியேற, ''எனக்கே இல்லைன்னப்புறம் நீ மட்டும் இதை கட்ட விடுவேனா'' - என்றவாறு பரபரவென தாமரையின் புடவையை உருவினாள். மகளின் கூக்குரல் கேட்டு ஓடிவந்த மீனாட்சி சுந்தரம் அதிர்ந்து போனார். புடவையை எரியும் விளக்கில் காட்டிக் கொண்டிருந்தாள் சுசித்ரா. தீப்பற்றி விடுமுன் ஓடி வந்து அவளது கையிலிருந்த புடவையைப் பற்றி இழுத்தார். வெறிபிடித்தாற்போல் கத்தியவளை பளாரென அறைந்தார்.

''எனக்கு தெரிந்து அக்காவை அப்பா அடித்தது அது தான் முதல் முறை. கடைசிமுறையும் கூட. புடவையைக் கொளுத்தும் அளவிற்கு போனதும் அப்பா பயந்து போனார். இயல்பாகவே ஏனோ என்னை அக்காவிற்கு பிடிக்காமல் போனது. அறிவும் அழகுமா உன் சின்னப் பொண்ணு ரதியாட்டம் இருக்கிறாளேன்னு யாராவது சொன்னால் போதும். குதறிவிடுவாள். அவளுக்கு பயந்து அப்பாவை ஒண்டியே வாழ்ந்துவிட்டேன். ஒரு புட

செய்தவள் உங்களை எப்படி வைக்கே அத்தனை என்னுடன் வாழ விடுவாள். என் கண்முன்னே உங்களை அப்படிக் கட்டிப்பிடித்தாளே. அப்படின்னா உங்க மேல அவ்ளோ ஆசை வெச்சிருக்கான்னு தானே அர்த்தம்'' - என்றாள் விசும்பலுடன். அவளது கண்ணீரைத் துடைத்து நிமிர்ந்து அமர வைத்தான்.

''இதோ பார் தாமரை. அவ ஆசைப்பட்டதும் தூக்கித் தர நான் ஒன்றும் புடவையோ பொம்மையோ இல்லை. அதை முதலில் புரிந்து கொள். முதலில் இப்படி பயந்து நடுங்குவதை நிறுத்தி விடு. பெண்கள் எப்பவுமே துணிச்சலாகவும் தன்னம்பிக்கையோடும் தெளிவான அறிவோடும் இருக்கணும். நீ என்ன தப்பு பண்ணின? எதற்காக பயப்படுற? தப்பு செய்துட்டு ஓடி வந்திருப்பது அவதான். எதுக்குடி இங்கே வந்தேன்னு கேட்டு அவ கன்னத்துல ஓர் அறை விட்டுப்பார். அரண்டு போயிடுவா. இது உன் வீடு தாமரை. இங்கு நீதான் மகாராணி. நான் கூட உனக்கு அடிமைதான். இங்கு நீதான் ராஜ்ஜியம் நடத்த வேண்டும். நீயே இப்படி பயந்தா எப்படி? முதல்ல மனசைத் தெம்பா வெச்சிக்க. நடுக்கம் இல்லாம கம்பீரமாப் பேசு. பார்வையில கூர்மை இருக்கணும். கலக்கம் இருக்கக்கூடாது. நான் உன் கணவன். உனக்கு சொந்தமானவன் என்று மனதிற்குள் நிறுத்திவை. உனக்கு சொந்தமான பொருளை எப்படி அடுத்தவள் களவாட முடியும். தைர்யமா இரு. முதல்ல அவ ஏன் வந்தான்னு கேட்போம். அப்புறம் அவளை எங்கே அனுப்பலாம்னு பார்ப்போம் சரியா? இந்த பிரபுதான் கூட்டிட்டு வந்தானாம். முதல்ல அவன்கிட்ட தான் பேசணும். நீ படுத்துக்கோ. நான் ஆபீஸ் போய் அவனைப் பார்த்திட்டு வந்திடுறேன்'' - என்றவாறு எழுந்தவனை இறுக பற்றிக் கொண்டாள் தாமரை.



''என்னை தனியா விட்டுட்டு போகாதீங்க. பிரபுவை இங்கே வரச் சொல்லுங்க. எனக்கு பயம்மா இருக்கு.''

''பார்த்தியா. இவ்ளோ நேரம் என்ன சொல்லிட்டு இருந்தேன்?''

''நான்... நாளையில இருந்து தைரியமா இருக்கேன். இன்னிக்கு மட்டும் என்னை விட்டு நகராதீங்க. ப்ளீஸ்'' - என்றாள் கெஞ்சுதலாய்.

''சின்னய்யா ஹார்லிக்ஸ் கொண்டாந்துருக்கேன்'' - தாயம்மா குரல் கேட்டதும் ''வா தாயம்மா'' - என்றான். தாமரை சற்று விலகி அமர்ந்து கொள்ள, ''என்னம்மா பயமுறுத்திட்டீங்களே. உடம்புக்கு எப்படிம்மா இருக்கு?'' - என்றாள் தாயம்மா.

''தாயம்மா! விருந்தாளி எங்கே?'' - என்றான் ரகசியமாய்.

''அது அப்பவே இருந்து குட்டிப் போட்ட பூனையா இந்த அறையையே சுத்தி சுத்தி வருதுய்யா'' - என்றாள் அவளும் ரகசியமாய்.

''சரி. நீ போ. கதவை சாத்திட்டு போ. பிரபு வந்தா மேலே வரச் சொல்'' - என்றதும் ''சரிங்கய்யா'' - என்றவாறு கதவைச் சாத்தி விட்டு வெளியேறினாள் தாயம்மா.

சூர்யா தன் செல்போனை உயிர்ப்பித்து ''பிரபு. ம்.. வீட்ல தான் இருக்கேன். உடனே வா'' - என கட் செய்தான்.

## 16

சூர்யாவும் பிரபுவும் சோபாவில் அமர்ந்திருக்க எதிர் இருக்கையில் அமர்ந்து நடந்தவைகளை கூட்டியும்

குறைத்தும் கொஞ்சம் அழுகையும் கலந்து கூறிக் கொண்டிருந்தாள் சுசித்ரா. மாடியில் தாமரை அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்க அவளது உறக்கம் கலைந்துவிடக் கூடாது என்று கீழே அமர்ந்து பேச வைத்திருந்தான். நெற்றியிலிருந்த காயத்தைக் காட்டினாள்.

"பார்த்தீங்களா சூர்யா. அந்த ரௌடி என்னை அடிச்சு மயக்கப்படுத்தித் தூக்கிட்டு போயிட்டான். அப்போ ஏற்பட்ட காயம்தான் இது?"

சூர்யா யோசனையாய் பிரபுவிடம் திரும்பி, "என் பிரபு மேரேஜ் ஹால்ல அவ்ளோ கூட்டத்தில் எப்படி ஒருத்தன் வந்து கல்யாணப் பொண்ணை அடிச்சுத் தூக்கிட்டு போனான். ஒருத்தர் கூடவா பார்த்திருக்க மாட்டாங்க?" - என்றான் கேள்வியாய்.

"சற்றே சிந்திக்க வேண்டிய விஷயம் ஸார்" - என்ற பிரபுவை அலட்சியமாய் பார்த்தாள் சுசித்ரா. "அவன் என்னை தூக்கிட்டுப் போனது, அர்த்த ராத்திரியில, எல்லாரும் அசந்து தூங்கினப்போ."

"அப்போ சரி" - இருவருமாய் ஒரே குரலில் ஒத்துக் கொள்ள நிம்மதியானாள்.

"பணம், நகை எல்லாம் கொடுத்த பிறகும் உங்க அட்ரஸ் கேட்டு மிரட்டினான். உங்களை பிளாக்மெயில் பண்ணி பணம் கறந்திடலாம்னு சொன்னான். நான்தான் என் உயிரே போனாலும் அவரோட அட்ரஸை தரமாட்டேன்னு போராடினேன்."

சூர்யாவின் பார்வை அவள் கழுத்தில் காதில் கைகளில் போடப்பட்டிடருந்த நகைகளை நோட்டமிட்டது. ஸோ, நிச்சயமாய் பணத்திற்காகவோ நகைக்கா



கவோ கடத்தப்படவில்லை. அப்படி கடத்துபவன் கழுத்தில் நீளமாய் தொங்கும் இந்த செயினையும் கைகளுக்கொன்றாய் குலுங்கும் நான்கு வளையல்களையும் மோதிரங்களையும் விட்டு வைப்பானா? வேறு ஏதோ நடந்திருக்கிறது. அவனது மன ஓட்டம் புரியாமல் அவள் பேசிக் கொண்டே இருந்தாள்.

"அப்புறம் ஒரு நாள் என்னை யாருக்கோ விக்கிறதுக்கு விலை பேசி ஆட்டோவில கூட்டிட்டுப் போனான். நானும் அமைதியாக உட்கார்ந்திட்டு போயிக் கொஞ்சம் ஜன நடமாட்டம் உள்ள இடத்தில வந்ததும் கத்தி கூச்சல் போட்டேன். பொது மக்கள் விடுவாங்களா? அவனை மொத்தி எடுத்திட்டாங்க. போலீசுக்கு போகணும்னாங்க. நான்தான் வேண்டாம்னு சொல்லிட்டேன். சொன்னா உங்க பேரும் வெளியே வரும். தொழிலதிபர் சூர்யபிரகாஷின் மனைவியைக் கடத்தியுள்ளான்னு பேப்பர்ல வந்தா நல்லாவா இருக்கும்? அதான் வேணாம்னு சொல்லிட்டேன். அப்புறம் அவங்களாப் பார்த்து ஆளுக்கு கொஞ்சம் பணம்போட்டு இரு நூறு ரூபா தந்தாங்க. பஸ் ஏறி எப்படியோ சென்னை வந்திட்டேன். உங்க அட்ரஸ் தெளிவா தெரியல்ல. உங்க பேரையும் ஆபீஸ் பேரையும் சொன்னேன். ஆட்டோக்காரன் நேரா ஆபீஸ்ல கொண்டு வந்து விட்டுட்டான். அப்புறம் பிரபுவை பார்த்து விசயத்தைச் சொன்னேன். அவர்தான் என்னை வீட்டுக்குக் கூட்டிட்டு வந்தார்" - என முடித்தாள்.

"நீ ஏன் பிரபு இங்கு கூட்டிட்டு வந்தே. எனக்கு ஒரு போன் பண்ணியிருக்கலாமே."

"போன் பண்ணினேன் ஸார். நாட் ரீச்சபிள். அது சின்ன கிராமம்ன்றதால டவர் கிடைக்கலன்னு நினைக்

கிறேன். சரி எப்படியும் ஒரே நாள்ல வந்திடுவீங்கன்னு நினைச்சேன். மூனு நாளாகும்னு நினைக்கல.''

''சரி. நாங்க என்ன விஷயமா எங்கே போனோம்னு உனக்கு தெரியாதா சுசித்ரா'' - என்றான் அவளைக் கூர்மையாய் பார்த்து.

''தெரியும்'' - என்றாள் விட்டேற்றியாய். ''தெரிந்துமா நீ வரவில்லை. அவர் உன்னைப் பெற்றவர். அவரைக் கடைசியாய் ஒருமுறை பார்க்க வேண்டும் என்று தோணவில்லையா உனக்கு?''

''ம்ஹூம். என்னை விட அவருக்கு இன்னொரு மனைவிதானே முக்கியமாய் போனது. பிறகேன் நான் அவரைப் பார்க்க வர வேண்டும். எனக்கு இந்த மாதிரி முட்டாள்தனமான சென்டிமெண்ட்டெல்லாம் பிடிக்காது. அப்படியே வந்தாலும் ஏதோ நானே ஓடிப்போயிட்ட மாதிரி ஆளாளுக்கு என்னை விமர்சனம் பண்ணியிருப்பாங்க. இதெல்லாம் எனக்குத் தேவையா? அதான் வரணும்னு தோணலை'' என்றாள் எங்கோ பார்த்தபடி.

''சரி. அவன் யாரு? பேர் தெரியுமா? இல்லை ஏதாவது அடையாளம் தெரிந்தால் சொல்லு. போலீஸ்ல ஒரு கம்ப்ளெய்ண்ட் கொடுத்தா போதும். அவன் எங்க இருந்தாலும் கண்டுபிடிச்சு உள்ளே தள்ளிடலாம்'' - என்றவனை அவசரமாய் மறுத்தாள்.

''அதெல்லாம் எதுக்கு சூர்யா? விட்டது சனின்னு அவனை விட்டுடலாம். இப்ப நம்ம கதைக்கு வாங்க. என்னைக் காணோம்னு தேடினீங்களா? ரொம்ப கஷ்டப்பட்டீங்களா? ஆமா தாமரை ஏன் இங்கே வந்தா. அவளுக்கு என்ன வேலை இங்கே? அவளை ஊருக்கு அனுப்பிடுங்க. அதான் நான் வந்திட்டேன்ல. நம்ம கல்



யாணத்தை எங்கே வெக்கலாம். சிம்பிளா ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கலாம். அப்புறம் கிராண்டா ஒரு ரிஸப்ஷன். என்ன சொல்றீங்க?'' - என்றவளை நோக்கி பிரபு நக்கலாக, ''ஏன் எங்க ஸார் நல்லா இருக்கிறது உங்களுக்குப் பிடிக்கலியா? அவர் கைக்கு காப்பு மாட்டிப் பார்க்க அப்படி என்ன ஆசை உங்களுக்கு?'' - என்றான்.

''என்ன சூர்யா? என்ன சொல்றார் இவர்?'' - எதுவும் புரியாதவள் போல் விழித்தாள். ''ஓ! உங்களுக்கு எதுவுமே புரியலியா? இதோ ஆளுயர ஜோடி போட்டோவை ஹாலில் மாட்டி வைத்திருக்கிறேனே இது உங்கள் கண்ணில் படவே இல்லையா?''

அப்போதுதான் அந்த போட்டோவை திரும்பி பார்த்தான் சூர்யா. அச்சு அசலாய் எதிரே முழு உருவமாய் நிற்பதுபோல் பெரிதாய் அற்புத அழகோடு இருந்தது அந்த போட்டோ. சரியான இடத்தில் நேர்த்தியாய் அதைப் பொருத்தியிருந்தான் பிரபு. ''ஹேய் பிரபு. நானே இப்பத்தான்டா பார்க்கிறேன். எப்படி இவ்ளோ சீக்கிரமா போட்டோ கிடைச்சது?''

''அந்த போட்டோகிராபரை யார் ஸார் தூங்கவிட்டது? ஸ்டில்லை கையில கொடுத்திட்டு மற்றவேலையைப் பார்ன்னு சொல்லிட்டேன். இன்னிக்கு மதியமே தந்துட்டான். கையோட ஒரு வண்டியப் பிடிச்சிட்டு வந்து பிட் பண்ணிட்டேன். போட்டோவில மேடத்தோட முகத்தைப் பாருங்க ஸார். ஏதாவது டிப்ரண்ட் தெரியுதா?'' - என்றான்.

பட்டுப்புடவையில் அட்டகாசமாய் ஜொலித்த தாமரையின் முகத்தைக் கூர்ந்து கவனித்தான். அந்தப் பட்டுக் கன்னத்தில் குட்டியாய் ஒரு மச்சம். ''இதெப்படி பிரபு

வந்தது. கிராபிக்ஸ்ல மச்சம் எல்லாம் செட் பண்றானா என்ன அவன்?''

''இல்லே ஸார். இது நம்ம தாயம்மாவோட கை வண்ணம். அவங்க சின்னம்மாவிற்கு கண் திருஷ்டி பட்டு விடுமாம். ஸ்டிக்கர் பொட்டை ஒட்டி வைத்திருக்கிறாள்'' - என்றான் சிரித்துக் கொண்டே.

''ம். நல்ல ஐடியா. அழகாய்த்தான் இருக்கிறது. இதற்காகவே தாயம்மாவிற்கு ஆயிரம் ரூபாய் சம்பளம் ஏற்றிவிடலாமே'' - சத்தமாய் சிரித்தான் சூர்யா. அதற்கு மேலும் பொறுமையை இழந்தவளாய் ''சூர்யா என்ன நடக்குது இங்கே.? எனக்கு ஒன்றும் புரியலை'' - வெடித்தாள் சுசித்ரா.

''எல்லாம் நன்றாகவே நல்லதாகவே நடந்தது. கல்யாணமும் முடிந்தது. கிராண்டா ரிஸப்ஷனும் முடிஞ்சது. இவங்க தான் எங்க மேம். இப்ப புரியுதா?'' - இதற்கும் பிரபுவே பதில் சொல்ல ஆத்திரமாய் சூர்யாவிடம் திரும்பினாள் சுசித்ரா.

''என்ன சூர்யா இது? எப்படி... எப்படி என்னை மறந்து நீங்கள் இன்னொருத்தியை மணக்கலாம். எப்படி முடிந்தது உங்களால். நான் உங்களைத்தானே நம்பி வந்தேன். எனக்கு என்ன வழி சொல்லப்போகிறீர்கள். சொல்லுங்கள்'' - சூர்யாவை நோக்கி வர, ''ப்ளீஸ் ஸிட்டவுன்'' என்ற ஒற்றைச் சொல்லில் அவளை அங்கேயே அமர வைத்தான். பிரபுவிடம் திரும்பி,

''பிரபு. இவங்களை நம்ம ஆபீஸ் கெஸ்ட் ரூம்ல இன்னிக்கு ஒரு நாள் ஸ்டே பண்ணச் சொல்லு. நாளைக்கு மார்னிங் மதுரைக்கு ப்ளைட்ல டிக்கெட் புக் பண்ணி அனுப்பிடு. மாமா இன்னிக்குக் கிளம்பியிருப்பார்.



அங்கு போய் அவர்கள் பேசிக்கொள்ளட்டும். ம். சுசித்ரா. தாமரை என் மனைவி. அவளை பத்திரமாய் பாதுகாத்துக் கொள்வது என் கடமை. நீ இங்கு இருந்தால் நிச்சயமாய் அது அவளை பாதிக்கும். அதிலும் திருமணமாகாத ஒரு பெண் தன் தகப்பன் வீட்டில் இருப்பதுதான் உத்தமம். அதோடு நாங்களும் புதிதாய் திருமணமானவர்கள். யாருடைய இடைஞ்சலையும் விரும்பவில்லை. புரியும் என்று நினைக்கிறேன்'' - என்றான்.

அவமானத்தாலும் கோபத்தாலும் முகம் கன்றிப் போனாள். எத்தனை அலட்சியம். இதைவிட ஒரு அவமானம் உண்டா? ஆனால் இவனிடம் கோபித்துக் கொண்டு எப்படி அப்பாவிடம் போக முடியும்? அப்பா முகத்தில் முழிக்க முடியுமா? இல்லை ஊரார் பேச்சைக் கேட்டு நடமாட முடியுமா? அதிலும் அந்த நந்தா சுலபமாய் கண்டு பிடித்து விடுவானே. அடிபட்ட நாகமாய் சீறிக் கொண்டிருப்பவன் தன்னைக் கண்டால் விடுவானா? கொன்றே விடுவான். இந்த இடத்தை விட பாதுகாப்பான இடம் வேறெது? என்ன ஆனாலும் சரி. இங்கிருந்து அசையக் கூடாது. மானம் மரியாதையைப் பார்த்தால் காரியம் ஆகுமா? பணிந்துதான் போகவேண்டும். முகமூடியை மாற்றித்தான் ஆக வேண்டும். இனி எவன் என்னை ஏற்றுக் கொள்வான். தாமரையின் இடத்தை காலி செய்தால்தான் அந்த இடத்தில் நான் அமர முடியும். முதலில் இந்த வீட்டில் ஓர் ஓரத்தில் இடம் பிடிப்போம். பிறகு மற்றதைப் பார்த்துக் கொள்ளலாம். மனதை ஒரு முகப்படுத்திக் கொண்டு செருமிக் கொண்டாள்.

''ஹேப்பி மேரீட் லைப் சூர்யா. இதை நான் எதிர் பார்க்கலை. அதான் கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டுட்

டேன். மத்தபடி தாமரை உங்களுக்கு வெகு பொருத்தம். என்னை விட எல்லா வகையிலும் அவ பெஸ்ட்தான். எப்படியோ என் தங்கை உங்களுக்கு மனைவியானதில் எனக்கு சந்தோஷம் தான். இது தெரியாம அவ கண் முன்னாலேயே உங்களை.. நான்.. ச்சே! அவ மனம் என்ன பாடு பட்டிருக்கும்? பெரிய போராட்டத்திற்குப் பிறகு உங்களைப் பார்த்தேனா. அதான் கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டுட்டேன். என்னை மன்னிச்சிடுங்க சூர்யா. தாமரைகிட்டயும் மன்னிப்பு கேட்க வேண்டும் நான். அவ என்னை மன்னிப்பாளா? அவள் காலில் விழவும் நான் தயாராக இருக்கிறேன்'' - நிதானமாய் பேச ஆடவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கெண்டனர்.

''என்ன சூர்யா. என்மீது நம்பிக்கை இல்லையா? நானும் ஒரு பெண்தான். இன்னொரு பெண்ணின் வாழ்வை அழிப்பேனா? அதுவும் தாமரை யார்? என் விரோதியா? என் தங்கை. அநாதையாய் நின்ற என்னை தன் மகளாய் எண்ணித் தூக்கி வளர்த்த என் அப்பாவின் மகள். அவள் மனதை நோகடிப்பேனா? நிச்சயம் மாட்டேன். ஆனால் சூர்யா தயவு செய்து என்னை மதுரைக்கு மட்டும் அனுப்பிவிடாதீர்கள். அங்குள்ளவர்கள் என்னைப் பேசியே கொன்றுவிடுவார்களே. எந்தத் தவறும் செய்யாத நான் எத்தனை இழிசொற்களைக் கேட்க முடியும். என்னால் முடியாது. ஒரு பத்துநாள் மட்டும் என்னை இந்த வீட்டில் ஒரு ஓரமாய் ஏன் கிச்சன் என்றாலும் பரவாயில்லை. ஓரத்தில் யாருக்கும் இடைஞ்சல் இல்லாமல் ஒதுங்கிக் கொள்கிறேன். என்னைப் பெற்றவரின் பதினாறாம் நாள் காரியத்திற்கு என்னை அழைத்துச் செல்லுங்கள். எனது மிச்ச நாள்களை நான் அங்கேயே கழித்துக் கொள்கிறேன். அப்பாவிற்கும் சுமையாக இருக்கமாட்



டேன். தாமரைக்கும் தடையாக இருக்கமாட்டேன். என்னை நம்புங்கள் சூர்யா. வேண்டுமானால் தாமரையின் கண்ணிலே படாமல் இருக்கிறேன். என்னை போகச் சொல்லிவிடாதீர்கள் சூர்யா'' கண்ணீர் பெருக்கெடுக்க கெஞ்சியவளை இன்னமும் நம்பாமல் பார்த்தான் சூர்யா.

''நீ தாராளமாக இங்கே இருக்கலாம் அக்கா. உன்னை நான் நம்புகிறேன். இது என் வீடு. நீ என் தமக்கை. நான் அனுமதிக்கிறேன். நீ உன் விருப்பம் போல் இங்கு இருக்கலாம்'' - என்ற கணீர் குரலில் மூவரும் திரும்ப அங்கே நிமிர்ந்த நேர்பார்வையுடனும் கண்களில் கூர்மையுடனும் மிடுக்காய் நின்றாள் தாமரை.

## 17

''தாமரை! என்னாச்சு உனக்கு ஏன் அப்படிச் சொன்னே? அவ இங்கே இருக்கிறது ஏனோ எனக்குப் பிடிக்கல்ல. அதுவும் மாடியில உன் அறையில தங்கவெச்சிருக்க. இது டூ மச். ரெண்டு சொட்டுக் கண்ணீர் விட்டா உடனே ஏமாந்திடுவியா? என்ன தாமரை நீ'' - படுக்கை அறையில் அலுத்துக் கொண்டான் சூர்யா. மென்மையாய்ச் சிரித்தாள்.

''அவளை நான் நம்பிட்டேன்னு உங்களுக்கு யார் சொன்னது?''

''தா...மரை. நீ என்ன சொல்ற? அவ மேல நம்பிக்கை இல்லாமலா இங்க தங்க வெச்சே. ஏன் எதுக்காக இந்த விஷப்பரிட்சை.''

''சில விஷயங்கள்ல விஷப்பரீட்சை தேவைதாண்ங்க. எத்தனை நாள் இவளுக்கு பயந்து நம்ம வாழ்க்கையை வீணாக்க முடியும்? அதனாலதான் துணிந்து இறங்கிட்டேன். நீங்கதானே எதற்கும் பயப்படக்கூடாது. தைர்யமா பேஸ்பண்ணனும்னு சொன்னீங்க. உங்க சொல்படிதான் நடக்கிறேன். பத்து நாள் இருக்கட்டும். நம்ம அன்யை ஒற்றுமையைப் பார்த்து அவளே மனம்மாறி திருமணத்திற்கு சம்மதிக்கலாம். இல்லே பெரியப்பா வீட்டுக்கு போனாலும் சரி. அங்கேயே அவளுக்கு நல்ல வாழ்க்கை அமையலாம். எதுவேணா நடக்கலாம். ஆனா ஒன்று மட்டும் நடக்காது. உங்களை மட்டும் என்னிடமிருந்து பிரிக்க முடியாது. அந்த எண்ணம் அவளுக்கு இருந்தால் தோல்விதான் மிஞ்சும். நான் தெளிவான நம்பிக்கையோட இருக்கேன். அதோட பிரச்சனைகளை கையாளுகிற துணிவும் இருக்கு.''

''ஹப்பாடா. எப்படியோ இந்த சங்கிலித் தொடர் பிரச்சனைகள் தீர்ந்தா போதும்மா. தீர்ந்தாத்தானே நாம ஹனிமூன் போக முடியும். ஏற்கனவே பிரபு ஸ்விசுக்கு பிளைட் புக் பண்ணட்டுமான்னு கேட்டு நச்சரிக்கிறான்'' என்றான் குறும்பு மின்ன.

''போகலாம். பெரியப்பா காரியம் முடிந்தபின் போகலாம். நானும் என் அத்தையின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டாமா?'' - என்றாள் முகம் சிவக்க. ''ஹுர்ரே'' - கத்தினான் சூர்யா.

''ஷ்ஷ்ஷ். சத்தம் போடாம சமர்த்தா படுத்துத் தூங்குங்க. நாலு நாளா ஆபீஸ் பக்கமே போகல்லல்ல. நாளைக்கு சீக்கிரமா எழுந்து கிளம்புங்க. படுங்க'' - என்றதும் ''உத்தரவு மகாராணி'' என்றவாறு படுத்தவன்



சற்று நேரத்தில் தூங்கியும் போனான். அவனையே பார்த்துக் கொண்டு அமர்ந்தவள் எழுந்து தனது ஷெல்பை திறந்தாள். அந்த போட்டோவை எடுத்தாள். பச்சை நிறத்தில் தோளில் கிளியோடு மீனாட்சி நின்றிருந்த கோலம் கண்ணையும் கருத்தையும் நிறைத்தது. கண்மூடி வேண்டிக் கொண்டாள். 'அம்மா நீ என்னுடன் இருக்கும் தைரியத்தில்தான் இந்த முடிவை எடுத்தேன். எனக்கோ என் கணவருக்கோ எந்த ஆபத்தும் நேர்ந்து விடாமல் நீதான் எங்களைக் காக்க வேண்டும்.' வெகு நேரமாய் வேண்டிக் கொண்டே இருந்தாள்.

நான்காம் நாள். ரிஸப்ஷன் ஆல்பத்தை பிரபு கொண்டு வர அனைவரும் கலகலப்பாய் பேசிக் கொண்டும் சிரித்துக் கொண்டும் பார்க்க, பற்றியெறியும் மனதோடு மேலாக சிரித்துக் கொண்டே அவர்களை நோட்டமிட்டாள் சுசித்ரா. சோபாவில் சூர்யாவும் தாமரையும் அமர்ந்திருக்க, அதற்குப் பின்னால் தாயம்மா நிற்க தாமரையின் இடப்பக்கம் ஸோபாவில் பிரபு அமர்ந்திருக்க, இதுதான் சமயம் என்று சிரித்தவாறே பேச்சை தொடங்கினாள் சுசித்ரா.

''ஏன் பிரபு. உங்களுக்கு வீடு வாசல்னு எதுவுமே கிடையாதா? எப்பவும் இங்க தானே இருக்கீங்க. அதான் கேட்டேன்'' பிரபுவின் முகம் சுருங்கியதைக் கண்டதும் நிம்மதியானாள்.

''அவரோட அம்மா அப்பா எல்லாம் கிராமத்துல இருக்காங்க. மாசத்தில ஒரு தரம் போயிட்டு வருவாரு.'' - என்றாள் தாயம்மா ஆல்பத்திலிருந்து பார்வையை விலக்காமலேயே.

''அப்போ சாப்பாடு. அதுவும் நம்ம வீட்லதானா?''

''சேச்சே. ரொம்ப வற்புறுத்தினாத்தான் சாப்பிடுவாரு. மத்தபடி காபி டீ கூட சாப்பிடமாட்டார். ரொம்ப நல்லவருக்கா. ரொம்ப சுறுசுறுப்பு. நேர்மையான உழைப்பு. நம்பிக்கையான நண்பன். இப்படி ஒருத்தர் இருக்கிறதாலதான் இவரு ஹாயா எங்க வேண்டுமானாலும் போயிட்டு வரமுடியுது. முன்னெல்லாம் லீவு நாள்ல கூட எங்கேயும் போக மாட்டாராம். நான்தான் வற்புறுத்தி கூப்பிடுவேன். அவரு வந்தா கலகலப்பா இருக்கும். நேரம் போவதே தெரியாது'' - தாமரை வெகுளியாய் பேச. ''அப்போ உனக்காகத்தான். ஐ மீன் நீ கூப்பிட்டுத்தான் வர்றாரு.'' ''உனக்காகத்தான்'' - என்ற அழுத்தம் பிரபுவை விசுக்கென நிமிர வைத்தது.

''ஆமா. நான்தான் கூப்பிட்டேன். பாவம் அவருக்கு இங்க யாரு இருக்கா?''

''ஓஹோ. உனக்கு பிரபு மேல இவ்வளவு இஷ்டமா. இல்லல்ல இவ்வளவு அன்பா'' - வேண்டுமென்றே குரலை உயர்த்தினாள் சுசித்ரா. சூர்யாவின் உடல் விறைப்பதை உணர முடிந்தது.

''ஆமாக்கா. என்னவோ எனக்கு பிரபு மேல ரொம்ப அன்புதான். அவரோட சுறுசுறுப்பு கலகலப்பு சிரிப்பு எல்லாத்தையும் பார்க்கும்போது எனக்கு அப்படியே நம்ம அப்பாவையே பார்க்கிற மாதிரி ஒரு சந்தோஷம். ஹூம். நமக்கு ஒரு அண்ணனோ தம்பியோ பொறந்திருந்தா அது பிரபு அண்ணா மாதிரிதான் வளர்ந்திருக்கும் இல்லைக்கா'' சொத்தென்று ஆகிவிட முகம் கோணிப்போய் விக்கினாள் சுசித்ரா.

''மேம்'' - நடுக்கமாய் வந்தது பிரபுவின் குரல். நிமிர்ந்தாள் தாமரை. அவனது கண்கள் கலங்கியிருந்தது.



உதடுகள் துடித்தது. ''என்ன பிரபு. உங்களை அண்ணான்னு கூப்பிடலாமில்ல. உங்களுக்கு ஆட்சேபணை இல்லியே'' - என்றாள் புன்னகையோடு.

''அது என் பாக்கியம் மேம். ரொம்ப சந்தோஷமா இருக்கு மேம். தேங்க்யூ மேம். தேங்க்யூ ஸோ மச் மேம்.''

''எதுக்கு இப்போ இத்தனை தேங்க்ஸ். இத்தனை மேம். பாருங்க இவரை'' - என்றபடி கணவனைப் பார்க்க அவனோ கண்களில் நேசம் பொங்க மனைவியை விழியெடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். தாமரையின் முகம் நாணத்தில் சிவக்க சுசித்ராவின் முகம் கோபத்தில் பொறாமையில் செந்தீயாய் மாறியது. அவை பிரபுவின் பார்வையில் தெளிவாக பட்டது. முதன் முறையாய் அவள்மீது வெறுப்பு எழுந்தது.

'இருடா. வார்த்தைக்கு வார்த்தை மேம் மேம்னு கொண்டாடுகிறாயே. உன்னை வைத்தே அவளைத் தூக்குகிறேன் பார். நான் ராணியாக வாழ வேண்டிய இடத்தில் இவள் வாழ்வதா? நான் வேண்டாத விருந்தாளியாக இருப்பதா? நீ இவளுக்கு ஜால்ராவா? என்னை பார்த்தால் உனக்கு இளப்பமாக இருக்கிறதோ. இரு. நான் யாரென்று காட்டுகிறேன்.' மனம் முழுக்க வன்மம் குடியேறியிருக்க சுசித்ராவின் முகம் கருநாகமாய் மாறியது.

''தாமரை இன்னிக்கு ஆபீஸ்ல நிறைய வேலையிருக்கு. நைட் நான் வர லேட்டாகும். எனக்காக வெயிட் பண்ணாம சாப்பிட்டுப் படுத்துக்கோ. எங்கிட்ட ஒரு சாவி இருக்கு. நீ கதவைப் பூட்டிக்கோ. ம். அப்புறம். மதியம் லஞ்சுக்கு வரமாட்டேன். ஆடிட்டிங் நடந்துட்டு இருக்கு. ஓ.கே.வா'' - என்றவாறு பரபரவென கிளம்பியவன் நின்று, ''தாமரை, ஜாக்கிரதையா இரு!

வரட்டுமா'' - என்றவாறு அவளது நெற்றியில் லேசாக முத்தமிட்டு கிளம்ப, முகம் மலர்ந்து அவனை வழியனுப்பி வைத்தாள். கதவை சாத்திவிட்டு திரும்புகையில் சமையலறையிலிருந்து அந்தச் சத்தம் கேட்டது. ஓங்கரிக்கும் சத்தம். அதைத் தொடர்ந்து வாமிட் பண்ணும் ஓசை. பதற்றமாய் ஓடிப்போக, தாயம்மா தான் வாந்தியெடுத்துக் கொண்டிருந்தாள். ''ஐயோ! தாயம்மா என்னாச்சு? என்ன பண்ணுது. மெதுவா... மெதுவா. தண்ணீர் தரவா'' - என்றவாறு செம்பில் நீர் கொண்டு தந்தாள்.

தாயம்மாள் களைப்பில் அப்படியே தரையில் சரிந்து உட்கார்ந்துவிட்டாள். ''என்னன்னே தெரியலம்மா. காலையில எழுந்தது முதலே ஒரே குமட்டல். தலையெல்லாம் சுத்துதும்மா. கண்ணெல்லாம் இருட்டிட்டு வருதும்மா.''

''ஐயோ இப்பத்தானே அவரு காரை எடுத்துட்டு போனாரு. இப்போ என்ன பண்றது. இரு தாயம்மா. நான் அய்யனாரை அனுப்பி டாக்ஸி பிடிச்சிட்டு வரச் சொல்றேன். ஹாஸ்பிடல் போயிடுவோம். நீ எழுந்துவந்து சோபாவில் படுத்துக்கோ'' - கைப் பற்றித் தூக்கிவிட்டாள்.

''வேண்டாங்கம்மா. சமைக்கணுமே'' - முனகினாள் தாயம்மா.

''உன் உடம்பை விட சாப்பாடு முக்கியமா? அதெல்லாம் அப்புறமா நான் பார்த்துக்கிறேன். நீ வா. இதில சாய்ந்து படுத்துக்கோ'' - என்றவாறே படுக்க வைத்தாள்.

''தாயம்மா உங்கிட்ட காபி கேட்டு எத்தனை நேரமாச்சு. ஹேய் என்ன நீ படுத்திட்டு இருக்கே. அதுவும் ஸோபாவில்...'' - காதில் செருகிய வாக்மென்



ஹெட்போனை கழற்றியவாறே கேட்டாள் சுசித்ரா.

''அக்கா. தாயம்மாவுக்கு உடம்பு சரியில்லை. வாமிட் பண்றா. மயக்கமா வருதாம். அதான் நான் அவளை ஹாஸ்பிடலுக்கு கூட்டிட்டு போறேன். நீ காபி கலந்துக்கோ. வீட்டைப் பார்த்துக்கோ'' - என்றவளை கையமர்த்தினாள் சுசித்ரா.

''தாயம்மா. இந்த மாசம் தலைக்கு ஊத்துனியா'' - என்றாள்.

''என்னக்கா. இதெல்லாம் போய் அவகிட்ட கேட்டுகிட்டு'' - கூச்சமாய் கடிந்தவளைப் பார்த்து உதட்டை சுளித்தாள்.

''உனக்கு என்னடி தெரியும். பல்லைக் காட்டிக் கொண்டு உம் புருஷனை வழியனுப்ப மட்டும்தான் தெரியும். ஏய் தாயம்மா நீ சொல்லு. கேட்டேனில்லே.''

சுசித்ராவின் குரலில் தாயம்மாவின் தலைசுற்றல் காணாமல் போய்விட சிலநொடி யோசித்து, ''இல்லிங்கம்மா. சின்னம்மா வந்தப்புறம் இன்னும் ஊத்திக்கலை'' - என்றாள் தயக்கமாய்.

''அதான். இதில ஒன்னும் பயப்பட வேண்டியதில்லை. நீ உண்டாகி இருக்கேன்னு நினைக்கிறேன். எதுக்கும் டாக்டர்கிட்ட போயிட்டு வா. தாமரை இவ இப்படி வாந்தி மயக்கம்னு இருந்தா நமக்கு யாரு சமைக்கிறது. வேற வேலைக்காரிதான் பார்க்கணுமோ.''

''வாயை மூடு. ஏன் நம்ம வீட்ல நாம சமைக்கலியா? என்ன புத்தி உனக்கு? இது எவ்வளவு நல்ல விசயம். இரண்டு வருஷம் கழிச்சு உண்டாகி இருக்கா. ஒரு தாயா அவ எப்படி பூரிப்படைவா. இந்த சமயத்தில் கூடவா உன் விஷக்கொடுக்கு நாக்கு இப்படிக் கொட்டும். போ

அந்தப் பக்கம். பசிச்சா இருக்கிறதை சாப்பிடு. இல்லன்னா சமைச்சு சாப்பிடு. நாங்க ஹாஸ்பிடலுக்கு போயிட்டு வர்றோம்'' - என்றவள் அதற்கு மேலும் அங்கே நில்லாமல் வெளியே வந்து அய்யனாரை அழைத்தாள். குருவிகளுக்கு கூட்டிற்குள் தினையை கொட்டிக் கொட்டிருந்த அய்யனார் அவசரமாய் கூட்டை மூடிவிட்டு ஓடிவர, ''அய்யனார் நீ உடனே போய் ஒரு கார் பிடிச்சிட்டு வா. நாம ஹாஸ்பிடலுக்கு போகணும்'' - என்றாள்.

''என்னங்கம்மா. உடம்பு எதுனா சரியில்லையா? ஐயாவ கூட்டிட்டு வரவா'' - என்றவனிடம் ''எனக்கு ஒன்னுமில்ல. தாயம்மாதான் தாயாகப் போற. வாழ்த்துக்கள் அய்யனார். நீ அப்பா ஆகப்போறே. ஹாஸ்பிடல் போய் கன்பர்ம் பண்ணினதும் உனக்கு ரெண்டு கிலோ ஸ்வீட் வாங்கித் தர்றேன். சீக்கிரமா போய்க் காரைக் கூப்பிட்டு வா'' - விரட்டினாள்.

சீறிப்பாயும் காளையின் வேகத்தோடு போனவன் அதே வேகத்தில் காரோடு வர, பீரோவைத் திறந்து கை நிறைய பணத்தை எடுத்து பர்ஸில் வைத்துக் கொண்டு கீழே வந்தாள். அதற்குள் மீண்டும் மீண்டும் வாந்தி எடுத்து மயக்கமானாள் தாயம்மா. அய்யனார் தன் மனைவியை பூப்போல் தூக்கிச் சென்று காரில் கிடத்த ஓடிச்சென்று காரில் ஏறினாள் தாமரை. கார் புறப்பட்டு வெளியேற எதிரே வந்தது பிரபுவின் கார்.

டிரைவரிடம் காரை நிறுத்தச் சொல்லி தலையை மட்டும் வெளியே நீட்டி, "என்ன பிரபுண்ணா. ஆடிட்டிங் இருக்கு. வீட்டுக்கு வரமாட்டோம்னு சொல்லிட்டு ஆபீஸுக்கு வந்திட்டாரே. இன்னும் வந்து சேரலையா'' என்றாள்.



காரை விட்டிறங்கிய பிரபு, ''ஸார் வந்தாச்சு மேம். முக்கியமான சீக்ரெட் பேப்பர்ஸ் எல்லாம் நேற்று கொண்டு வந்தார். கம்ப்யூட்டர்ல லோடு பண்ணிட்டு வீட்லயே வெச்சிட்டு வந்திட்டார். எடுத்து தந்தீங்கன்னா போயிடுவேன். ரொம்ப அர்ஜெண்ட். எங்காவது வெளியே போறீங்களா மேம்'' - என்றான்.

கைப்பையை திறந்து சாவியை எடுத்து நீட்டினாள். ''இந்தாங்க. பேப்பர்ஸ எடுத்துட்டு சாவியை அக்காகிட்ட கொடுத்துட்டு போங்க. தாயம்மாவுக்கு உடம்பு முடியல்ல. அவசரமா ஹாஸ்பிடலுக்கு போறோம். மத்ததெல்லாம் அப்புறம் பேசிக்கலாம். மாடி ரூம்ல தான் அந்த கம்ப்யூட்டர் டேபிள் இருந்தது பேப்பர்ஸ். நீங்க எடுத்துட்டு கிளம்புங்க. சரியா.''

''ஓ.கே. மேம்.'' - என்றவாறு சாவியை வாங்கிக் கொண்டு அவன் நகர கார் வேகமெடுத்தது.

ஹாலில் அமர்ந்து நகத்தைக் கடித்துத் துப்பிக் கொண்டிருந்தாள் சுசித்ரா. எத்தனை தைர்யம் இந்த ஊமைக் கோட்டானுக்கு. ம் என்றால் அழுதுவிடுபவள் தன்னைக் கண்டாலே பதுங்கி நடுங்குபவள் இன்று ஒரு வேலைக்காரிக்காக அவள் முன்னிலையிலே என்னை எத்தனை அலட்சியமாய் பேசிவிட்டாள். எங்கிருந்து வந்தது இந்தத் துணிச்சல்? இந்தப் பணமா? புதுப்பணக்காரியாகி விட்ட கர்வமா? என்னைக் கண்டால் வாய் உளறுபவள் எடுத்தெறிந்து பேசுகிறாளே. தாமரை முன்போலில்லை. அது நன்றாக தெரிந்தது. இனியும் பொறுமையாய் இருக்கக்கூடாது. இன்னும் இரண்டே நாள்தான் இருக்கிறது அப்பாவின் காரியத்திற்கு. அதற்குள் நம் வேலையை முடித்து இந்த வீட்டை, சூர்யாவின்

மனைவி என்ற உரிமையை. இந்த வீட்டின் எஜமானி என்ற பதவியை எனக்கே எனக்கென்று சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும். என்ன செய்யலாம்? அவளது குரூரபுத்தி வேலை செய்யும் போதுதான் பிரபு உள்ளே நுழைந்தான். வந்தவன் அவளைப் பார்த்தும் பாராதவன் போல் மாடியேறிப் போக,

''ஏய் மிஸ்டர். என்ன நீ பாட்டுக்கு திறந்த வீட்டுக் குள்ள எதுவோ நுழைஞ்ச மாதிரி போய்கிட்டு இருக்கே. நான் ஒருத்தி கல்லு மாதிரி உட்கார்ந்திருக்கிறது உன் கண்ல படலியா? தாமரை மட்டும்தான் தெரிவாளா உனக்கு'' - என்றவளைப் பார்த்து அலட்சியமாய்,

''வாசலுக்கு வெளியே தானே கட்டிப் போட்டிருப் பாங்க. இப்படி நடு வீட்ல உட்கார வெச்சிருப்பாங்கன்னு எனக்குத் தெரியாமப் போச்சே. என்ன இருந்தாலும் மேமுக்கு ரொம்ப தாராள மனசுதான்'' - என்றவாறே தடதடவென ஏறி மாடிக்குச் சென்றுவிட்டான்.

'அப்படியானால் தன்னை நாய் என்கிறானா. ராஸ்கல். கை நீட்டி சம்பளம் வாங்குகிற நாய். உனக்கு இவ்வளவு திமிரா? என்னிடமா உன் வேலையைக் காட்டுகிறாய். உன்னை என்ன கதிக்கு ஆளாக்குகிறேன் என்று பார்.' பொறுமலுடன் அமர்ந்திருந்தவளின் எதிரே இருந்த டீப்பாயின் மேல் சாவிக்கொத்தை வைத்தான். கைகளில் சில பேப்பர்கள் அடங்கிய பைல்.

''ச்சுச்சு. மேம் வர்ற வரைக்கும் இந்த சாவியை பத்திரமா காவல் காக்கணும் சரியா? உனக்கு பிஸ்கட் வாங்கி போடுறேன்'' - என்றவாறு பிரபு வெளியேற அவமானமும் ஆத்திரமுமாய் எழுந்தாள் சுசித்ரா. அதற் குள் பிரபுவின் கார் புறப்பட்டு விட ஆத்திரமாய்க் கதவை அறைந்து சாத்தினாள்.



'என்ன ஒரு ஆணவம். அலட்சியம்? அடக்குகிறேன் உன்னை.' நெருப்பாய் ஜொலித்த கண்களில் சாவிக் கொத்து பட சுசித்ராவின் முகம் விகாரமாய் பிரகாசித்தது. சடக்கென அதை கையில் எடுத்தாள். 'பாருடா. உன் முடிவை நீயே என் கையில் தந்துவிட்டு போயிருக் கிறாய். இது போதும் எனக்கு.' விடுவிடுவென மாடிக்கு ஏறி சூர்யாவின் அறைக்கதவைத் திறந்தாள்.

வாசலைத் தாண்ட முயன்ற பிரபுவின் கார் நின்றது. புருவம் சுருங்க திரும்பிப் பார்த்தான். யாரிவன். இதற்கு முன்னும் இதே இடத்தில் தானே நின்று கொண்டிருந் தான். வாசலின் எதிரில் நின்ற கொன்றை மரத்தின் கீழே நின்றிருந்தான் அவன். ஒல்லியாய் உயரமாய். தலை யிலும் கையிலும் பாண்டேஜ் கட்டோடு. கண்கள் மட்டும் அலைபாய்ந்து கொண்டிருக்க அசையாமல் நின்றிருந்தான். பிரபுவிற்குள் ஏதோ ஒன்று புரிபட காரை நேராய் அவனருகில் மிக அருகில் கொண்டு போய் நிறுத்த, அவன் பதறி விலகித் திடுக்கிட்டுப் போனான்.

## 18

''மெதுவா.. மெதுவா படுத்துக்கோ. பாரு தாயம்மா டாக்டரம்மா சொன்னதை எல்லாம் கேட்டேல்ல. உடம்பை ஸ்ட்ரெயின் பண்ணிக்காதே. உன் உடம்பு ரொம்ப பலகீனமா இருக்குதாம். இதோ பாரு. இந்த மருந்து மாத்திரையெல்லாம் கரெக்டா சாப்பிடணும் என்ன. உடம்பு தெம்பா ஆகிற வரை உன் அறையை விட்டு வெளியே வராதே. வீட்டு வேலைய நான்

பார்த்துக்கிறேன். என்ன. இந்த பழங்களை எல்லா
சாப்பிடு. நான் உனக்கு ஏதாவது சமைச்சு எடுத்திட்டு
வர்றேன்'' - என்றவாறு நகர்ந்தவளின் கைகளைப் பற்றிக்
கொண்டாள் தாயம்மா.

''வேணாம்மா. நானும் வர்றேன். நீங்க தனியா
கஷ்டப்பட வேண்டாம்.''

''மூச். அந்தப் பேச்சே இருக்கக் கூடாது. புள்ளை
பெத்து எடுக்கிற வரை நான் சொல்ற பேச்சைத்தான் கேட்
கணும். பேசாம படு. படுன்னேன். ம். சமர்த்தா படுத்
துக்கோ. அய்யனார் இந்த சாத்துக்குடியை பிழிஞ்சு
கொடு. அவ பக்கத்தில இருந்து பார்த்துக்கோ. தாயம்மா
உனக்கு வேளா வேளை சாப்பாடு நானே எடுத்திட்டு
வந்திடுறேன். நீ அங்க வந்து சிரமப்பட வேண்டாம்''
இந்த டானிக்கை சாப்பிட்ட உடனே குடிச்சிடு. இரும்புச்
சத்து டானிக். கரெக்ட்டா குடிச்சேன்னு வை குழந்தை
நல்லா கொழு கொழுன்னு பிறக்கும். உன் உடம்பும்
தெம்பா இருக்கும். வரட்டுமா.''

தாமரையின் கைகளை கண்களில் ஒற்றிக் கொண்
டாள் தாயம்மா. ''நான் ஆத்தா இல்லாத புள்ளை தாயி.
என் ஆத்தா இருந்தாக் கூட இப்படி என்னை கவனிச்
சுக்குமான்னு தெரியல்ல. நீங்க சாமிம்மா. நான் கும்பிடுற
சாமி'' - சூடாய் கண்ணீர் வழிந்தது. ''ஷ்! தாயம்மா
என்ன இது? வயிற்று பிள்ளைக்காரி அழக்கூடாது. என்
பெரிய வார்த்தையெல்லாம் பேசுற. நானும் உன்னை
மாதிரி சாதாரண மனுஷிதான். எனக்கு ஒன்னுன்னா நீ
துடிக்கிறியே. அதே மாதிரிதான் இதுவும். மனிதாபி
மானம், அன்பு, இரக்கம் இப்படி எதை வேணும்னாலும்
சொல்லலாம். எங்களுக்காக இத்தனை நாள் உழைச்



சியே. உனக்கு சாப்பாடு பண்ணிக் கொடுக்க எனக்கு
ஒரு சான்ஸ். அவ்வளவு தான். சும்மா மனசைக் கலங்க
விடாதே. நல்லா சாப்பிட்டு தூங்கி ரெஸ்ட் எடு. வாந்தி
வர்ற மாதிரி இருந்தா ரெண்டு திராட்சையை எடுத்து
வாயில போட்டு ஒதுக்கு. மட்டுப்படும். ஐயோ நேரமாச்சு.
இங்கே நின்னா வேலை நடக்குமா? சரி சரி. நான் அப்
புறமா வந்து உன்னைப் பார்க்கிறேன். பத்திரம். எழுந்
துக்காதே. படுத்துக்கோ'' - என்றவாறு வெளியேறிய
வளை நன்றியோடு பார்த்தாள் தாயம்மா.

''யோவ்! நமக்கு பொட்டப்புள்ள பொறந்தா இந்த
அம்மா பேரைத் தான் வெக்கணும்'' - என்றாள் கணவ
னிடம்.

''அய்ய. அப்புறம் புள்ளையை எப்படிக் கூப்பிடுறதாம்?''
- என அய்யனார் கேட்க, ''ம். இப்ப மாதிரியே சின்னம்
மான்னு கூப்பிட வேண்டியதுதான்'' - எனச் சொல்லி
சிரித்தாள்.

காலில் செருப்பை மாட்டிக் கொண்டிருந்த தாமரை
யின் காதிலும் விழ உள்ளுக்குள் சிரித்துக் கொண்டாள்.
வேகமாய் வீட்டினுள் நுழைந்து சமையலில் ஈடுபட
அக்கா கண்ணில் படவே இல்லை. காலையில் ரொம்
பவும் சூடாக கொடுத்துவிட்டோமோ. கொடுத்தது
சரிதான். யாரிடம் எப்போது எப்படிப் பேச வேண்டும்
என்று தெரிய வேண்டாம். சதா யாரையாவது கொட்டிக்
கொண்டே இருந்தால்.. இப்படிக் கொஞ்சம் தட்டித்தான்
வைக்க வேண்டும். இருக்கட்டும். பசித்தால் கீழே
இறங்கி வரட்டும். அவசரமாய் சமையலை முடித்து டிபன்
கேரியரில் சாப்பாட்டை அடைத்து பாலைக் காய்ச்சி
பிளாஸ்க்கில் ஊற்றி அவற்றை கூடையில் வைத்து

எடுத்துக் கொண்டு அவுட் ஹவுஸ் நோக்கிப் போவதை மாடியில் அமர்ந்து பார்த்துக் கொண்டுதான் இருந்தாள் சுசித்ரா. 'யார் வீட்டுப் பணத்தை யார் இறைப்பது? வேலைக்காரி உண்டானதற்கே இத்தனை ஆர்ப்பாட்டமா? வேலைக்காரிக்கே வேலைக்காரியாகி விட்டால் வேலைக்காரிக்கே விட்டால் அதற்குத்தான் லாயக்கு. உன்னைக் கொண்டு வாளோ. அதற்குத்தான் லாயக்கு. உன்னைக் கொண்டு போய் சிம்மாசனத்தில் ஏற்றி வைத்திருக்கிறாரே சூர்யா. ஒரே நாள். ஒரு நாள் கூட இல்லை. சில மணி நேரத்திற்குள் எத்தனை மாற்றம் நடந்துவிட்டது. அந்த பஞ்சப் பரதேசி மட்டும் என்னைக் கடத்தாமல் இருந்திருந்தால் இன்று நான் இந்த வீட்டின் எஜமானி. இப்போது வேண்டாத விருந்தாளியாய் ஒட்டிக் கொண்டிருக்கிறேன். எத்தனை அவமானம். ச்சே. தாமரை உன்னை என் கையால் கசக்கிப் பிழிந்தால் தானடி என் மனம் ஆறும்.' சுசித்ராவின் மனம் எரிமலையாய் குமுறியது.

''மூனு வருஷம் ஸார். என் கூட நல்லா சுத்தினா. நான்தினம் ஒரு காரை எடுத்துகிட்டு அவளை எங்கெல்லாம் கூட்டிட்டுப் போயிருக்கேன் தெரியுமா. ஆனா ஒரு நாள் கூட நான் வரம்பு மீறினதேயில்லை. என்னா அவளை உண்மையா நேசிச்சேன். எங்க ஏஜென்ஸீல வேலை பார்க்கிற ட்ரைவர்ங்க ரொம்ப டீஸண்ட்டா ட்ரெஸ் பண்ணிக்கனும்னு ரூல்ஸ். அதனால நான் நல்லா நீட்டா ட்ரெஸ் பண்ணிருப்பேன். அவ அதையும் நான் ஓட்டுற காரையும் பார்த்துட்டு நான் பெரிய பணக்காரன்னு நினைச்சிருக்கா. நான் ட்ரைவர்னு தெரிஞ்ச உடனே என்னைக் கழட்டி விட்டுட்டா. உங்களுக்குத் தெரியுமா ஸார். என் சம்பளப் பணம் முழுக்க அவளுக்குத் தான் செலவழிப்பேன். அவ ஆசைப்பட்டு ஏதாவது கேட்டுட்டா அன்னிக்கு முழுக்க நைட் ட்யூட்டி பார்த்து



பணம் சேர்த்து வாங்கிக் கொடுத்திடுவேன். மாசத்தில ஆயிரம் ரூபாய்க்கு நான் செல்போன் பில் கட்டுறேன் ஸார். அவளுக்கு மட்டும்தான் பேசுவேன். எனக்குன்னு தூரத்து உறவுல ஒரு மாமா மட்டும்தான் இருக்காரு. அவர்தான் எனக்கு வேலைவாங்கிக் கொடுத்தாரு. நான் அவருக்காக பத்து ரூபா கூடக் கொடுத்ததில்லை. அந்த அளவுக்கு இவமேல பைத்தியமா இருந்தேன் ஸார். அதனாலதான் தூக்கிட்டுப் போனேன். அது தப்பா ஸார்? சொல்லுங்க ஸார். அது தப்பா'' - கோபமும் கண்ணீருமாய் கேட்ட நந்தாவைப் பரிதாபமாய் பார்த்தான் சூர்யா. அவனுக்காய் மனம் வருந்தியது.

''நீ நேசித்தது தப்பில்லை நந்தா. நேர்ந்தெடுத்த நபர் தான் தப்பு. இதுவே வேறொரு பெண் என்றால் உன் காலடியில் கிடந்திருப்பாள். நீ கொஞ்சம் நிதானமாய் தேர்ந்தெடுத்திருக்க வேண்டும்.''

''நான் முட்டாள் ஸார். இல்லையென்றால் மூன்று வருடம் பழகியும் அவள் பத்தி தெரியாமல் ஏமாந்து இப்படி கண்டவர்களிடம் அடிவாங்கி நொந்திருக்கமாட்டேன். சுவற்றில் இடித்துக் கொண்டு இரத்தம் வழிய நின்ற உடன் ஏமாந்துவிட்டேன். அதனால்தான் அவசரமாய் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றேன். அவள் பெரிய கில்லாடி. திண்டுக்கல் பஸ்-ஸ்டாண்ட் பக்கம் வந்ததும் ஆட்டோவிலிருந்து குதித்துக் கீழே விழுந்து நான் அவளை கடத்திக் கொண்டு செல்வதாக நாடகமாடி தன் நெற்றிக் காயத்தை காட்டி அழுத உடன் எல்லோருமாய்ச் சேர்ந்து என்னை அடித்துத் துவைத்து விட்டார்கள். போதாதென்று போலீஸில் ஒப்படைக்க வேண்டும் என்றார்கள். அவர்களிடம் கெஞ்சிக் கூத்தாடி உயிருக்குத்

தப்பி ஓடி வந்தேன் ஸார். எப்படியும் அவள் மதுரைக்கு போக மாட்டாள் என்று தெரியும். சென்னையில் உங் அட்ரஸ்*ம் எனக்குத் தெரியாது. உங்க பெயரையும் கம்பெனியையும் சொல்லி இரண்டு நாட்களாய் இந்தக் காயத்தோடு அலைந்துதான் கண்டுபிடித்தேன்.''

''இத்தனை நல்லவனாய் இருக்கிறாயே நந்தா. நீ நேரிடையாக என்னிடம் முதலிலேயே பேசியிருந்தால் நானே உங்கள் திருமணத்தை நடத்தி வைத்திருப்பேனே'' - என்றான் சூர்யா இரக்கமாய்.

''அட போங்க ஸார். நம்ம விஷயத்தையெல்லாம் அவர்கிட்ட சொல்லிட்டேன். இனிமே அவன் எதுவும் பிரச்சனை பண்ணினா சொல்லு. அவனை ஏதாவது கேசுல வெளியே வராத அளவுக்கு உள்ளே தள்ளிடலாம்னு சூர்யா சொல்லிட்டாருன்னு எங்கிட்ட கதையளந்தாளே. நானும் அப்படியே நம்பிட்டேன். இப்பத்தான் தெரியுது. உங்களுக்கு எதுவுமே தெரியாதுன்னு. ஸார் அவ ஒரு விஷப்பாம்பு ஸார். அவளை நீங்க வீட்டுக்குள்ள விட்டது பெரிய தப்பு. அவளுக்கு தேவைன்னா உங்க மனைவியைக் கொல்லவும் தயங்கமாட்டா.''

திக்கென அதிர்ந்தான் சூர்யா. ''நீ.. நீ என்ன சொல்றே?''

''உண்மைதான் ஸார். அந்த சின்னப் பொண்ணு நல்ல பொண்ணு. ரோட்ல போனாக் கூட யாரையும் நிமிர்ந்து பார்க்காது. அந்தப் பொண்ணோட அழகையும் குணத்தையும் பார்த்து ஒரு பெரிய ஜமீன் குடும்பம் பெண் கேட்டு வந்தது. கல்யாணம் முடிவாகிற நேரம் என்னை வெச்சு அந்தப் பொண்ணோட பேரைக் கெடுத்து அந்தக் கல்யாணத்தையே கெடுத்திட்டா ஸார் அவ.



அந்தப் பெண்ணோட நல்ல மனசுக்கு நீங்க கிடைச்சிருக்கீங்க. அதுவும் தனக்குன்னு பார்த்த மாப்பிள்ளையை எப்படி ஸார் அவ தங்கைக்காக விட்டுக் கொடுப்பா. அவளை நம்பாதீங்க. ஏதோ ஒரு திட்டத்தோடதான் உங்க வீட்ல இருக்கிறா. உஷாரா இருங்க ஸார். அவ எந்த நேரத்திலயும் உங்க மனைவியை என்ன வேண்டுமானாலும் செய்திடுவா. சீக்கிரமா அவளை வெளியேத்திடுங்க. உங்க நல்லதிற்குத்தான் சொல்றேன்'' - என்றான் நந்தா தீவிரமாய்.

சூர்யாவின் உடல் சில்லிட்டது. ஏனோ மனம் பதறியது. தாயம்மாவிற்கு உடல் நலமில்லை என்றானே பிரபு. ஒருவேளை தாயம்மா ஹாஸ்பிடலில் இருந்தால் வீட்டில் தாமரை தனியாக இருப்பாளே. சுசித்ராவுடன் தாமரை... தனியாய்.. நினைப்பே பயத்தைத் தர உடனடியாய் செல்லை எடுத்து வீட்டு போனில் தொடர்பு கொள்ள அது நிசப்தமாய் இருந்தது. ''பிரபு..'' - சூர்யா போட்ட கூச்சலில் ஆடிட்டரோடு பேசிக் கொண்டிருந்த பிரபு பதறியடித்துக் கொண்டு வந்தான்.

''பிரபு. பேச நேரமில்லை. ஆடிட்டர் போன பிறகு நந்தாவைக் கூட்டிட்டு நம்ம வீட்டுக்கு வா. நான் உடனே போகணும். மத்ததை பிறகு பேசலாம். சீக்கிரம் வந்திடு'' - என்றவன் காற்றாய் பறந்தான்.

## 19

வீடு முழுக்க இருளாய் இருக்க தாமரை விக்கிப் போய் அமர்ந்திருந்தாள். மெழுகுவர்த்தியின் ஒளியில்

சுசித்ராவின் முகம் சமீபத்தில் பார்த்த பேய்ப் படத்தை நினைவுபடுத்த உடல் நடுங்க, வியர்வை ஆறாய் வழிந்தோடியது. பழம் நறுக்கும் கூரிய கத்தி தாமரையின் வெண்ணைக் கழுத்தைப் பதம் பார்க்கத் தயாராய் அழுத்திக் கொண்டிருந்தது.

''அக்கா. சொன்னா கேளு. என்னை விட்டுடு. அவர்.. அவர் இப்ப வந்திடுவார். அப்புறம் உன் கதி என்னாகும்னு... அம்மா.. ஆ..'' - வாயை இறுக பொத்தினாள் சுசித்ரா. தாமரையின் கழுத்தில் கத்தி பதிந்து இரத்தக் கோடு தோன்றி வழிய ஆரம்பித்தது. வலியில் துடித்தவளைப் பிடித்து டேபிளில் சாய்த்தாள்.

''உன் அவர் எப்ப வருவார்னு எனக்குத் தெரியும். காலையில சொன்னதை நானும் கேட்டேன். ஒழுங்காக நான் சொல்றதை எழுது. எழுதினா பொழைச்சுப் போன்னு விட்டுடுவேன். இல்லே கழுத்தை அறுத்தே கொன்னுடுவேன். உனக்கே தெரியும். நான் எதையும் செய்யத் தயங்கமாட்டேன்னு. ம்..எழுதுடி. நான் சொன்னதெல்லாம் சீக்கிரமாய் எழுதி முடி. அவர் வர்றதுக்குள்ள ஊரைப் பார்த்து ஓடிடு. நான் அவரை சமாளித்துக் கொள்வேன். எழுதிட்டியா.'' - தலையைப் பற்றி உலுக்கினாள்.

இரத்தம் கோடுகோடாய் வழிந்து புடவையை பிசுபிசுப்பாய் நனைத்தது. வலி உயிர்போயிற்று. ''அக்கா நான் வேண்டுமானால் எங்காவது போய் விடுகிறேன். பாவம் பிரபு. அவர்மேல் ஏன் பழி விழ வேண்டும். அவரை என் அண்ணனாக நினைக்கிறேன். இது பெரிய பாவம். வேண்டாம் உனக்கு நான்தான் தடையாக இருக்கிறேன். நான் போய் விடுகிறேன். என்னை விட்டுடு'' - கெஞ்சினாள் தாமரை.



''என்னை என்ன முட்டாள் என்று நினைத்தாயா? உலகின் எந்த மூலையில் நீ இருந்தாலும் சூர்யா உன்னைத் தேடிக் கண்டுபிடித்து விடுவார். அது எனக்குத் தெரியும். திடீரென்று காணாமல் போனால்தானே தேடுவார். லெட்டர் எழுதி வைத்துவிட்டு தன் வேலைக்காரனோடு ஓடிப்போனவளை, சும்மாவும் இல்லை பணம் நகையோடு ஓடிப்போனவளை எவனாவது தேடுவானா? அதற்காகத்தான் இந்த லெட்டர் எழுதுடி. ம். சீக்கிரம். என்ன முழிக்கிறாய். பணம், நகையோடு என்றேனே அதற்கா? அதையெல்லாம் காலையில் நீ உன் வேலைக்காரியோடு ஹாஸ்பிடல் போனப்போவே தயார் பண்ணிட்டேன். பணம், நகை மட்டுமில்ல லட்சக்கணக்கில செலவு பண்ணி வாங்கித் தந்தாரே புட்டுப்புடவை. அதையும் கூட எடுத்து வேற இடத்தில ஸேப்டி பண்ணிட்டேன். ஸோ. சூர்யாவுக்கு எந்த சந்தேகமும் வராது. ம் எழுது..'' மீண்டும் கத்தியை அழுத்த மூச்சுக்குத் திணறினாள் தாமரை.

'கடவுளே இந்த போன் அடித்துவிடாதா? தினமும் ஆபீஸ் போய் குறைந்தது நான்கு முறையாவது போன் பண்ணி விடுவாரே. இன்று ஏன் பண்ணவில்லை? சூர்யா.. போன் பண்ணுங்கள். சூர்யா உங்கள் தாமரை உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறேன் சூர்யா. ப்ளீஸ் போன் பண்ணுங்களேன்.' ஏக்கமாய் அந்த டெலிபோனையே பார்த்தாள்.

மீண்டும் மீண்டும் முயற்சித்து தோற்றுப் போனான் சூர்யா. சிறு சப்தமும் காட்டாமல் மௌனமாகவே இருந்தது டெலிபோன். ச்சே. காலையில் நன்றாக இருந்ததே. இப்போது என்ன ஆயிற்று. கோபமாய் செல்போனை

ஆப் பண்ணி சீட்டில் எறிந்தான். உடனே அது சிணுங்
கியது. ஆவலாய் எடுத்தான். ''ஸார்! நான் பிரபு. நானும்
நந்தாவும் வந்துட்டு இருக்கோம். நீங்க வீட்டுக்கு
போயாச்சா. மேடம் ஸேபா இருக்காங்கள்ல.''

சூர்யாவின் தொண்டை அடைத்தது. ''நான் ட்ரா
பிக்ல மாட்டிட்டு இருக்கேன் பிரபு. ஒரு கிலோமீட்டர்
தூரம் வண்டி நிக்குது. ரிவர்ஸ்லயும் எடுக்க முடியல்ல.
ஏதோ மினிஸ்டர் வர்றாராம். வீட்டு போனுக்கு ட்ரை
பண்ணா டெட்டா இருக்கு. எனக்கு உடம்பெல்லாம்
பதறுது, பிரபு. என் தாமரைக்கு.. என் தாமரைக்கு என்
னவோ ஆபத்து. எனக்கு நல்லாத் தெரியுது. அவளுக்கு
ஏதோ நடக்கப்போகுது. என்னால போய்க் காப்பாற்ற
முடியாது போலிருக்கே. நான் என்ன பண்ணப்
போறேன்'' - கண்கள் கசிய வார்த்தைகள் வெளிவர
மறுத்தன. மறுமுனையில் பிரபு பரபரப்பாய் பேசினான்.

''ஸார் யூ டோன்ட் ஒர்ரி. நீங்க ட்ராபிக் கிளியரானதும்
வாங்க. நாங்க இங்கே லெப்ட்ல ஒரு பாதை கட் பண்ணுது.
அதுல கட் பண்ணி கொஞ்சம் சுற்று வழிதான். இருந்
தாலும் சீக்கிரமாய் போயிடலாம். நீங்க டென்ஷனாகா
தீங்க. நான் இருக்கேன் ஸார். நான் பார்த்துக் கொள்
கிறேன். வைத்துவிடுகிறேன்'' - என்றவாறு கட் செய்
தான். ஆயாசமாய் சாய்ந்த வினாடி ட்ராபிக் ஊர்ந்து
முன்னேற ஆரம்பித்தது.

தாமரையின் முகத்தை இடித்தாள் சுசித்ரா. ''என்னடி
பார்வை. உன் ஆசைக்கணவர் போன் பண்ணுவாரான்னு
பார்க்கிறியா?'' - என்றவாறு டெலிபோன் வயரைத்
தூக்கிக் காட்டினாள். ''அதை எப்பவோ பிடுங்கிட்டேன்.
ஏன்டி கரணட் இருந்தா ஆபத்துன்னு மெயினையே ஆப்



பண்ணி வெச்சிருக்கேன். இதை கட் பண்ண மாட்
டேனா? இன்னும் நேரத்தை கடத்தாதே. அப்புறம் ஆனது
ஆகட்டும்னு கழுத்தை அறுத்துட்டு ஈஸியா அந்தப்
பழியை தூக்கி சூர்யா மேல போட்டுடுவேன். என் மேல
இருந்த ஆசையிலதான் எங்களுக்கு இடைஞ்சலா
இருந்த என் தங்கையைக் கொன்னுட்டார்ன்னு நானே
சாட்சி சொல்லுவேன். என்ன சொல்றே.'' - என்றாள்.

''இல்லே வேண்டாம். என்னைக் கட்டிக் கொண்டு
அவர் எந்த இன்பத்தையும் பெறவில்லை. என்னால
கொலைக்கார பட்டத்தை அவர் சுமக்க வேண்டாம்.
நானே நெறிதவறியவளாய் இருந்துவிட்டுப் போகிறேன்.
நான்.. நான் நீ சொன்னது போல் எழுதித் தருகிறேன்.
ஆனால்... அக்கா என்னை விரட்டின பிறகு அவர்
உன்னை ஏற்றுக் கொள்வாரா? எப்படி சாத்தியம்?''

''அதைப் பற்றி எல்லாம் நீ கவலைப்படத் தேவை
யில்லை. அது என் பொறுப்பு. என்னால் முடியும்.
எதுவும் செய்ய முடியும்'' - என்றாள் இறுமாப்பாய்.

'ஆம் உன்னால் முடியும். நீ எதற்கும் துணிந்தவள். அது
உன்னுடன் பிறந்த குணம். சிலர் நல்லவர்களாகப் பிறந்து
நல்லவர்களாகவே வாழ்ந்து நல்லவர்களாகவே மடி
கிறார்கள். சிலர் தீயவர்களாகவே வாழ்ந்து தன்னையும்
அழித்து பிறரையும் அழித்துக் கொண்டு தீயவர்களா
கவே மடிகிறார்கள். நிச்சயமாய் நீ திருந்தப்போவ
தில்லை. எங்களை வாழ விடப் போவதும் இல்லை.
இனி நான் இருந்து என்ன பயன்? இன்னொருவனுடன்
ஓடிப்போனவள் என்ற அவப்பெயரை விட தன் கணவ
னுடன் வாழ முடியாமல் தற்கொலை செய்ததாக இருந்து
விட்டுப் போகட்டுமே. எப்படியும் சாகப் போகிறேன். ஏன்

அவப்பெயரோடு சாக வேண்டும்.' துணிவைத் திரட்டிக் கொண்டு,

''சரிக்கா. நீ அவரோடு வாழ நான் குறுக்கே நிற்க மாட்டேன். இந்தக் கடிதத்தில் அக்காவின் வாழ்க்கையை பறித்து அதில் நான் வாழ விரும்பவில்லை. அதனால் என் வாழ்க்கையை முடித்துக் கொள்கிறேன். என் முடிவிற்கு யாரும் காரணமில்லன்னு எழுதி வெச்சிட்டு இந்த அறையிலயே தூக்குல தொங்கிடுறேன். ப்ளீஸ். இதை மட்டுமாவது அனுமதி. அவரை இழந்து என்னால் வாழவும் முடியாது'' - கண்ணீர் சொறிய மன்றாடினாள்.

''ஆஹா. கேடிடி நீ. அப்படி செத்துப்போனா உன் நினைவா இந்த வீட்டையே தாஜ்மகாலா மாத்திடுவாரு சூர்யா. நான் ஏமாளியா தெருவில நிக்கணுமா? இந்த மாதிரி ட்ராமா போடாம சொன்னதைச் செய். இப்படி லேட் பண்ணினா நான் லேட் பண்ணமாட்டேன். ஒன்லி டூ மினிட்ஸ். அப்புறம் என் கத்தி தன் கடமையைச் செய்யும்'' - நிஷ்டூரமாய் முழங்கினாள்.

வீட்டை நெருங்கும் போதே பிரபு உஷாரானான். அனைத்து வீடுகளிலும் விளக்கு எரிய சூர்யாவின் வீடு மட்டும் இருளோடிக் கிடந்தது. நான்கு வீடுகளுக்கு முன்பே காரை ஓரமாய் நிறுத்தினான். ''மிஸ்டர் நந்தா. ஸம்திங் ராங். வீடு இருட்டா இருக்கு. ஸோ. கார் இங்கேயே நிற்கட்டும். வாங்க நாம மெதுவா போலாம். உள்ளே என்ன சிச்சுவேஷன்னு தெரியாம நாம எதுவும் பண்ண முடியாது. பட் எதுவா இருந்தாலும் பேஸ் பண்ணி மேமை ஸேப்பா காப்பாத்தி ஆகணும். கமான். க்விக்'' - இறங்கி காரைப் பூட்டி விட்டு யாருக்கும் சந்தேகம் வராமல் ஆனால் வேகமாக நடந்து வீட்டை



அடைந்து சத்தமில்லாமல் கேட்டைத் திறந்து உள்ளே நுழைந்தனர்.

''ஸார்! அதோ பாருங்க. மாடியில லேசா வெளிச்சம் தெரியுது'' - ரகசியமாய் குரல் கொடுத்தான் நந்தா.

''யெஸ்! நந்தா! அது சாரோட ரூம். ஸோ. அங்கதான் அவங்க இருப்பாங்கன்னு நினைக்கிறேன். சார் வந்திட்டா ஈஸியா இருக்கும். ஏன்னா சாவி அவர்கிட்டதான் இருக்கும். ஒன்னு பண்ணுங்க. நான் ஏதாவது பேசி அவளை வெளிய வர ட்ரை பண்றேன். நீங்க இப்படியே போய் அதோ அந்த அவுட் ஹவுஸ்ல அய்யனார்னு வாட்ச்மேன் இருப்பான். அவனை அழைச்சிட்டு வாங்க. கோ'' - என்றவாறே விரட்டிவிட்டு கதவைத் தட்டினான். பதில் இல்லாமல் போகவே மனதில் பயம் தோன்ற மனதை திடப்படுத்திக் கொண்டு மீண்டும் பலமாய் தட்டினான்.

''ஹல்லோ வீட்ல யாராவது இருக்கீங்களா? ஸார். மேடம். யாராவது இருந்தா வாங்க. நாங்க ஈபில இருந்து வர்றோம் ஸார்.'' - சற்றே குரலை மாற்றி பேசினாலும் பிரபுவின் குரலை உடனே இனம் கண்டு கொண்டாள் தாமரை.

விசுக்கென நிமிர்ந்தாள். ''பிரபு. சீக்கிரமா வாங்க பிரபு. நான் மாடியில தான் இருக்கேன். என்னைக் காப்பாத்துங்...'' - அதற்கு மேல் பேச முடியாமல் திணறுவது கேட்டதும் ரௌத்ரமானான் பிரபு.

''ஏய் சுசித்ரா. மரியாதையா மேடத்தை விட்டுடு. ஒழுங்கா வந்து கதவைத் திற. இங்க நான் மட்டும் இல்ல. வீட்டை சுத்தி போலீஸ் நிக்குது. சாரோட உங்க அப்பாவும் நந்தாவும் வந்திருக்காங்க. உன் சாயம் வெளுத்துப்

போச்சு. மரியாதையா வெளிய வந்திடு. மேமோட உடம்புல ஒரு நகக்கீறல் இருந்தாலும் உன்னை உயிரோடு விட மாட்டேன். யூ இடியட். ஓபன் த டோர் ஐ ஸே!'' - கத்தினான்.

## 20

அரக்கியாய் கொந்தளித்தாள் சுசித்ரா. ''போச்சு. எல்லாம் போச்சு. என் வாழ்க்கையே போச்சு. பிச்சைக்கார நாயே. எத்தனை நேரமாய் கேட்டுக் கொண்டே இருந்தேன். என்ன அழுத்தம் உனக்கு. ஊமைக் கோட்டனாய் இருந்து கொண்டே சாதித்துவிட்டாயே. இனி யார் முகத்தில் விழிப்பேன்? புழுவை விடக் கேவலமாக அல்லவா என்னை பார்ப்பார்கள். சிறையில் கிடந்து அநாதையாய் வாழ்வதை விட உன்னைக் கொன்று விட்டு என்னை மாய்த்துக் கொள்கிறேன். ஒழிந்து போ'' - கத்தியை கழுத்தில் இறக்கினாள். தலையை அசைத்து நகர்த்திய போதும் கத்தி தன் கூர்மையை பறை சாற்றியது. வீறிட்டுக் கொண்டே தாமரை தரையில் சரிய கதவை திறந்து வெளியே வந்து கீழே எட்டிப் பார்த்தாள் சுசித்ரா. இருட்டில் எதுவும் புலப்படவில்லை.

''டேய் பிரபு நாயே. உன் மேம் உயிரை விட்டு விட்டாள். போ. நீயும் மேலே போ. நான் தோற்று அவளை வாழ விட்டுவிடுவேனா. சூர்யா என்னை ஏமாற்றினீர்களே. இப்போது அவள் உங்களை ஏமாற்றிவிட்டாள். பரலோகம் போய்விட்டாள்'' - எக்காளமிட்டாள்.

''ஏய்.. ஏய். என்ன சொல்கிறாய். ஐ'ல் கில் யூ'' - மேலே பார்த்து கத்தினான் பிரபு. அதற்குள் சூர்யாவின்



கார் பாய்ந்து வர. ''ஸார். கீ எடுங்க. இவ மேடத்தை என்னவோ பண்ணிட்டா. சீக்கிரமா கதவைத் திறங்க'' - அவசரப்படுத்தினான்.

''இதோ'' - பதட்டமாய் பான்ட்பாக்கெட்டிலிருந்த சாவியை எடுத்து நீட்ட பிரபு ஓட்டமாய் ஓடி கதவைத் திறந்தான். அதற்குள் நந்தாவும் அய்யனாரும் பின்னேயே தாயம்மாவும் ஓடி வர. ''அய்யனார் முதல்ல மெயினை ஆன் பண்ணு'' - என்றவாறே தடுமாறி வீட்டிற்குள் நுழைந்தான். நந்தா தனது செல்போனை உயிர்பித்து அந்த வெளிச்சத்தைக் காட்ட அய்யனார் மெயின் ஸ்வீட்சை தேடி ஆன் செய்த உடன் வீடு முழுவதும் வெளிச்சம் பரவியது. பிரபுவும் சூர்யாவும் படிகளில் தாவி ஏற பால்கனியில் ஏறி நின்று கீழே குதித்தாள் சுசித்ரா. ''ஏய் என்ன பண்றே நீ. ஏய்'' - நந்தா குரல் கொடுக்கையில் தலைகீழாய் இறங்கி வரிசையாய் சென்ற மின்சார கம்பியில் விழுந்தாள். தீப்பொறிகள் பல தெறிக்க சுசித்ராவின் அலறலில் தெரு முழுதும் கூடியது.

''ஓ. காட்'' - நெற்றியிலறைந்து கொண்டான் சூர்யா. ''இவள் என்ன பைத்தியமா? என்ன காரியம் செய்து விட்டாள். இடியட்..'' கீழே பார்த்து பதறியவனை பிரபுவின் வீறிடல் திடுக்கிட வைத்தது. ''ஸார். மேம். மேமைப் பாருங்க, ஸார்.''

''தாமரை. என்னாச்சு பிரபு. என்னோட தாமரைக்கு என்னாச்சு?'' - அறைக்குள் நுழைந்தவன் இடிந்து போனான். கழுத்து அறுபட்டு இரத்த வெள்ளத்தில் துடித்துக் கொண்டிருந்தாள். கண்கள் செருகிக் கொண்டிருந்தது. ''நோ. ந்நோ. தாமரை. என்னை விட்டுட்டுப் போயிடாதே. ப்ளீஸ். ப்ளீஸ். பிரபு காரை எடு.

தாமரையைக் காப்பாற்றியே ஆக வேண்டும். இல இல்லேன்னா நான் இல்லே. உடனே காரை எடு'' தாமரையைக் கையில் அள்ளிக் கொண்டே சொன்னான்.

காற்றை விட வேகமாய்க் கீழிறங்கிய பிரபு, சுசித்ராவை அள்ளிக் கொண்டு சூர்யாவின் காரில் நந்தா ஏறி சீறிப்பாய ஒரு கணமும் தாமதியாமல் வெளியேறி தனது காரை இயக்கி எடுத்துவர அதற்குள் கண்ணீரும் இரத்த சேறுமாய் இறங்கி வந்த சூர்யாவையும் தாமரையையும் ஏற்றிக் கொண்டு பறந்தது. தாயம்மா அழுது புலம்ப அய்யனார் செய்வது அறியாமல் தவித்துக் கொண்டிருக்க கூடியிருந்தவர் கேள்வி கேட்டு துளைக்க ஆரம்பித் தார்கள்.

''எவ்ளோ இரத்தம் பாரேன். அந்தப் பொண்ணு பொழைக்காதுப்பா.''

''இன்னொரு பொண்ணு யாருப்பா. அது ஏன் கரண்ட் வயர்ல தொங்கிச்சு. அது கூட பொழைக்கிறது கஷ்டம் தான்'' - ஆளாளுக்கு பேச தாயம்மா மயங்கிச் சரிந்தாள்.

## 21

முழுதாய் பத்து நாள் ஆன பிறகே கண்விழித்தாள் தாமரை. உயிரோடு இருக்கிறோமா இல்லை சொர்க்கத் தில் இருக்கிறோமா. கண்களுக்கு ஒன்றும் பிடிபட வில்லை. எல்லாம் வெள்ளையாய் மட்டுமே தெரிந்தது. கண்களை மூடி மூடித் திறந்தாள்.

நன்கு பழகிய முகம் ஆனால் கொஞ்சம் வித்தி யாசமாய் தெரிந்தது. கழுத்தைச் சுற்றிலும் போடப்பட்



டிருந்த பாண்டேஜ் தலையைத் திருப்ப முடியாமல் தடுத்தது. மெதுவாய் கையை அசைத்துப் பார்த்தாள். அந்த அசைவில் நிமிர்ந்து திரும்பினான் சூர்யா. களையிழந்த கண்களில் சூரிய ஒளியின் பிரகாசம்.

''தாமரை. ஆர் யூ ஓகே. உன்னால பார்க்க முடியுதா? ஓ. தேங்க் காட். மாமா. அம்மா எல்லோரும் வாங்க. தாமரை கண்ணைத் திறந்திட்டா'' - அவனது சந்தோஷக் கூச்ச லில் அனைவரும் ஓடிவர அழுகையும் இன்பமுமாய் விசாரிப்புக்கள் ஆறுதல்கள் அன்பு வார்த்தைகள்.

தாமரையின் கண்கள் கணவனைக் கண்டு கலங்கின. அவசரமாய் தடுத்தான். ''ம்ஹூம். நீ அழக்கூடாது. அதை என்னால தாங்க முடியாது. நடந்தவை எல்லாம் கெட்ட கனவா நினைச்சு மறந்திடும்மா. உனக்கு ஒன்னுமில்லை. எல்லாம் சரியாகிடுச்சு.''

''அக்கா..அவளுக்கு என்ன ஆச்சு?'' - அந்த நிலையிலும் சுசித்ராவைப் பற்றி கேட்டதும் விம்மினார் மீனாட்சி சுந்தரம். ''அம்மாடி! சாவோட விளிம்பு வரை போயிட்டு வந்தும் அவளை அக்கான்னு சொல்றி யேம்மா.''

''அக்கா எங்கேப்பா? அவளுக்கு ஒன்னும் ஆகலையே?''

''நீ ஸ்ட்ரெயின் பண்ணிக்காதே தாமரை. ஸ்டிச் போட்டிருக்கும்மா. நிறைய பேசக்கூடாதுன்னு சொல்லி யிருக்கார் டாக்டர். ப்ளீஸ் ரிலாக்ஸ்.''

''இல்ல. எனக்கு இப்பவே தெரிஞ்சாகணும். அக்கா எங்கே. நான் பார்க்கணும்'' - பிடிவாதமாய்க் கேட்டாள் தாமரை.

''இதோ வந்திட்டாளே. சுசி. தாமரையைப் பார். இப் பத்தான் நினைவு திரும்பியிருக்கா'' - நந்தா இயல்பாய்

அறிமுகம் செய்து கொள்ள கண்களை அகற்றிய ...
அதிர்ந்து போனாள். பதறி எழ முயன்றவளை ...
துக் கொண்டான் சூர்யா.

"... ... நோக்கம் ..."

"ஐயோ! அக்கா ஏன் இப்படி இருக்கா? என்னைக்கு..."
பதறியவாறே கேட்டாள். சுசித்ராவின் முகம் கருத்துப்
போயிருந்தது. தலைமுடிகள் கருகிப் போயிருந்தது.
முகத்தில் உடம்பில் ஆங்காங்கே தழும்புகள். வீல் சேரில்
மடங்கி அமர்ந்திருந்தாள். முகத்தில் எந்த உணர்ச்சியும்
காட்டாமல் இருந்தாலும் கண்கள் மட்டும் கலங்கி
யிருந்தது.

நந்தாதான் செருமிக் கொண்டு பேசினான். "உங்க
அக்கா ரொம்ப ஆக்டிவ்வா ... அதான் இப்போ உங்க
கிப்போய் உட்கார்ந்திருக்கா. இனிமே இப்போ அப்ப
இருப்பா. அவ நினைச்சாலும் எழுந்து ஆட முடியாது
என்னா கால் எலும்பு நொறுங்கிப்போச்சு. ...
யில விழுந்ததில தலை முடி போச்சு. முகமும் இப்படி..."

"கடவுளே" - நெஞ்சில் கை வைத்துக் கொண்டாள்
தாமரை.

"இருக்காரும்மா. கடவுள் இருக்காரு. அதுக்கு கண்
முன்னே இருக்கிற உங்க அக்காவே சாட்சி. உங்க
அக்காகிட்ட எவ்வளவோ எடுத்துச் சொன்னேன்.
கேட்கலை. இப்போ அவளுடைய பேச்சும் பறிபோயி
டுச்சு. இனிமே யாரையும் குறைசொல்லமாட்டா. யார்
குடியையும் கெடுக்கமாட்டா. ரொம்ப அமைதியா
இருப்பா. உனக்கு எதுவும் ஆகிட்டா ரொம்ப வேதனைப்
பட்டிருப்பேன். நல்லவேளையா பிழைத்துக் கொண்
டாய். அந்தக் கடவுளுக்கு நன்றி. நாங்க கிளம்பட்டுமா."



"... நீங்க பாருங்களே சொல்லலியே." - தாமரை
"நீங்க நீங்க ..." சிரித்தான் நந்தா. "... கேளுங்க
... சொல்லுவா."

"போதும் நந்தா. நீங்களும் நம்ம வீட்டுக்கு வந்
திடுங்க. சுசித்ராவுக்கு ஃபாரின்ல ட்ரீட்மெண்ட் எடுத்
துக்கலாம். உங்களுக்கு நம்ம ஆபீஸ்லயே வேலை ஏற்
பாடு பண்றேன். ப்ளீஸ். நாம எல்லாரும் ஒண்ணா இருப்
போமே." - என்றான் சூர்யா.

"வேண்டாம் ஸார். இதுவரை உங்க வாழ்க்கை சிதைய
இவ காரணமா இருந்தா. இனிமேலாவது நீங்க சந்
தோஷமா இருக்கணும். நிறைவா வாழ்வு வாழணும்.
எங்களைப் பற்றி கவலைப்படாதீங்க. நான் இவளை
விரும்பியவன். அந்த நேசம் இன்னும் என் மனதில்
இருக்கிறது. என் காலம் வரை நான் பார்த்துக் கொள்
வேன். உங்கள் மனைவிக்கு துணையான பின் சொல்
லுங்கள். உங்கள் அனைவரின் முன்னிலையிலும் இவள்
கழுத்தில் தாலியைக் கட்டி மனைவியாய் ஏற்றுக்
கொள்கிறேன்."

சுசித்ராவின் கண்களில் நீர் நிறைந்து பொட்டென்று
விழுந்தது. "இப்பவும் சொல்றேன் சுசி. நல்லவங்களுக்கு
எல்லாமே நல்லதாகவே நடக்கும். வாழுற வரைக்கும்
நல்லவங்களா வாழ்ந்திட்டுப் போவோமே. போலாமா"
- என்றதும் லேசாய் தலையசைத்தாள். அனைவரிடமும்
பொதுவாய் தலையசைத்து விடைபெற்று சக்கர நாற்
காலியைத் திருப்பிக் கொண்டு சென்றான்.

அனைவருமே பிரமித்துப் போயினர். இப்படியும் ஒரு
மனிதனா? அன்பு எதையும் தாங்கும். ஏந்திக் கொள்ளும்.
அதற்கு இந்த நந்தாதான் உதாரணமோ. அனைவரின்
கண்களிலும் துளி கண்ணீர்.

வைகை நதி பெருக்கெடுத்து ஓடியது. மீன்கள் கூட்டம் கூட்டமாய் ஆற்றோடு சேர்ந்து போனது. ஆங்காங்கே சுழித்துக் கொண்டும் நெளிந்தும் போன நதியை விழியெடுக்காமல் பார்த்து ரசித்துக் கொண்டிருந் தாள் தாமரை. கரையோரமாய் கையில் தூண்டில் வைத்துக் கொண்டு மீன்பிடித்துக் கொண்டிருந்த சிறுவர்களுடன் தானும் ஒரு சிறுவனாய் அமர்ந்து மீன் பிடிக்க முயற்சித்துக் கொண்டிருந்தான் சூர்யா. இரண்டு மணி நேரமாய் போராடியும் மீன் கிடைத்தபாடில்லை.

''ஏங்க நீங்க மீன் பிடிக்கிறதுக்குள்ள ராத்திரியாகிடும். கோவில்ல ஆறு மணிக்கு பூஜை. அப்பா நமக்காக காத்திட்டு இருப்பார். வாங்க போலாம்'' - குரல் கொடுத்தாள்.

''தாமரை. ப்ளீஸ். ப்ளீஸ். ஒரே ஒரு மீனாவது பிடிச் சிட்டு வந்திடுறேனே'' - குழந்தையாய் கொஞ்சியவனைப் பார்த்து சிரித்தாள்.

''அண்ணே! நீங்களும் இதையே தான் பத்து தரம் சொல்லிட்டு இருக்கீங்க. இந்தாங்கண்ணே. நாங்க பிடிச்ச மீன்ல ஒன்னை எடுத்துட்டு போய் அக்காகிட்ட கொடுத்து உங்க மானத்தைக் காப்பாத்துங்க'' - இடையில் கோவணம் மட்டுமே அணிந்திருந்த ஒரு சிறுவன் சொல்ல தாமரை குலுங்கி சிரித்தாள்.

அசட்டு சிரிப்புடன் எழுந்தான் சூர்யா. ''போங்கடா அடுத்த வருஷம் எம்புள்ளையோட வந்து மீன் பிடிச்சுக் கிறேன். அப்ப உங்களை கவனிச்சுக்கிறேன்'' - என்ற வாறு வந்து பம்மிய வயிற்றோடு முகம் முழுக்க கேலிச் சிரிப்போடு நின்ற மனைவியை அணைத்தபடியே நடந்தான்.



''தாமரை! ஐ லவ் மதுரை. பேசாம இங்கேயே இருந் துடலாமா.''

''ஹய் நிஜமாவா'' - பூரித்தாள் தாமரை. ''ம். ஷ்யூர். இங்கேயும் ஒரு பிராஞ்ச் ஓப்பன் பண்றோம். நாம இங்கே இருந்துக்கலாம். பிரபு சென்னையில பார்த்துக்கட்டும். எப்படி நம்ம ஐடியா. பிடிச்சிருக்கா.''

''பிடிச்சிருக்கு. ரொம்ப பிடிச்சிருக்கு. அதைச் சொன்ன உங்களை ரொம்பவே பிடிச்சிருக்கு.''

''ஹய்யோ! எனக்கு சரியா கேட்கல்ல. இன்னொரு வாட்டி சொல்லு. ப்ளீஸ். இன்னொரு வாட்டி சொல்லு'' - சூர்யா குறும்பாய் கேட்க நாணத்தோடு சிணுங்கிய வாறே முகத்தை மூடிக் கொண்டாள் தாமரை. அவளது சிணுங்கலுக்கு போட்டியாக வைகை நதியும் சிணுங்கிக் கொண்டே ஓடிற்று.